# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 16 Issue - 07

ஜூலை 2023 - துல்ஹஜ் - முஹர்ரம் 1444





## இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரங்களை எப்படி எதிர்கொள்வது?

## பொது சிவில் சட்டம் வருமா..?

Law Commission சொல்வதென்ன?

செங்கோல்.. ஒரு வேண்டுகோள்..!

அன்றே சொன்ன அண்ணா..!

வழிகாட்டும்...மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித்..!

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்.

(அல்குர்ஆன் : 57:10)


**‘இஸ்லாத்திற்கு எதிரான’ வெறுப்புப் பிரச்சாரங்களை எப்படி எதிர்கொள்வது?**
கவர் ஸ்டோரி | பக்கம் 04

**பொது சிவில் சட்டம் வருமா? சட்ட ஆணையம் சொல்வதென்ன?**
சிறப்பு கட்டுரை | பக்கம் 24

**அம்பலமாயின செங்கோல் பொய்கள் – செங்கோல் ஒரு வேண்டுகோள்! அன்றே சொன்ன அண்ணா..!** 16

**அப்பாவி ஆப்கான் மக்களை கொன்று குவித்த ராணுவ வீரன் போர் குற்றவாளி எனத் தீர்ப்பளித்த ஆஸ்திரேலிய நீதிமன்றம்** 30

**ஜூன் மாதத்தில் முஸ்லிம்கள் சந்தித்த பிரச்சனைகள்** 46

**வழிகாட்டும் மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித்** 42

**ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும் நூல் வெளியீட்டு – தாஃவா நிகழ்ச்சி** பக்கம் 54

- *சிலுவைப்போர் 2.0* 34
- *இந்திய கண்டத்தில் சூஃபிஸமும், அதன் சமூக தாக்கமும் - இந்தியாவில் முஸ்லிம்கள் - தொடர்* 44
- *மருத்துவம் - தொடர்* 50
- *பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்* 64



ஜூலை – 2023 / துல்ஹஜ் – முஹர்ரம் 1444

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Mass Communication


துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

தனி இதழ்: ரூ.40 | ஆண்டுச் சந்தா – உள் நாடு: ரூ.480 / வெளி நாடு: ரூ.5000

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.


All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only




# இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரங்களை எப்படி எதிர்கொள்வது?

தி கேரளா ஸ்டோரி, புர்கா, ஃபர்ஹானா என்றெல்லாம் படங்களெல்லாம் வந்தது. அதற்கு எதிர்வினையாற்ற வேண்டும் என்று சொல்லி பல வழக்குகளையும், நமது வழக்கறிஞர்கள் தொடுத்தார்கள். அதை உச்சநீதிமன்றம் தட்டிக்கழித்துவிட்டது. கேரளா உயர்நீதிமன்றமும் தட்டிக் கழித்துவிட்டது. அதேபாணியில் மெட்ராஸ் உயர் நீதிமன்றமும் தட்டிக் கழித்துவிட்டது. இப்பொழுது நாம் அந்த சலசலப்புகள் எல்லாம் அடங்கி வரக்கூடிய நேரத்தில் கவனிக்க வேண்டிய பல விஷயங்கள் உள்ளன.

இஸ்லாமோஃபோபியா என்று சொல்லக்கூடிய இஸ்லாத்தின் மீதான வெறுப்பு இது இயல்பானதுதான். ஏனென்றால், அல்லாஹ்வே இதனை கூறி இருக்கிறான், “நீங்கள் ஈமான் கொண்டால் உங்களை நோக்கி அனைத்து கஷ்டங்களும் வரும்”, நீங்கள் ஈமான் கொண்டுவிட்டால் சொர்க்கம் புகுந்து விடலாம், சோதிக்கப்படாமல் சொர்க்கம் சென்றுவிடலாம் என்று நினைக்கிறீர்களா? என்று அல்லாஹ் கேட்கிறான். இதை கவனிக்கும் போது சோதனைகள் வரும், சோதனைகள் பலவிதத்திலும் வரும் என்று புரிகின்றது.

நபி(ஸல்) போன்று சோதனைகளை சந்தித்தவர் எவருமில்லை. எனவே சோதனைகள்

வரும் என்பது திண்ணமானது. ஆகவே அதனை எப்படி எதிர்கொள்வது என்ற வழி முறைகளையும் இஸ்லாம் நமக்குத் தந்திருக்கின்றது.

இந்த சோதனைகளை நாம் இன்றைய காலகட்டத்திலிருந்து மட்டும் பார்க்காமல் இதற்கு முன் உள்ள காலக்கட்டங்களிலும் எப்படி இருந்துள்ளது என்பதையும் பார்க்க வேண்டும்..

எங்களுடைய ஆரம்பகாலத்து சிமி நாட்களில் சத்தாத் என்ற பெண் பேராசிரியர் நிறைய நிகழ்ச்சிகளை மெட்ராஸ்-இல் நடத்தினார்கள். நாங்கள் அந்நேரம் இளம்பருவத்தினர். அப்பொழுது சில சகோதரர்கள் என்னிடம், அந்த பேராசிரியர் செய்யது குதுப் அவர்களையும் அவர்களின் இலக்கியங்களையும் விமர்சிக்கிறார்கள் அதற்கு பதில் சொல்ல ஆளே இல்லை எனக் கூறினார்கள்.

அந்நேரத்தில் அந்தப் பெண் ஹல்ஷா பல்கலைகழகத்தின் அரபு துறை பேராசிரியர். அப்படி அந்தப் பேராசிரியர் என்னதான் பேசுகிறார் என்பதை கேட்க நாங்களும் சென்றோம்.


அந்த காலகட்டம் இஸ்லாமோஃபோபியா இவ்வளவு தூரம் வளருவதற்கு முந்தைய காலக்கட்டம். இப்பொழுது இருக்கின்ற சலசலப்புகள் போல் அப்போதில்லை..

அங்கு அந்த பேராசிரியர் நிறைய பேசுகிறார். அந்த சமயம் நான் செய்யது குதுப் அவர்களின் இஸ்லாமிய எழுச்சியின் மைல்கற்கள் என்ற புதக்கத்தை தமிழில் கொண்டுவர வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த காலகட்டம் ஆனால் அச்சமயம் நான் அதனைக் வெளிக்கொண்டு வரவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் அந்த புதக்கத்தை படித்து அதன் கருத்துக்களை அதிகமாகவே நிறைய கட்டுரைகளின் வழி தந்துள்ளேன்.

நாங்கள் அவர்களின் விமர்சனங்களை கேட்க சென்றபோது, அவரது கேள்விகளுக்கு நானும், அப்பொழுது சிமியில் இருந்த சகோதரர்களும் பதில் கூறினோம்.

இறுதியில் அந்த பேராசிரியர் என்னிடம் தனியே பேச வேண்டும் என்று கூறினார். தனியே பேச வாய்ப்பு கிடைத்தால் நிறைய விஷயங்களை நாமும் அவருக்கு எடுத்துக் கூறலாம் என முடிவுசெய்து, அவரை சந்திக்கும்பொழுது தான் தெரிந்தது அவர் அரபு இலக்கியத்திலும், இஸ்லாமிய இலக்கியங்கள் எவ்வாறு வளர்ந்து கொண்டிருக்கின்றது என்பதிலும் ஆழமான அறிவினைக் கொண்டிருக்கிறார் என்று.

அப்பொழுது அவர் கூறினார், எனக்கு மிகவும் ஆச்சர்யமாக இருக்கின்றது! என்னுடைய முதல் சுற்றில், இந்தியாவில் யாருக்கும் இந்த புத்தகத்தை பற்றித் தெரிந்திருக்கவில்லை. ஆனால் இப்பொழுது இந்தியாவின் கடைசி பகுதியான தமிழ்நாட்டில் ஒரு கூட்ட மக்கள் அந்த புத்தகத்தை வைத்துக்கொண்டு என்னுடன் விவாதத்திற்கு வருவது, அந்த புத்தகம் இப்படி அனைத்து பகுதிகளையும் சென்றிருக்கின்றது, அந்த புத்தகத்தை தடை செய்தவுடன் அது அவ்வளவுதான் என எண்ணினோம் ஆனால் இது இவ்வளவு தூரம் சென்றடைந்துள்ளது என்பதைக் குறித்து அவருக்கு ஒரே ஆச்சரியம்!


நூலைப்பெற

போன்:
7401213394
7358278146
8148129887

விலை
ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து

அதற்கு நான் கூறினேன் இந்த புத்தகத்தை நான் தமிழில் மொழிபெயர்க்கப் போகிறேன் என்று! பார்த்தீர்களா, இந்தியாவில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட 16 மொழிகளில் ஒன்று தமிழ். அதில் மொழிபெயர்க்கப் போகிறேன் என்கிறார். (அந்த சமயத்தில் 16 அங்கீகரிக்கப்பட்ட மொழிகள், தற்பொழுது நமது அரசியலமைப்பு சட்டம் அதிகமான மொழிகளை அங்கீகரித்துள்ளது.) புத்தகம் தடை செய்யப்பட்டிருந்தாலும், அந்த தடை நிற்கவில்லை, உலகின் கடைக்கோடி வரை பரவியிருக்கிறது என்பதே எனது அறிக்கையாக இருக்கும் என்று கூறினார்.



இதிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், அவர்கள் இஸ்லாமிய இலக்கியங்களை தொடர்ந்து வாசிக்கின்றார்கள் என்று தெரிகிறது.


செய்யது குதுப் அவர்கள் ஒரு புத்தகத்தை எழுதினார். அவரை ஷஹீத் ஆக்கினார்கள். அவரை தூக்கில் இட்டார்கள். அந்த புத்தகத்தை தடை செய்தார்கள் அத்தோடு முடிந்தது என்று விடாமல், அவர்கள் தொடர்ந்து கவனித்து வருகிறார்கள். இந்த புத்தகம் எவ்வளவு தூரம் பரவி இருக்கிறது என்று. ஏனெனில் இந்த பேராசிரியர் ஆய்வு கிட்டத்தட்ட செய்யது குதுப் அவர்கள் ஷஹீது ஆக்கப்பட்டு 20,25 வருடங்களுக்கு பின் நடந்த சம்பவம்.

முஸ்லிம்களாகிய நாம் எந்த கொள்கைக்கு எதிராகவும் திட்டம் போட்டு, அதில் உள்ள இலக்கியங்கள் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன என பார்த்து, அவைகளை எப்படி தடை செய்வது என்றெல்லாம் நாம் பார்த்ததில்லை. அப்போது இருந்த ஊடகங்களில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியது புத்தகங்கள் தான். இப்பொழுது இருக்கக்கூடிய சமூக வலைதள ஊடகங்களை போல் அல்ல. இந்த இலக்கியங்களின் பரவலை அவர்கள் உற்று கவனிக்கிறார்கள்.

நாம் இதே வேளையில் இஸ்லாமிய எழுச்சியின் மைல்கற்கள் புத்தகத்தை இங்கே கொண்டு வந்து விட்டோம். அதுவும் பத்து பதினைந்து பதிப்புகளை தாண்டி சென்று கொண்டிருக்கிறது. இப்பொழுதுதான் அவர்கள் இதை ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.


நான் என்னுடைய பேச்சுக்களில் ஜான் எக்ஸ்போசிட்டோ என்றொருவரைப் பற்றி அடிக்கடி கூறியிருப்பேன். அவருடைய வேலை என்னவென்று சொன்னால் அவர்தான் முதலில் The Voices of Resurgent Islam என்ற புத்தகத்தை கொண்டு வந்தார்.

வரலாற்றில் 1970லிருந்து 1990வரைக்கும் இஸ்லாத்தின் எழுச்சி காலம் என்றொரு காலம். ஏனெனில் அப்பொழுதுதான் ஈரானில் "Islamic Revolution" வருகிறது. சோவியத் ரஷ்யா ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் கைகளிலே அடி வாங்குகிறது.



*1991ல் நமக்கு அப்பொழுது இருந்த ஒரே தொலைக்காட்சி சேனல் தூர்தர்ஷன் தான். அதை நடத்திக் கொண்டிருந்தது பிரன்ராய். அந்த தூர்தர்ஷனில் உலக செய்திகள் என்று வெள்ளிக்கிழமை மாலை போடுவார்கள். அந்த உலக செய்திகளை எப்படி ஆரம்பித்தார்கள் என்றால், "இந்த 1991க்கு பிறகான காலகட்டங்கள் எப்படி தொடங்குகின்றது என்று சொன்னால் அது இஸ்லாத்தின் காலகட்டமாக தொடங்குகின்றது" என்று சொன்னார்கள்.*

*அதே நேரத்தில் தான் சாமுவேல் பி ஹண்டிங்டனுடைய* clashes of civilization and The Remaking of World Order - *அமெரிக்காவினுடைய வெளியுறவுத்துறை ஜர்னலாக வெளியில் சுற்றுகிறது. அதில் தான் பின்னாட்களில் நடக்கவிருக்கும் போர் திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. இஸ்லாத்தின் மீது எப்படி போர் தொடுக்க போகிறோம்? சிரியாவை எப்படி ஆட்கொள்ள போகிறோம்? போன்ற போர் திட்டங்கள் வருகின்றன. அதே நேரத்தில் 1997ல் இது புத்தகமாக வெளி வருகிறது. நாம் இவை அனைத்தையும் கவனித்துக் கொண்டுதான் வருகிறோம்.*




*அதற்குப் பிறகு 2001ல் அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் தகர்க்கப்படுகின்றன ஏனெனில் அதுவரைக்கும் இஸ்லாம் என்பது தீவிரவாதம் என்று சொல்லி எந்த பயனும் இல்லை. ஒரு தீவிரவாத செயலை நடத்திக் காட்டினால் தான் இஸ்லாத்தை நேரடியாக தீவிரவாதத்தோடு தொடர்பு படுத்த முடியும் என்று முடிவு செய்து, இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டவுடன் உலகம் முழுவதும் ஃபாக்ஸ் நியூஸ் தயாரித்த ஒரு காணொளி செய்தி பரப்பப்படுகிறது.*

*அந்த காணொளியில் முஸ்லிம்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறார்கள். உண்மையில் அந்த காணொளி என்னவென்று சொன்னால் குவைத்தை சதாம் ஹுசைன் 1991ல் ஆக்கிரமித்து பின்னர் வெளியேறிய போது குவைத் மக்கள் சந்தோஷப்பட்டார்கள். அந்த காணொளியை இதனுடன் இணைத்து பரப்பினார்கள்.*

*இன்றைக்கு அதே ஃபாக்ஸ் நியூஸ் ஒரு வாரத்திற்கு முன்பு 786 பில்லியன் நஷ்ட ஈடு வழக்கு போட்ட ஒருவருக்கு அந்த வழக்கை எதிர்கொள்ள முடியாமல் அந்த நஷ்ட ஈட்டை நீதிமன்றத்திற்கு வெளியே கொடுத்து தங்களை அவமானப்படுத்த வேண்டாம் என்று கூறி அந்த தொகையை கொடுத்துள்ளது.*

*அதனால் பாக்ஸ் நியூஸில் இருந்த முக்கியமான பத்திரிகையாளர்கள் எல்லாம் இப்படித்தான் எங்களை பொய்யை செய்தியாக தந்து சொல்லச் சொல்வது பிறகு, நஷ்டஈடு வழக்குகள் வந்தால் இப்படியான வேலைகளை செய்வது என்று கூறி அனைவரும் வெளியேறிவிட்டனர். இவ்வாறு ஊடகத் துறையில் நடந்து கொண்டிருக்கிறது.*

*இப்பொழுது இங்கு வந்தால் 2001ல், இரட்டை கோபுரங்கள் தாக்கப்பட்டு முஸ்லிம் களை அதனுடன் நேரடியாக தொடர்பு படுத்துகிறார்கள். உலகம் முழுவதும் மிகப் பயங்கரமான பிரச்சாரங்கள், முஸ்லிம்கள் பயங்கரமான தீவிரவாதிகள், அவர்களுடன் வாழ்ந்தால் மிகப் பெரிய பிரச்சனைகள் வரும் என்றெல்லாம் பரப்பினார்கள்.*

*நான் இப்பொழுது உங்களை கேட்கிறேன் இன்று அதனுடைய நிலை என்ன? இந்தப் பின்னணியில் தான் ஆப்கானிஸ்தானை*

ஆக்கிரமித்தார்கள். இன்றைக்கு அதனுடைய நிலை என்ன?

2021 ஆகஸ்டுக்கு முன்னால் வரைக்கும் தாலிபான்களை தீவிரவாதிகள் இல்லை என்று சொன்னால் அவர்களை பிடித்து சிறையில் அடைக்க தயாராக இருந்தார்கள்.

தாலிபனைசேஷன் என்ற வார்த்தையை மார்க்கண்டேய கட்ஜூ என்ற நீதிபதி உச்சநீதிமன்றத்தில் உட்கார்ந்து கொண்டு, தாடி வைக்கலாமா என்று கேட்டதற்கும், புர்கா அணியலாமா என்று கேட்டதற்கும் (அப்பொழுதே புர்கா போடுவது பிரச்சனை யாக இருக்கிறது) "தாலிபனைசேஷனை நாங்கள் அனுமதிக்க முடியாது" என்ற ஒரு வார்த்தையை கூறினார். அது தீர்ப்பாணையில் இல்லை, நீதிமன்றத்தில் அவர் கூறியது.

இந்த விஷயத்திற்கு நாம் என்ன செய்தோம் என்றால் அதற்கு பயங்கரமான கண்டனங்களை தெரிவித்த பிறகு அவர் அந்த வார்த்தையை பின் வாங்கினார். கண்டனம் தெரிவிப்பதோ, அதை எதிர்ப்பதோ தப்பில்லை. இப்படி எவ்வளவு காலத்திற்கு எதிர்ப்பீர்கள்? இப்படி ஒரு கேள்வி எழும். எவ்வளவு காலம் வேண்டுமானாலும் எதிர்த்துக் கொண்டே தான் இருக்க வேண்டும். ஏனென்றால் இஸ்லாமோஃபோபியா ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தோடு நிற்பதில்லை.

நான் ஜான் ஃபெப்பரினுடைய சிலுவைப் போர் 2.0 புத்தகத்தை தமிழில் கொண்டு வருவதற்கான முக்கியமான நோக்கம், எவ்வளவு காலமாக இந்த இஸ்லாமிய எதிர்ப்பு பிரச்சாரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன, எப்படி எல்லாம் அதை நாங்கள் செய்தோம் என்று அவர் அந்த நூலில் குறிப்பிட்டுள்ளார் என்பதனால் தான்.

எப்படி நாங்கள் உங்கள் மீது அதாவது இஸ்லாத்தின் மீது பொய்யையும், புனைந்துரை களையும் இட்டுக்கட்டி, உங்களின் மீது வெறுப்பை வளர்ப்போம், வளர்த்தோம் என்பதை கூறியிருப்பார்.

இன்னொரு நேர்மறையான விஷயம் இந்த புத்தகத்தில் என்னவென்றால் நாங்கள் இதிலெல்லாம் எவ்வாறு தோற்றோம் என்பதையும் பதிவு செய்கிறார். இறுதியில் அவர் கூறுகிறார், "அது ஒரு சத்திய மார்க்கம் அதனுடன் மோதி நம்மால் ஜெயிக்க முடியாது. அதனால் அமெரிக்கா அதனுடன் சமாதானமாக செல்வதே சிறந்தது." என்று.

இப்பொழுது ஆப்கானிஸ்தானில் அவர்கள் என்ன செய்தார்கள், சமாதானம் என்றெல்லாம் இல்லை தப்பி ஓடினால் போதும், உயிரோடு விடுங்கள் என்று பிச்சை கேட்டார்கள்.

ஆகவே 2001 - 2021 ஆகஸ்ட் இடையே நான்காயிரம் பேர் தங்களுடைய பதக்கங்களை விட்டு எரிகின்றனர். பொய்களுக்கு மேல் பொய்களை அவர்கள் கட்டவிழ்த்து விட்டார்கள் என புத்தகம் வெளிவருகிறது. எனவே இந்த இஸ்லாமோபோபியா என்பதை இவர்கள் மிகவும் துல்லியமாக செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் ஒன்று தான் ஜான் எக்ஸ்போசிட்டோவின் புத்தகங்களான Voices of Resurgent Islam மற்றும் Islamic Threat Myth or Reality போன்றவை.

**இஸ்லாம் வளர்கின்றது**


இஸ்லாத்தை தீவிரவாதம், பயங்கரவாதம் என்றெல்லாம் கூறிய அமெரிக்காவின் நிலை இன்றைக்கு என்னவாக இருக்கிறது? அங்கு இஸ்லாம் வளர்ந்துள்ளது.

9/11-க்கு குர்ஆனும், ரஸூலுல்லாஹ்வும் தான் காரணம் என்று கூறினார்கள், இதனால் குர்ஆனை எடுத்துப் படித்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள், ரஸூலுல்லாஹ்வின் வாழ்க்கையைப் படித்தார்கள் இஸ்லாத்திற்கு வந்தார்கள்.

இன்றைக்கு அமெரிக்காவில் நமக்கு தெரிந்தவரையில் குறைந்தபட்சம் மூன்று நீதிபதிகள், மூவரும் பெண்கள் ஹிஜாபை அணிந்து கொண்டு குர்ஆன் மீது கை வைத்து நீதிபதி பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக் கின்றார்கள். அவர் குர்ஆன் மீது கை வைத்து நான் ஒரு முஸ்லிம் பெண் என்பதில் பெருமை கொள்கிறேன் என்று கூறுகிறார். பதவியேற்பு விழாவிற்கு வந்த அத்தனை முக்கியமான நபர்களும் அவர் கூறுவதைக் கண்டு கை தட்டி வரவேற்கிறார்கள். எனவே இந்த இஸ்லாமோபோபியாவில் இஸ்லாம் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஏனென்றால் நாம் அதனை எதிர்கொள்கிறோம்.

நான் நிறைய காணொளிகளின் வழி உங்களிடம் தெரிவித்து இருக்கிறேன், அமெரிக்காவில் இப்போது இருக்கக்கூடிய முஸ்லிம்கள் வந்தேறிகள் கிடையாது, அவர்கள் அமெரிக்காவின் பூர்வ குடிகள் ஆனால் முஸ்லிம்கள்.

அதன் பிறகு இவையெல்லாம் போதாது என்று குர்ஆனின் மீது கை வைக்க, சல்மான் ருஷ்டி குர்ஆனின் ஆயத்துகளில் சைத்தானுடைய வார்த்தைகள் இருக்கிறது என்று கூறினான். அந்த சமயத்தில், ஒரு எதிர்ப்பு, சண்டை, கொஞ்சம் மரணங்கள், இந்தியாவில் அந்த புத்தகம் தடை செய்யப் படுகிறது மற்றும் பல இடங்களில் தடை செய்யப்படுகிறது.



சல்மான் ருஸ்டியைப் பொறுத்த வரைக்கும் அவனை மலிவான எழுத்தாளன் என்று கூறும் போது, நம்மை தற்காத்துக் கொள்வதற்காக அப்படி கூறவில்லை. ஏன் அவ்வாறு கூறுகிறோம் என்றால், அவன் ஒரு நாவலை எழுதுகிறான் "Midnight children" என்று. அதில் இந்திரா காந்தி பாம்பேயில் ஒரு அசிங்கமான இடத்தில் பிறந்தார் என்று எழுதி இருக்கிறான். இதை படித்த இந்திரா காந்தி, குயின் எலிசபெத்தை தொடர்பு கொண்டு இதைப் பற்றி வினவவே, உடனே அந்த புத்தகம் தடை செய்யப்பட்டது. அந்த வரிகளை நீக்கிவிட்டு பதித்தார்கள்.

நீங்கள் உண்மையிலேயே சரியானதை எழுதி இருந்தால் அப்படியே இருந்திருக்க வேண்டியதுதானே? எனக்கு எழுத்துரிமை உள்ளது, பேச்சுரிமை உள்ளது நான் அதை திருத்தம் செய்ய மாட்டேன் என்று கூற வேண்டியது தானே? எனவே தான் சல்மான் ருஷ்டி இப்படிப்பட்ட ஒரு கோழை.

ஆனால் அவன் காலம் முழுவதும் எழுதி லண்டனில் ஒரு வீட்டை வாங்க முடியவில்லை. லண்டனில் ஒரு வீட்டை தருகிறோம் என்று கூறியவுடன், நானும் ஒரு முஸ்லிம்தான் அப்படி இப்படி என்று கூறி இந்த புத்தகத்தை எழுதுகிறான். இதன் பின்விளைவில் என்ன நடந்தது என்றால், நான் வரலாற்றை அடிப்படையாக கொண்டு தான் சொல்கிறேன் என்று கூறியதை ஆலிம்கள் ஆய்வு செய்தார்கள். அந்த ஆய்வில் மிக முக்கியமாக இருந்தது இந்தியாவினுடைய அபுல் ஹஸன் அலீ நத்வீ(ரஹ்) அவர்கள். அவர்தான் இதனை முன்னெடுத்து சென்று, எந்த தப்ஸீரிலும் இவ்வாறு இல்லை. தப்ஸீர் ஜலாலுதீனில் அப்படி இருக்கிறது என்று அவன் கூறியதை இல்லை என்று பறைசாற்றினார்.

Cambridge History of Islam என்ற புத்தகம் இருக்கிறது. அன்றைய நாட்களில் நாங்கள் அதிகமாக வாங்கிப் படித்த புத்தகம் அது. அந்த வரலாற்றில் இது இருக்கிறது. அதை மாற்ற வேண்டும் என்று கூறி, இந்த புத்தகத்தை மதிப்பாய்வு செய்யும் குழுவில் அலீமியானை சேர்த்தார்கள். அவர் இதுபோல் இஸ்லாத்திற்கு எதிராக இருந்த கருத்துக்கள் அனைத்தையும் நேர்மறையாக மாற்றினார்.



ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருக்கிறது. "With every difficulty there is an opportunity"- ஒவ்வொரு துன்பமும் உங்களுக்கு வரும் பொழுது, ஒரு வாய்ப்பின் வழி திறக்கப் படுகின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எனவே ஒவ்வொரு முறை இஸ்லாம் தாக்கப்படும் பொழுதும், அதனை விளக்கி சொல்வதற்கான ஒரு வழி, ஒரு வாய்ப்பு நமக்கு கிடைக்கிறது. சாதாரண நேரத்தில் நீங்கள் ஆயிரம் கட்டுரைகளை எழுதலாம், ஆயிரம் தப்ஸீர் செய்யலாம் ஆனால் யாரும் கேட்க மாட்டார்கள். ஆனால் இது மாதிரியான நேரங்களில் இஸ்லாத்தை பற்றி கூறுவதை கேட்பார்கள். எனவே இதை எப்படி பயன்படுத்த வேண்டும் என்றால் இஸ்லாத்தை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கு பயன் படுத்த வேண்டும்.

இப்பொழுது சல்மான் ருஷ்டி விஷயத்தில் நமக்கு மிகப்பெரிய அளவில் உதவியது என்ன வென்றால் குர்ஆனுடைய உண்மைத் தன்மையை நாம் அனைவருக்கும் கூறினோம்.

குர்ஆன் 1400 வருடங்களாக அப்படியே இருக்கிறது. கியாமத் நாள் வரை அப்படியே இருக்கும். அதன் ஒரு புள்ளியை கூட எவராலும் மாற்ற இயலாது. ஏனெனில் இதை பாதுகாக்கிற பொறுப்பை யார் எடுத்து இருக்கிறார்கள் என்றால், அல்லாஹ்வே எடுத்துக் கொண்டிருக்கிறான்.

விஞ்ஞானம் வளர்கிறது. அறிவியல் வளர்கிறது ஆனால் அவை அனைத்தும் குர்ஆனின் ஆயத்துகளில் வந்து முடிகின்றன.

இந்த புர்கா படம் இத்தாஹ் பற்றி வெளிவரும் போது, ஒரு யூதனை பற்றிய பெயர் வெளிவருகிறது. ஏனெனில் அவர் இத்தாஹ்வை பற்றி ஆய்வு செய்து, ஒரு ஆண் ஒரு பெண்ணோடு தொடர்பு கொண்டால், அந்த ஆணின் பாலியல் ரேகைகள் பெண்ணின் உடலில் 120 நாட்கள் வரை இருக்கின்றன என்பதை தெரிந்து கொள்கிறார். இதை கண்டறிந்து இஸ்லாத்தையும் ஏற்றுக் கொள்கிறார். இது குர்ஆனுடைய அறிவியல் முகம்.

இதையெல்லாம் 1400 வருடங்களுக்கு முன் கணக்கு பார்த்தவர் ரசூலுல்லாஹ்வா? இல்லை அல்லாஹ்!.

இதிலிருந்து என்ன தெரிகிறது மனிதன் வளர்ந்து கொண்டிருக்கிறான். அறிவியல் வளர்ந்து கொண்டிருக்கிறது. இறுதியில் எங்கு வந்து விடுகிறார்கள்? குர்ஆன்-ல் வந்து முடிகிறார்கள். இந்த மாதிரியான ஆய்வுகளுக்கும் வழி வகுப்பதும் இந்த மாதிரியான தாக்குதல்கள் தான்.

அப்பொழுது சல்மான் ரஸ்டி விஷயத்தில் நாம் எடுத்த முடிவு என்னவென்றால், நாம் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்து கொண்டே இருக்க வேண்டும். இஸ்லாத்தை பற்றி புரியாததால் தான் இப்படியாக நடந்து கொண்டிருக்கின்றது.

9/11 பற்றி 20 வருடங்களில் அமெரிக்க சொன்ன அனைத்தும் பொய்யாகிவிட்டது. எவ்வளவோ மில்லியன் டாலர்களை செலவு செய்து பொய் சொன்னார்கள். இறுதியில் அவர்களது நாட்டு வீரர்களே பதக்கங்களை தூக்கி எறியும் அளவில் நடந்து விட்டது.

அடுத்த விஷயம் தாலிபான்களை உலகம் முழுவதும் மிகப்பெரிய ஆபத்தாக காட்ட வேண்டும்! இது CIAவின் ஒரு திட்டம்.

ஒரு நாட்டினுடைய உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது என்பது ஐ.நா.வினுடைய பிரகடனம். ஆனால் ஆப்கானிஸ்தானுடைய எல்லா உள்நாட்டு விவகாரங்களிலும் இன்றைய அளவிலும் தலையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அந்த முஜாஹித்கள் வென்றார்கள்! அதுவரையும் இருந்த இஸ்லாமிய வெறுப்பு பிரச்சாரங்கள் அடிபட்டுவிட்டது. அதுவரை அமெரிக்கா செலவு செய்த பணம், எழுதிய கட்டுரைகள், கொண்டு வந்த புத்தகங்கள், எடுத்த படங்கள் அனைத்தும் ஒன்றுமில்லாமல் போய்விட்டது.

சி.ஐ.ஏ வினுடைய ப்ராஜெக்ட் தான் விஸ்வரூபம் என்ற படம். அதில் யாருக்கும் நஷ்டம் ஏற்படாது. ஏனெனில் தாலிபான்களை தீவிரவாதிகளாக காட்ட வேண்டும் என்ற ப்ராஜெக்ட் அமெரிக்காவினுடையது, CIA வினுடையது.

எனவே இப்பொழுது வந்து கொண்டிருக் கின்ற படமாக இருந்தாலும் சரி, இனிமேல் வர இருக்கிற ஆயிரக்கணக்கான படங்களாக இருந்தாலும் சரி அதற்குப் பின்னால் ஒரு திட்டம் இருக்கிறது. படம் எடுப்பவர்களுக்கு எந்த நஷ்டமும் ஏற்படாது. லாப நஷ்ட கணக்குகளை இதில் பார்க்கவே கூடாது.

இன்னொரு விஷயம் சாதாரணமாக கூறி தட்டிக் கழிக்க பார்க்கிறார்கள். அது கர்நாடக தேர்தலை அல்லது 2026 தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு எடுத்த படங்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் அது உண்மை இல்லை 200 வருடங்களாக நமக்கு எதிராக வேலை செய்தவர்கள் தான் இந்த படங்களை எடுக்கிறார்கள் என்பதே உண்மை! அவர்கள் அந்த 200 வருடங்களோடு முடித்து விட்டார்களா என்றால் இல்லை. இன்னும் இது போன்று செயல்படுவார்கள். சினிமாவாக வெளிவரும்போது அனைத்து தளங்கள் வழியாகவும் தெரிந்து கொள்கிறோம். ஆனால் அவர்கள் தினமும் எழுதக்கூடிய கட்டுரைகள்?

மே நான்கில் திப்பு சுல்தான் பற்றி ஒரு காணொளியை வைகறை வெளிச்சம் யூடியூப் தளத்தில் பதிவிட்டேன். அது நமக்கு தெரியாத ஒரு வரலாறு!

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இருந்து ஜானகி நாயர் என்பவர், எடுத்து கூறுகிறார். திப்பு சுல்தான் என்றால் ஆங்கில நாட்டில் குழந்தைகளுக்கு கூட பயம் இருந்திருக்கிறது. எந்த அளவிற்கு என்றால் நாடோடிகளாகவும் கட்டுக்கடங்காதவர்களாகவும் இருக்கும் குழந்தைகளிடம் திப்பு சுல்தானிடம் பிடித்துக் கொடுத்து விடுவோம் என்று பயமுறுத்துவார்களாம். திப்பு சுல்தானை அங்கு ஒரு வில்லன் போல் சித்தரித்து உள்ளார்கள், இதற்காக நாட்டுப் புறப் பாடல்களிலிருந்து, நாடகங்களிலிருந்து அனைத்து ஊடகங்களையும் பயன்படுத்தி உள்ளனர். எனவே இவையெல்லாம் இவர்களுடைய 200 வருட கால திட்டங்களே. இப்பொழுது அவர்களின் கைகளில் ஆட்சி கிடைத்துவிட்டது. இப்பொழுது பாசிஸ்டுகளைப் பற்றி மக்கள் நன்கு புரிந்து கொண்டனர்.

எனக்கு தெரிந்த அளவில் இப்போதைய கர்நாடக தேர்தலில் திப்பு சுல்தானை வில்லனாக காட்டவில்லை, ஏன் என்று தெரியவில்லை. திப்பு சுல்தானை வில்லனாகக் காட்டினால் கர்நாடக மக்களே, அதிலும் விவசாயிகள் கூறுகிறார்கள், "அவர் ஒரு நல்ல மனிதர், குடிப்பழக்கத்தை ஒழித்தார், தோல் சீலை போராட்டம்" என்றெல்லாம் சொல்லி நாங்கள் தான் முதலில் யுத்தம் தொடுப்போம் என்று குரல் கொடுத்தார்கள்..

எனவே இவையெல்லாம் திப்பு சுல்தானை பற்றி கூற வேண்டியதற்கான ஒரு நல்ல வாய்ப்பு.

பா.ஜ.கவினுடைய அஜன்டா இரண்டு முனை கொண்டது. ஒன்று தேர்தல் லாபம் மற்றொன்று வரலாற்று ரீதியாக இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அழிப்பது.

நீங்கள் தேர்தலை மட்டும் உற்று நோக்கினால் தோற்றுப்போய் விடுவீர்கள். ஏனெனில் இது அவர்களுடைய திட்டமிடப் பட்ட தாக்குதல். இத்தோடு இஸ்லாத்திற்கு எதிரான படங்கள் வெளிவராதா என்றால், வெளிவரும்.

இத்தோடு எழுத்துக்கள் நின்று விடுமா என்றால், நிற்காது. இவர்களின் எழுத்துக்களுக்கெல்லாம் எதிர்வினையாக நாமும் எழுதிக் கொண்டிருக்கிறோம்.

இந்த இரண்டு முனை அஜண்டாவினுள் நாம் சிக்கிக் கொள்ளக் கூடாது. ஏனெனில் அது நிரந்தரமானது. திட்டமிடப்பட்டது ஆனால் இவை நிறுத்தப்படாது. எப்படி 9/11 அமெரிக்காவிற்கு உதவாமல் இறுதியில் அங்கே இஸ்லாம் வளர்வதற்கு வழி வகுத்ததோ அதே போல் தான் செயல்படும்.

சில நாட்களுக்கு முன்னால் ஹிந்து பத்திரிகையில் ஒரு கட்டுரை. நம்முடைய முன்னாள் சவுதி அரேபியாவினுடைய பிரதிநிதி (Ambassador) எழுதுகிறார். அமெரிக்கா கேவலமான நிலைக்கு தள்ளப் பட்டது, ஏனெனில் ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் வாங்கிய அடி.

இப்பொழுது ஈரானும், சவுதி அரேபியாவும் ஒன்றாக இணைந்பொழுது, அமெரிக்காவுக்கு இருந்த அனைத்து ஆதிக்கமும் அரபு நாடுகளிடம் முடிந்துவிட்டது. இப்பொழுது அந்த ஆதிக்கம் எங்கு சென்று விட்டது என்றால் அமெரிக்காவினுடைய பரம்பரை எதிரியான ஈரானிடம் போய்விட்டது. அதில் அமெரிக்காவினுடைய இன்னொரு எதிரி சைனாவும் கைகோர்த்துக் கொண்டது.

ஈரானுக்கும் இந்தியாவிற்கும் நல்ல உறவு இருக்கிறது. அதனால் நமது ஜெய்சங்கர் வெளியில் நிறைய அடிகளை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். இது நமக்கு பிடிக்காத

பாசிச ஆட்சி என்றாலும், இந்த ஜெய்சங்கரினுடைய வெளியுறவு கொள்கைகள் வெற்றியடைந்து கொண்டிருக்கின்றன.

அமெரிக்கா ரஷ்யாவின் மீது போட்ட பொருளாதாரத் தடையை ஒன்றும் இல்லாமல் ஆக்கிவிட்டார்கள். ரஷ்யா எண்ணெய்யை விற்க முடியாது ஆனால் இந்தியா அதனை குறைந்த விலையில் வாங்கி அதிக விலைக்கு விற்று ஒரு லாபத்தை ஏற்படுத்துகின்றது.

ஆகவே சகோதரர்களே, இது அவர்களுடைய ஏதோ ஒரு திட்டமிட்ட படம் அப்படியொன்றும் இல்லை. யுவானி ரிட்லி இஸ்லாத்திற்கு வருகிறார் அவருக்கு எதிராக ஒரு படம். பாராளுமன்ற தாக்குதலை வைத்து ஒரு படம், அதில் எல்லோரும் தண்டிக்கப் படுகிறார்கள் அதேபோல் ஒரு தீர்ப்பும் வருகிறது. நீதிமன்ற தீர்ப்புகளில் சிலவற்றில் நாம் வெற்றியும் கண்டு இருக்கிறோம், சிலவற்றில் தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த பொய் பிரச்சாரங்கள் நடந்து கொண்டேதான் இருக்கும். அதை எதிர்க்காமல் விட்டுவிடலாமா என்றால்? இல்லை, எதிர்க்க வேண்டும்.

நியூசிலாந்தில் முஸ்லிம்கள் சுட்டு கொலை செய்யப்பட்டார்கள் அது பெரிய அளவில் செய்தியானது. அதன் பிறகு நியூசிலாந்து முஸ்லிம்களுக்கு இடையே ஒரு விழிப்புணர்வு. இவன் ஏன் நம்மை சுட்டான்? எனில் அவர்கள் நம்மை வாழக் கூடாத ஒரு சமுதாயம் என்று கருதுகிறார்கள். எனவே நாம் இப்படி அமைதியாக இருப்பது பயனற்றது என்று எண்ணி, அதன் பிறகு தான் நியூசிலாந்து ஃபெடரேஷன் ஆப் முஸ்லிம் ஆர்கனைசேஷன் என்ற அமைப்பை ஆரம்பித்து தாவா செய்ய ஆரம்பித்தார்கள்.

இப்பொழுது அங்கிருந்து சர்ச்சினுடைய தலைவரே என்ன கூறுகிறார் என்றால், நீங்கள் நினைப்பது போல் முஸ்லிம்கள் கிடையாது என்று அவர்கள் காட்டிவிட்டார்கள். என அவரே இஸ்லாத்திற்கு சாதகமாக பேசகிறார். எனவே அங்கும் இஸ்லாம் வளர்கிறது. இதை தூண்டிவிட்டது 51 பேரை ஷஹீதாக்கியவன்.

ஆகவே முஸ்லிம்களுக்கு இடையே ஒரு பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, இஸ்லாத்தை நாம் மற்றவர்களுக்கு சொல்லாமல் இருந்தால், இவர்களின் இஸ்லாமோஃபோபியா மட்டும்தான் இருக்கும்.

நியூசிலாந்தில் இஸ்லாம் ஒரு வளரும் மார்க்கமாக மாறிவிட்டது. ஆகவே ஒவ்வொரு முறை இஸ்லாம் தாக்கப்படும்பொழுதும், இஸ்லாத்தை விளக்கிச் சொல்வதற்கான வாய்ப்பு ஒன்று கிடைக்கிறது. நீங்கள் நீதிமன்றத்திற்கு செல்வது, எதிர்ப்பை தெரிவிப்பது அனைத்தும் சரியே, நம்முடைய எதிர்ப்பை தெரிவித்துக் கொண்டே தான் இருக்க வேண்டும்.

எப்படி விஸ்வரூபம் படத்திற்கு பின்னால் CIA இருந்து தயாரிப்பாளருக்கு நஷ்டம் ஏற்படவில்லையோ, அதே போல தான் இந்த இஸ்லாமிய எதிர்ப்பு படங்களுக்கும்.

புர்கா இப்பொழுதுதான் தாக்கப்படுகிறது என்று நினைக்கிறீர்களா? யுவானி ரிட்லி ஒரு கட்டத்தில் முடிவு செய்து இருந்தாராம் புர்காவிற்கு எதிராக உலகம் முழுவதும் இயக்கங்கள் நடத்தி, புர்காவை ஒழிக்க வேண்டும் என்று. ஆனால் கடைசியில் அவர் என்ன செய்கிறார் ஒரு கடையில் உட்கார்ந்து கொண்டு, அவருக்காக நான்கு முஸ்லிம்


நியூசிலாந்து ஃபெடரேஷன் ஆப் முஸ்லிம் ஆர்கனைசேஷன் அங்கத்தினர்



சகோதரிகள் புர்காவை தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அப்பொழுது அவர் சிந்தித்தாராம் இந்த புர்காவிற்கு எதிராக தானே நாம் இயக்கங்கள் நடத்த வேண்டும் என்று நினைத்தோம், இப்பொழுது நல்ல புர்கா எது என்பதை நான்கு சகோதரிகளை விட்டு தமக்காக தேர்ந்தெடுக்க வைத்துக் கொண்டிருக்கின்றோமே என்று.

ஆக அபூஜஹல் இருந்ததால்தான் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. ரோமரும் பாரசீகர்களும் படை கொண்டு வந்ததால் வல்லரசுகளை வெல்ல முடியும் என்று காட்டினோம். ஆப்கானிஸ்தானிலும் இன்று அதை காட்டி விட்டோம்.

இனி இந்த ஜூன் மாதத்திற்கு பிறகு இந்த பொது சிவில் சட்டத்தை கையில் எடுப்பார்கள், ஞான்வாபி விஷயத்தை எடுப்பார்கள். இது இவர்களின் அரசியல் வேலை என்று மட்டும் யோசித்து ஏமாந்து விடக்கூடாது. இது திட்டமிடப்பட்ட கருத்தியல் நகர்த்தம். பாபரி மஸ்ஜித் விவகாரம் என்ன அரசியல் நகர்த்தமா? *117* வருடங்களாக வழக்கு நடந்தது.

ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியே சோர்ந்து போய் கூறினார், பாபரி மஸ்ஜித் வழக்கு இவ்வளவு தூரம் இழுப்பதற்கு காரணம் பிஜேபி அல்ல, உச்சநீதிமன்றம் தான் என்று.

ஒவ்வொரு முறை முஸ்லிம்கள் ஒரு நிவாரணம் என்று செல்லும் பொழுது அவர் களுக்கு எதிராகவும், இந்துத்துவவாதிகளுக்கு சாதகமாகவும் ஒரு தீர்ப்பை கொடுத்து கபளீகரப்படுத்துவார்கள்.

வரலாற்றாசிரியர்கள், பாசிச அரசுக்கு எதிராக சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வரலாற்று ஆசிரியர் எழுதுகிறார் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு ஹிந்து என்ற வார்த்தையே கிடையாது, நீங்கள் எப்படி இந்துத்துவமயமாக்கல் என்று கூறுகிறீர்கள்.

ஆயிரம் வருட வரலாற்றையே இந்த பாசிஸ்டுகள் மாற்றுகின்றார்கள் என்றால் இவர்களுக்கு இருப்பது எப்படிப்பட்ட வரலாறு என்று உலக மக்களுக்கு தெரியும்! ஆகவே இம்மாதிரியான பேராசிரியர்களின் கருத்துக்களை தொடர்ந்தால் இவர்கள் எம்மாதிரியான வரலாற்றைக் கொண்டவர்கள் என மக்கள் மத்தியில் கூற முடியும். எனவே அதனை ஆய்வு செய்ய வேண்டும். இந்த வரலாறுகள் என்றும் சாகாது.

திப்பு சுல்தானை *224* வருடங்களாக கொலை செய்து பார்க்கிறார்கள். இன்னும் அவர் எழுந்து நிற்கத்தான் செய்கிறார், ஏனென்றால் அவர் ஷஹீது. நீங்கள் என்னதான் அதனை குழிதோண்டி புதைக்க நினைத்தாலும் அல்லாஹ் அதனை மாற்று மத சகோதரர்கள் மூலமாகக்கூட வெளிப்படுத்தி விடுகிறான்.

புர்கா போன்ற படங்களெல்லாம், புர்காவைப் பற்றி எடுத்துக் கூற, இத்தாஹ்வைப் பற்றி எடுத்துகூற சிறந்த வாய்ப்புகள்.

ISILஐ உருவாக்கியது பிரான்ஸ், யுனைடெட் கிங்டம்(UK) மற்றும் அமெரிக்கா ஆகிய மூன்றும் தான். இதைப் பற்றிய பின்னணியைத் தெரிந்து கொள்ள டேனியல் பைப்ஸ்-உடைய Default Wars என்கிற ஆராச்சியைப் படிக்க வேண்டும். அவர் அதில் கூறுகிறார், ஈராக்கில் தோற்றவுடன் நாங்கள் சென்றுவிடுவோம் ஆனால் நாங்கள் இல்லாத யுத்தம் உங்கள் பூமியில் நடக்கும் என்று, அதே போல் நடந்தது .

நமது விடுதலை பத்திரிகையில் கூட எழுதினார்கள் ISILனுடைய கைகளில் இருப்பது அமெரிக்காவினுடைய துப்பாக்கி என.

அமெரிக்காவினுடைய நாடாளுமன்றத்தில் திடீர் என 300 மில்லியன் டாலர்கள், 250 மில்லியன் டாலர்கள் ஒரேநாளில் தனித் தனியாக அனுப்பப்பட்டது. 250 மில்லியன் டாலர்கள் துருக்கி பக்கத்தில் இருக்கக்கூடிய ராணுவத்திற்கு ஆயுதம் தருவதற்கு. சியா - சன்னி பிரச்னை என்று காட்டிக்கொண்டிருந்த இவர்கள் ஏன் இவ்வளவு டாலர்கள் ஒதுக்குகிறார்கள்?

ISIL என்பது ஒபாமாவின் உருவாக்கம் தான் என டிரம்ப் கூறினார்.

சாமுவேல் பி ஹண்டிங்டன் உடைய Clash of Civilizationல் கூறுகிறார், "உலகம் முழுவதும் நாம் ஒரு தீவிரவாத அமைப்பை வைத்திருப் போம். அது முஸ்லிம்களால் ஆனது, நாம் தாக்கச் சொல்லும்பொழுது அவர்கள் தாக்குவார்கள், பழியை முஸ்லிம்கள் மீது போட்டு விடலாம், அவர்களை தீவிரவாதிகள் ஆக்கிவிடலாம்."

நடந்து முடிந்த கர்நாடகா தேர்தலிலும் சரி, வரக்கூடிய 2024 அனைத்திந்திய தேர்தலிலும் சரி பா.ஜ.க.வின் சாதனைகள் என்று சொல்லக்கூடிய அளவில் எதுவும் இவர் களிடத்தில் இல்லை..

டெக்கான் கிரானிக்கல் பத்திரிகையில் ஒரு செய்தி குறிப்பிடப்பட்டது அது 675 இந்தியர்கள் கல்லத் தோனி வழியாக லண்டனுக்கு சென்றிருக்கிறார்கள். மாவோ மித்ரா என்ற பாராளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் இதனை பலமாகவே கேட்டார். ஏன் அவர்களெல்லாம் இந்தியாவை விட்டு ஓடுகிறார்கள் என்று. இந்தியா வளர்ந்து கொண்டிருக்கின்றது என்றால், அவர்கள் ஏன் நல்ல வாழ்க்கையை தேடி இந்தியாவை விட்டு ஓடுகிறார்கள்.

இதில் பொதுவான வில்லன்களாக காட்டப் படுவது முஸ்லிம்களும் இஸ்லாமும்தான். 200 வருடங்களாக நடந்து கொண்டிருக்கிற இவை நின்று விடாது. ஆனால் இவற்றில் எல்லாம் நமக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. தாஃவாவை விரிவு படுத்துவதற்கும், இஸ்லாத்தை மக்களிடம் எடுத்து சொல்வதற்கும்.

திடீரென்று ஒரு எதிர்ப்பு வந்தவுடன், பரபரப்பாகிவிட்டு விட்டுவிடக்கூடாது. Front lineல் மூன்று கட்டுரை வந்து விட்டது. என்னவென்றால் NCERT வரலாற்றில் இருந்து பல விஷயங்களை பிடுங்கிப் போடுவதும், பொய்யான வரலாற்றை சேர்ப்பது பற்றி வந்து விட்டன.

ஆயிரம் வருட வரலாறு என்கிறீர்களே, ஹிந்து என்ற வார்த்தை இருந்ததா? என மோகன் பகவத்திடம் நேரடியாகவே கேட்டு விட்டார்கள்.

வரலாற்று அறிஞர்கள் எல்லாம் இணைந்து 40 ஆய்வுகளை நடத்தி, நீங்கள் பாட புத்தகத்தில் கொடுத்திருப்பது பொய் என்றும், இதற்கு ஆதாரங்களும் கிடையாது என்றும் கூறினார்கள். ஆனால் அது எந்த சலசலப் பையும் ஏற்படுத்தவில்லை ஏனென்றால் அது வெறும் காகிதத்தில் நடக்கின்றது. ஆனால் முஸ்லிம்கள் பற்றி மட்டும் அனைத்து ஊடகங்களின் வழியாகவும் காட்டப்படுகிறது. எல்லா விதத்திலும் முஸ்லிம்கள் தாக்கப் படுகிறார்கள்.

இன்னும் இந்த மாதிரியான இஸ்லாமிய வெறுப்பு படங்களுக்கு எல்லாம் நிறைய விருதுகளை தருவார்கள்.

ஒரு பொய்க்காக ஆஸ்கார் விருதே தந்திருக் கிறார்கள். ஈரானில் அமெரிக்கா தோற்று விட்டது. அப்பொழுது கொமைனி அவர்கள் பணயக் கைதிகளாக 80 பேரை வைத்துக் கொண்டு தனக்கு தர வேண்டிய பணத்தைக் கேட்டார்கள். அந்த 80 பேரை மீட்க இஸ்ரேலிடமிருந்து ஒரு அதிரடிப் படையை அனுப்பி, பாலைவனத்தில் இறங்கி அந்த 80 பேரையும் மீட்டுவிடலாம் என நினைத்தார்கள். இந்த விஷயம் ஈரானுக்கும் அப்பொழுது தெரியாது. அந்த அதிரடிப்படை





ஹெலிகாப்டர்கள் பறந்து ஈரானின் எல்லைக்கு வரும்பொழுது பெரிய புயல் அடித்து 4 ஹெலிகாப்டர்களும் கீழே வீழ்ந்துவிட்டன. அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்துள்ளான்!

இதை மையமாக வைத்து இந்த ஹெலிகாப்டர்கள் கொண்டு செய்யப்பட்ட திட்டம் நிறைவேறியதாக ஒரு பொய்யான படம் எடுத்தார்கள். ஆஸ்கார் விருதும் அந்த பொய் படத்திற்கு கொடுக்கப்பட்டது.

இப்பொழுது எடுத்த காஷ்மீர் பைல்ஸ் படமும் உலகம் முழுவதும் இந்தியாவை தலை குனிவிற்கு கொண்டுசென்றது. இந்த படங்கள் மட்டும் அல்ல ஏராளமான படங்கள் வந்தன உன்னை போல் ஒருவன், வேலாயுதம், விஸ்வரூபம், துப்பாக்கி என எக்கச்சக்கமான படங்கள் வந்தன.

விஸ்வரூபம் மூலமாக தாலிபான்களைத் தீவிரவாதிகளாகப் காட்டப்படுவதை தடுத்து விட்டோம். அந்த சமயத்தில் திரையரங்கு களுக்கு *144* தடை விதித்தது ஜெயலலிதா அரசு. இப்பொழுது திரையரங்குகளுக்கு பாது காப்பு அளித்து படத்தை வெளியிடுகிறார்கள் காலங்கள் மாறி வருகின்றன.

ஆனால் அதனால் நாம் சோர்வடையத் தேவையில்லை. இஸ்லாத்தை தொடர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டும். சகோதர சமுதாயத்தவர்களும் இந்த படத்திற்கு எதிராகத்தான் கருத்துக்களை பதிவிட்டு வருகிறார்கள். அதனால் சமுதாயம் நல்ல விழிப்புணர்வில் தான் இருக்கிறது.

**MGM**



**ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன் நம்முடன் (MGM) தா:வா களத்தில் செயல்பட்ட செயல்வீரர் போடி நூருதீன், காலச்சக்கரத்தின் சுழற்சியில் அவர் தன் கால் ஒன்றை இழந்தார். சர்க்கரை நோயே காரணம். செயற்கைக் கால் பொருத்தப் பட்டுள்ளது.**

**01.07.2023இல் தேவாரம் தா:வா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு போடி நூருதீன் அவர்களை அன்றே அவருடைய இல்லத்தில் சந்தித்தார் வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முயம்மத்.**

**வேர்கள் பதிப்பகம் அண்மையில் வெளியிட்ட நூல்களை போடி நூருதீன் அவர்களுக்கு வழங்கினார். பழைய நினைவுகளை நினைவுகூர்ந்த போடி நூருதீன் அவர்கள் கண் கலங்கினார்.**

**– தேனியிலிருந்து நமது நிரூபர்**



# அம்பலமாயின செங்கோல் பொய்கள்..!

## உண்மையை போட்டுடைத்த திருவாடுதுறை தலைமை ஆதீனம்...!



மழையும் ஒழிந்தது, தூரலும் ஒழிந்தது ஆனால் மீண்டும் தூரல் வந்திருக்கிறது செங்கோலைப் பொறுத்த வரைக்கும்!

செங்கோல் பற்றி திடீரென ஹிந்து பத்திரிகையில் ஜூன் 9ஆம் தேதி ஒரு ஹார்ட் பிரேக்கிங் கட்டுரை என்று சொல்லக்கூடிய அதாவது மயிலாடுதுறையைச் சேர்ந்த திருவாடுதுறை ஆதீனம் அவர்கள் சன்னிதானத்தில் இருந்துதான் அந்த செங்கோல் மவுண்ட் பேட்டனிடம் சென்று பிறகு நேருவிற்கு சென்றதாக ஒரு கதையை நமது நிர்மலா சீதாராமன், நம்முடைய உள்துறை அமைச்சர் இவர்கள் எல்லாம் இணைந்து நிறைய கோப்புகளை கொடுத்தார்கள்.

இப்பொழுது ஹிந்து பத்திரிகை,திருவாடுதுறை தலைமை ஆதீனத்தை சந்தித்து ஒரு பேட்டி எடுக்கிறார்கள். அதில் இந்த செங்கோலை மவுண்ட் பேட்டனிடம் கொடுத்தீர்களா என்று கேட்டுள்ளார்கள். ஏற்கனவே மவுண்ட் பேட்டனிடம் ஆகஸ்ட் 14, 1947-ல் கொடுத்ததாக சொன்னார்கள் பாஸிஸ்டுகள். ஆனால் மவுண்ட் பேட்டன் அன்றைக்கு இந்தியாவில் இல்லை. அவர் கராச்சியில் இருந்தார். பாகிஸ்தானுடைய விடுதலை நாளை கொண்டாடிக்கொண்டு இருந்தார் என்று சொல்லி எல்லா தரவுகளையும் தந்து வடிகட்டின பொய் என்று அதை நிரூபித்தார்கள்.

இப்பொழுது தலைமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் பரமாச்சாரியார் சுவாமிகள் என்ன சொல்லி இருக்கிறார் என்றால், “அப்படி நாங்கள் எதையும் மவுண்ட்

பேட்டனிடம் கொடுக்கவில்லை" என்று முதல் கேள்விக்கு பதிலளித்து விட்டார்.

அடுத்த கேள்வி, இந்த செங்கோலை அதிகார மாற்றத்தின் ஒரு பகுதியாக எப்போதாவது எடுத்துக் கொண்டதுண்டா? என கேட்ட போது, அதையும் அவர் மறுத்துவிட்டார். அதாவது அதிகார மாற்றம் ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு செல்லும் பொழுது செங்கோலை மாற்றித்தான் செல்வார்கள் என்பது அதிகார மாற்றத்தின் அடையாளம் இல்லை என்று கூறிவிட்டார்.

அடுத்தது, நீங்கள் இரண்டு மலர்களை அதாவது **1947** மற்றும் **1950** ஆகிய இரண்டு ஆண்டுகளில் இரண்டு மலர்களை ஆதினத்தின் சார்பில் வெளியிட்டதாகவும், அதில் நீங்கள் இதை குறிப்பிட்டிருப்பதாகவும் எங்களுக்கு ஒரு தரவு கொடுக்கப்பட்டதே அது உங்களிடம் இருக்கிறதா? என்று கேட்டபோது அது இரண்டையும் காணவில்லை, தெரியவில்லை எனவும் கூறிவிட்டார் ஆக அந்த ரெகார்டும் இல்லை.

இதனை பள்ளி பாடங்களில் சேர்க்க வேண்டும் எனக் கூறியதை அனைவரும் எதிர்த்து விட்டார்கள். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு It's a textbook case of lies அதாவது ஒரு பட்டவர்த்தனமான பொய் என்று. ஆகவே செங்கோல் இப்படிக் கிடந்து படாத பாடுபடுகிறது. அண்ணாதுரை சொல்வது போல இது அநியாயக்காரர்களின் கோல்! எப்படி செங்கோல் என்று கூற முடியும்?

கடைசியில் ஒரு தெர்மோகோலிற்கான மரியாதை கூட அதற்கு இல்லை என ஹிந்து பத்திரிகை முடிவு செய்தவுடன், நமது காங்கிரஸ்-ஐ சேர்ந்த ஒருவர் இந்த ஹிந்துத்துவாவினுடைய பொய்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் எல்லாம் தவிடு பொடியாகிவிட்டன செங்கோலைப் பொறுத்த வரைக்கும். இனிமேல் செங்கோலைப் பற்றி பேச வேண்டாம் என்று சொல்லி முடித்திருக்கிறார்கள்.

செங்கோலைப் பற்றிய ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. மீண்டும் தகவல்கள் கிடைக்கும் போது இந்த பொய்யை நாம் பொய் என்று சுட்டிக்காட்டவில்லை என்றால் இதனை பாட புத்தகத்தில் புகுத்தி இதற்கு பெரிய பின்னணியையே கொடுத்து விடுவார்கள்.


இந்த செங்கோலைக்காட்டி தமிழகத்தில் கால் ஊன்றலாம் என்றால் அதுவும் நடக்கவில்லை. இப்படி ஒரு பரம பொய்யைக் கட்டி அதையும் பாராளுமன்றத்தில் வைத்து, இந்த பாராளுமன்றம் எதற்கு அடையாளம்? என்ற கேள்வி இப்பொழுது எழுகின்றது .சபாநாயகர் இதனை கையில் வைத்துக் கொள்வாராம்.

ஏற்கனவே பாராளுமன்றத்தில் பொய்யை அள்ளிக் கொட்டுகிறீர்கள், உண்மையை பேசுபவர்களை Anti National என்றெல்லாம் சொல்கிறீர்கள்.


மாவோ மித்ரா என்ற சிஜீய பெண் உங்களை நோக்கி கேட்கும் கேள்விகளுக்கு உங்களில் ஒருவரால் கூட பதில் கூற முடியவில்லை. இப்பொழுது இந்த செங்கோல் பொய் இப்படி கிடந்து நாற்றமடிக்கிறது. இனிமேலாவது இந்த செங்கோலை தூக்கிக் கொண்டு அலைய மாட்டீர்கள். பொய்களை கட்டுக்கட்டாக கட்டிவிட மாட்டீர்கள் என்று நினைக்கிறோம்.

அறிஞர் அண்ணா செங்கோல் குறித்து எழுதிய கட்டுரையை இங்கே தருகின்றோம்..

## அன்றே சொன்ன அண்ணா...! செங்கோல் ஒரு ஒரு வேண்டுகோள்



புது சர்க்காருக்குப் பிரதமராக வந்துள்ள பண்டித நேருவுக்கு திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஒரு செங்கோல் அனுப்பினார். அது 5 அடி உயரமாம்! அசல் தங்கத்தால் செய்யப்பட்டதாம்! அழகாகவும், இருக்கிறதாம்! செங்கோல் அளித்தது. ஏன்? பரிசா? காணிக்கையா? பாகமா? லைசென்சு கட்டணமா? எதும் விளங்கவில்லை. எதிர்பாராதது! அம்மட்டோ! அவசியமற்றது! அவசியமற்றதாக மட்டும் இருந்தால் கூடப் பரவாயில்லையே. அதனுள் புதைந்துள்ள ஆழ்ந்த பொருளைச் சிந்தித்தால் ஆபத்தன்றோ மெள்ள மெள்ளத் தெரிகிறது.





பண்டிதர். அந்த செங்கோலைக் கண்டு, என்ன எண்ணினாரோ, நாமறியோம் ஆதீனகர்த்தா, கோலுடன் வேறென்ன ஓலை தந்தனுப்பினாரோ, நாமறியோம். நாம், கூற ஒன்றிருக்கிறது பண்டித நேருவுக்கு, அந்தச் செங்கோலைப் பெற்றுக்கொண்ட உமக்குச் சில சொற்கள்.

"பாரிலே உள்ள பல நாட்டு வரலாறுகளை நீர் அறிவீர். முடிஅரசன் அவனைச் சுற்றி குடிமக்களை உழைக்க வைத்து, அதன் பலனை உண்டு கொழுக்கும் சீமான்கள் பரிவாரம் இந்தத் தங்கக் கோட்டையினுள்ளே, தாராளமாக உலவும் அனுமதியும் வசதியும் பெற்ற மதத்தை முதலாகக் கொண்டோர் உள்ளனர் என்பதை அறிவீர். மக்களாட்சி மலருவதற்கு இத்தகையவர்கள் நீக்கப்பட வேண்டும் என்னும் வரலாற்று உண்மையையும் அறிவீர்கள். அறிந்ததை. ஆட்சி முறையிலே புகவைக்க முயலுவீரோ, என்கிற அச்சம் கொண்ட ஆதீன கர்த்தாக்கள், செம்பொன்னால் செய்யப்பட்டது மட்டுமல்ல; நவரத்னங்கள் இழைத்த செங்கோலையும் தர முன்வருவர் - தற்காப்புக்காக! பதிகம் பாடிப் பரமன் அருளைத் தேடி, அற்புத சக்தியால் செய்யப்பட்டதல்ல! அரனடியார் ஒருவர் செய்ததாகக் கூறப்படும் நரிபரியான கதை போல, இரும்புத்துண்டை ஒரு துளி விபூதி தூவி, ஓம் செம்பொன் ஆக்கிச் செய்யப்பட்டதல்ல! பிறர் உழைப்பு? இவருடையது தானாம். இதுதான் அந்தச் செங்கோல்! பெயர், பொருந்துமா?

அந்தச் செங்கோல் - அய்ந்தடி உயரம். அழகிய வேலைப்பாடமைந்தது. பசும் பொன்னால் செய்யப்பட்டது. அளித்தவரோ, சாமான்யரல்ல - ராஜகுடும்பமோ? அல்ல, அதற்கும் மேலே! பூர்விக பரம்பரையோ?

பூர்விக பரம்பரையா, நேற்று முளைத்ததா, என்பதல்ல முக்கியம். பரம்பரை கேவலம், பூலோகவாசிகளின் வழிவழி அல்ல- திருக்கைலாயபரம்பரை!

அண்ணேன்! எது, நமது ஆதீனத்துக்குத் திடீரென்று- தேசபக்தி பொங்கி வழிகிறதே என்று கேட்கிறாயா,

தம்பி! இல்லே அண்ணேன், பொங்குவதும் வழிகிறதுந்தான் இங்கு பழங்கதையாச்சே ஆதீனத்தின் திருப்பார்வை, இப்படி. அரசியல்


24-8-47 திராவிட நாடு 3

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா **திராவிடநாடு** ஆண்டுசந்தா ரூ 7

**செங்கோல்**

ஒருவேண்டுகோள்

மீது பாயக் காரணம் என்ன, என்று கேட்டேன்.

காரணம் கிடக்கட்டும் தம்பி! எனக்கு அந்தக் காரணத்தைக் கண்டு பிடிக்க வேண்டுமென்பதிலே கூட அவ்வளவு பிரியம் இல்லை- ஆனால், விளைவு என்ன ஆகும் என்பதை எண்ணும் போதுதான்.

ஏன்? என்ன ஆகும் விளைவு?

செங்கோல், செம்பொன்னால்தான் செய்கிறோம். வேலைப்பாடு முதல் தரமாகத்தான் இருக்கப்போகிறது. இரவு பகலாக உட்கார்ந்து வேலை செய்கிறோமே!

ஆமாம்!

அதனாலே அழகும் அந்தஸ்தும். ஏற்படும். செங்கோலுக்கு, ஆனால் இதை அனுப்பி வைப்பதன் மூலம், ஆதீனம், தன்பார்வையை அந்தப் பக்கம் செலுத்துவது தெரிகிறதல்லவா? ஆதீனத்தின் பார்வை பட்ட காரணத்தாலே, ஏற்பட்ட பலவிதமான விளைவுகளைப் பற்றி யோசிக்கும் போது...

அடாடா! நீங்க அதை எல்லாமா எண்ணிக் கொண்டு, ஆயாசமடைவது? இது வேறு பார்வை அது வேறு பார்வை அல்லவா?

இருக்கலாம் தம்பி, இருக்கலாம் ஆனால், இரண்டு ரகப் பார்வைக்குமுள்ள ஒரே காரணம், ஆசைதானே!

ஆமாம்!

ஆதீனத்தின் ஆசை, புதிய அரசாங்கத்தின மீது பாய்வதா? நல்லதா? - அதுதான் என்கேள்வி.

எனக்குள்ள பயமும் அதுதான். அருமை யான செங்கோல் - நல்ல வேலைப்பாடு- ஆனா இதைக் கையிலே வைத்துக்கொண்டு, ஆட்சி நடத்தினால்..

தம்பி! இதிலே உள்ள தங்கம் - தரித்திரத்தைக் கூடப் பொருட்படுத்தாதவன், பகல் பட்டினி, ராப்பட்டினி கிடந்தவன், மற்றவன் பொருளை மோசம் செய்தவன். மார் உடையப் பாடுபட்டவன், கூலியைக் குறைச்சவன், உழவனுடைய வயிற்றிலே அடிச்சவன், கொள்ளை இலாபக்காரன், கொடுத்த கடனுக்கு நாமத்தைக் குழைச்சிப் போட்டவன், இப்படிப்பட்டவன்களெல்லாம் கூட, செய்ததை மறைக்க, பாவத்தைக் குறைக்க பகவானையே ஏமாற்ற, கொடுத்த காணிக்கை, இருக்குதே. அதுதானே! அதுவுந்தானே இருக்கும் புத்தம் புதிசா ஆரம்பிக்கிற ஆட்சிக்கு, இப்படி, புத்தியைச் சுரண்டிப் பிறகு, வாழ்வையே சுரண்டி விடுகிற வழக்கத்தை முதலாக வைத்து வியாபாரம். செய்கிறவர்களிடமிருந்து செங்கோல் கிடைத்தால். ஆட்சி, சரியாவா இருக்கும்? நீங்க ஒரு வேடிக்கை அண்ணேன்!

வேடிக்கை அதிகமில்லேடா தம்பி! வேதனை இருக்கு அதிகமாக செங்கோல் செய்தவர்கள் இது போலப் பேசியிருக்க மாட்டார்கள். ஆனால், இது போன்று எண்ணாமலிருந்திருக்க முடியாது!

**அய்யர்:**

ஆஹா! பொது சிலாக்யம்! சிரேஷ்டமான காரியம். சகலரும் பாராட்டுவா!

**அதிபர்:** செங்கோலின் உயரம்.

**அய்யர்:**

அய்ந்து அடியாம்! செம்பொன்னாம். சொன்னா! தங்களுடைய கீர்த்தியோ, அய்ந்து யோசனை உயரம் உயரும்.

**அதிபர்:**

பேப்பர்காராளெல்லாம் கூட

**அய்யர்:**

அவாளைத் தள்ளுங்கோ படம் போடுவா பாராட்டி எழுதுவா - பெரிய பெரிய மனுஷா - அயல் தேசத்திலே இருந்தெல்லாம் வந்திருப்பா அமெரிக்கா, அய்ரோப்பா, முதலிய பல இடங்களிலிருந்து - அவாளெல்லாம் செங்கோலைக் கண்டாளான்னா, ஆஹா! பிரம்மிச்சிப் போவா.

**அதிபர்:**

ரொம்ப அழகான முறையிலே தான். பக்தர்கள் தயாரிக்கிறா.

**அய்யர்:**

வேலைப்பாடு கூடக் கிடக்கட்டும். அதுவும் நன்னாத்தான் இருக்கும். ஆனா அதைக் கூடக் கவனிக்கமாட்டா- இந்த முகூர்த்த வேளையிலே, இப்படிப்பட்ட சிலாக்யமான செங்கோலைத் தர வேணும்னு, இந்தியா பூராவிலேயும் உள்ள படேபடே, ராஜாக்கள், பரோடா, ஜெயப்பூர், உதயப்பூர், மைசூர், எந்த ராஜாங்கத்துக்கும், உதிக்கல்லே! ஆதீனத்துக்கு, அந்த அன்பும், அக்கறையும், அபிமானமும் ஏற்பட்டது பாருங்கள் என்று, ஒவ்வொருவரும் பேசிப் பேசிப் புகழமாட்டாளா? செங்கோலைப் பற்றி ஒரு நிமிஷம் பேசுவா, இரண்டு நிமிஷம் பேசுவா, ஆனா, தங்களைப் பற்றியோ, நாளெல்லாம் பேசுவாளோன்னோ?

**அதிபர்:**

ஆமாம் எப்படி நமது யோசனை?

**அய்யர்:**

வேறு யாருக்கு வரும்! ராஜா கையிலே இருப்பது செங்கோல் - முதல் ராஜாங் கத்துக்குச் செங்கோல் கொடுத்தது யார்? ஆதீனம்! அதாவது, ஆதீனம் பார்த்து ஆசீர்வதித்து, அனுமதி தந்து, புது ராஜ்யம் ஆரம்பமாகலாம்னு முத்திரை தருவது போல, செங்கோலும் கொடுத்த பிறகுதான், புதுராஜாங்கமே ஆரம்பமாச்சுதுன்னு, சகலரும் பேசுவா - இப்ப மட்டுமல்ல - எதிர்காலத்திலும், இப்படிப்பட்ட, பேச்சு நடந்திருக்கக் கூடும்! செம்பொன் தன்னால் ஆக்கித் திருவருளை இழைத்திழைத்து வம்பொன்றும் வராமல் வாழ்க இந்த அரசு என்று எம்மானைப் பெம்மானை, ஏறுடைய எம் சிவனை வேண்டியே, அருள்பெற்று வேண்டியமட்டும் சேர்த்துச் செங்கோல் தனைச் சமைத்தார். எங்கோவாம், ஆதீனத்தார். என்று புலவர் பாடி இருப்பார், இந்தச் சம்பவத்தைச் சிறப்பிக்க ஓர் பாடல் சைவ மெய்யன்பருக்குத் திருப்தி இருந்திராது. சீற்றம் பிறந்திருக்கும் காரணத்தோடு.

**சைவர்:**

பாசுரம் பாடுகிறீர் - பாசுரம்! ஓலைச்சுவடியும், கையுமாக ஓராண்டா, ஈராண்டா, பத்தாண்டுகளாக உள்ளீர். பழுத்த பூசணியென வயிறு பருத்ததன்றி, புலமை காணோமே?

**புலவர்:** கவிதையிலே, குறை உளதோ?

**சைவர்:** அதில் மட்டுமிருப்பின் பொறுத் திடலாமே! யூகம் இல்லையே! பாசுரம் எதுக்குப் பாடுகிறீர்?

**புலவர்:** ஆதீனச் சிறப்பை விளக்க

**சைவர்:**

ஆதீனச் சிறப்பா? இருக்கும் சிறப்புடன் இன்று புதிதாக ஆதீனம் தனிச்சிறப்புப் பெற, செங்கோல் சமைத்து அனுப்பும் சம்பவமன்றோ முக்கியம்? அதற்கன்றே பாடல்?

**புலவர்:** ஆமாம்!

**சைவர்:**

அங்ஙனம் என்று, உமது பாடலில் எங்ஙனம் விளக்கியுள்ளீர்? செங்கோலின் பருமன், உயரம், எடை, அழகு, இவைபற்றிய குறிப் பெங்கே? முக்கியம் அஃதன்றோ? சம்பவத்தின் சிலாக்கியம் அப்போதன்றோ விளங்கும். செப்பனிடும், முதலில் செய்யுளை! பிறகு உம்

புத்தியை! அடி அய்ந்து உயரம் ஆகும். ஆனதோ அழகான செம்பொன் வடிவழகு கொண்டதாம் வேலை ஞாலம் புகழ்ந்திடுமாம் எஞ்ஞான்றும் இந்நாளை! பாதகமில்லை! போம்! என்று கூறி, சைவ, மெய் யன்பர். புலவரை அனுப்பிவிட்டு, பாடலை, பக்தர்களுக்குச் சமர்ப்பித்து இருக்கக்கூடும். புகழைப் பதிவு செய்து கொள்ளும் முறை அது. செங்கோலைச் சமர்ப்பிக்க வந்த கூட்டத்தில், சிவந்த மேனியும், கலைக்கண்களும் படைத்தவர் ஒருவர், கட்செவியும் மயங்கும் வகையில் நாதஸ்வரம் வாசித்திட்டது அறிவீர். அவரைக் கண்டபலர். என்ன பேசிக் கொண்டிருப்பர்? யார் இவர்? நாதஸ்வர வித்வான்! ஓஹோ! இவர் வந்துள்ள காரணம்? செங்கோலைத் தருவதற்கு ஆதீனம் இவரை அனுப்பியிருக்கிறார். செங்கோல் தரும் ஆதீனம் எப்படி இருப்பார்? சிவப்பழமாக! என்ன வேலை செய்கிறார்? ஆதீனத்தை நடத்து கிறார்! எங்ஙனம்?

உரத்த குரலில் கூறட்டுமா, மெல்லிய குரலிலா? ஏன்? ஏனெனில், இருவிதமான குரலில் கூற, இருவகை உண்டு! என்று பேசிவிட்டுச் சிரித்திருப்பார்கள். பார்த்தால், அழகாகத் தெரியும். அந்தச் செங்கோலை, மற்றோர் முறை பாரும். சற்றுக் கூர்மையுடன்! ரிஷபம் மட்டுமல்ல, தெரியக்கூடியது, மாடென உழைக்கும் ஏழைகள் பலரும் தெரிவர். இழைப்பு வேலைமட்டுமல்ல தெரியக்கூடியது உழைப்பை உறிஞ்சுவதால், மேனியில், உளுத்தவர்களுக்கு ஏறியுள்ள மினு மினுப்பும் தெரியும். ஆயிரம் வேலி நிலம் தெரியும், அதை உழுது பயிரிட்டு அழுது வாழும் பாட்டாளியின் உருவம் தெரியும். அவன் வதையும் குடிசை தெரியும். அங்கு செங்கோல் செலுத்தும் வறுமை தெரியும்! மிட்டா மிராசு தெரியும், அவர்களின் மோட்டார் பங்களா தெரியும். தங்கத் தட்டும் தெரியும் அதிலே வெண்ணிறத் தூசும் தெரியும்! சுழலும் கண்கள் தெரியும். சோர்ந்த உடலும் தெரியும். வியர்வை தெரியும். பொழிந்த இரத்தம் தெரியும். மத்தடி பட்ட தயிர் போன்ற சித்தம் கொண் டவரின் உருவம் தெரியும்! மடம் தெரியும் - அங்கு உலாவும், சிவஜடம் தெரியும். உடலில் அணி தெரியும் - உள்ளே பிணி உள்ளது குறிப்பாகத் தெரியும்! தோட்டம் தெரியும், நீராடத் தனக்குதவும் குளமும் தெரியும் அக்குளம் பேசுமேல் பலப்பல குட்டிக்கதைகள் தெரியும். சைவம் தெரியும். பலர் அதன் அருள் பெற்று, உயர்ந்த 'வகையும்' தெரியும். மின்னிடும் மோதிரமும் செவியில் குலுங்கிடும் குண்டலமும் தங்கப் பாதக் குறடும், தாங்கிடும் பக்தர்களும், எனும் இவ்விதக் காட்சிகள், இன்னும் பலப்பல, மின்னி மின்னித் தெரியும்- செங்கோலை மீண்டும் மீண்டும் பார்த்தால்!

ஆதீனம் வந்து போனவரின் அடையாளப் பேச்சுப் பேசுவோர், 'ஆஹா! அருமை! அருமை! ஆனாலும் சிரமம் அதிகம் ஆதீனம் ஆனந்தம் அடைந்தது, நம் பாக்கியம்' என்று அகம்மகிழாவிட்டாலும் முக மகிழ்ந்து போகும் அடியார்களைக் காணலாம்! மற்றும் பலப்பல தெரியும். ஆனால், மாற்றுக் குறையாத பசும்பொன்னால் செய்தது, உயரம் அய்ந்தடி உன்னதம் வேலைப்பாடு என்ப வனற்றைச் சற்று. மறந்து பார்க்கவேண்டும், செங்கோலை. அப்போதுதான் தெரியும் சிற்றரசன், சீமான், என்போரேனும் மக்களின் சீற்றம் கிளம்பிப் பாயுமோ தம்மேலே என்று ஆயாசமடைவர், ஆனால் இந்த ஆதீனங் களோ, அச்சம் மிகுந்த மக்கள் தமது அடி தொழ, சர்க்கார் பாதுகாப்புத் தர, பணம் படைத் தோர் படை பல தர கொலு வீற்றிருக் கிறார்கள் பயமற்று, கவலையற்று என்பது.

செங்கோல் - ஒரு வேண்டுகோள்; காணிக்கை அல்ல! அன்பின் அறிகுறியல்ல! நாட்டுப்பற்றை விளக்கும் சின்னமல்ல! வேண்டுகோள்! ஆளவந்தாரோ, மக்களைத் தாளில் விழச்செய்து, ஈடில்லாத புகழும் பொருளும் பெற்றுள்ள இந்த ஆதீனங்களைக் கலைத்து விடவேண்டுமென்று, ஏதேதோ கற்றோமென்று கூறிக்கொள்ளும் ஒரு கூட்டம் பேசிடும் காலம் இது, எமது ஆட்சி முடியுங்காலம் என்று பேசுகின்றனர்.

நாங்கள், பரம சாதுக்கள்! உம்மிடம் அபாரமான ஆசை கொண்டவர்கள். சந்தேகமிருப்பின், செங்கோலை மற்றோர் முறைபாரும், அய்ந்தடி உயரம், அருமையான வேலைப்பாடு - எமது ஆதீனம், புதுமுறை வேண்டுபவரின் புன்மொழிக்கு ஆளாகாமல் இருக்கச் செய்யும். எமக்கு இறவாவரம் தாரும். எம்மானே, நேருபெம்மானே! இறவாவரம் தாரும் - இன்னுமோர் இருபதாண்டு களுக்கேனும், இறவா வரம் தாரும், என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்- சைவ மெய்யன்பர்.

இந்தக்கோல் கொடுத்ததன் மூலம், தமக்கும், புதிய சர்க்காருக்கும், சினேகம் இருப்பதாகக் காட்டிக் கொள்வதன் மூலம், மேலும் பாமரரை மயக்கவிரும்புகிறார். நேரு சர்க்காரின் நேயரான ஆதீனம் ஏற்கெனவே சிவநேசத்தையும் பெற்றிருக் கிறது, எனவே, அதன் ஆதிக்கம் குறையாது, குன்றாது, என்று பாமரர் நம்ப இடமேற்படுகிறது இதனால்,

இவ்வளவும் தங்கம்! முற்றும் துறந்த முனிவர்களின் வழி வழிவந்தோரான, ஆதீனகர்த்தாவின் சுவாதீனத்திலுள்ள ஏராளமான செல்வத்திலே இது ஒரு சிறு, மிக மிகச் சிறுதுண்டு! ஆதீனத்திலே, நவரத்னங்கள் உள்ளன. பேழைகளிலே! நவரத்னங்களிலும் மேலான, செந்நெல்மணி விளையும், வளமான வயல்கள் உள்ளன ஆதீன ஆட்சியிலே, மனித குல மாணிக்கங்களான பாட்டாளி மக்கள், அங்கு வதைகின்றனர்.

எத்தர்கள், இந்த ஆதீனகர்த்தாக்களை, சித்தர் என்று கூற, ஏமாளிகள் மயங்கிக் குவிக்கும் ஏராளமான பணத்திலே, சிதறியதிலே சிறிது, செங்கோலாகி உம்மிடம் வந்திருக்கிறது. தோடாக, பாடகமாக, தொங்கட்டமாக, உருவெடுத்த பொருள் இதனினும் அதிகம்!

இறவாவரம் தரச்சொல்லி, விடுத்துள்ள இந்தச் செங்கோல், எத்தகைய செம்பொன்னால் ஆக்கப்பட்டிருக்கிறதோ. அத்தகைய பொன், குன்றுபோலுள்ள காட்சியைக் காணலாம்.

இத்தகைய ஆதீனங்கள். மதஸ்தாபனங்கள் ஆகிய இடங்களிலே உள்ள பொருளைப் பறிமுதல் செய்தால் அந்தப் பொருளை, நாட்டு மக்கள் வாழ்வை வளமாக்கும், செங்கோல் இன்றுள்ளது போல ஆதீனம் தரும் அலங்காரக் கோலாக மட்டுமின்றி, மக்களின் வாழ்வை உயர்த்திடும், மாண்பு பெறும், அந்தச் செங்கோலை அடிக்கடி பார்த்து, அது புகட்டும் பாடத்தைக் கூர்ந்து கவனிக்க வேண்டுகிறோம்.

**- "திராவிட நாடு", 24.8.1947**
**(நன்றி விடுதலை நாளிதழ், மே 26,2023)**


**குஜராத்:2002**

**பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான கொடூரங்கள்**

**விலை 150/-**




- கற்பழிப்புக்கு சம்பவங்களை (சிறுமிகள் உள்ளிட்ட) நேரில் கண்டவர்களின் வாக்குமூலங்கள் :

- நரோதாபாட்டியா, அஹமதாபாத், பிப்ரவரி 28, 2002. "கங்கோத்ரி குடியிருப்பிலிருந்து எங்களை வெளியேற்றிய பிறகு எரியும் டயர்களோடு கும்பல் எங்களைத் துரத்த ஆரம்பித்தது. அப்போதுதான் பல சிறுமிகளை அவர்கள் கற்பழிப்பு செய்தார்கள், நாங்கள் 8–10 சம்பவங்களைக் கண்டோம். பதினாறு வயது மெஹருன்னிஸாவின் ஆடைகளை உரித்ததை நாங்கள் பார்த்தோம். தங்களின் ஆடைகளை அவிழ்த்து விட்டு அவர்கள் பெண்களை நோக்கி அழைத்தார்கள். அதன் பிறகு அங்கங்கே தெருவிலேயே வைத்து அவர்கள் பெண்களை கற்பழிப்பு செய்தார்கள். ஒரு சிறுமியினுடைய பெண் உறுப்பு வெட்டி பிளக்கப்பட்டிருப்பதைக் கண்டோம். பிறகு எல்லோரையும் எரித்து விட்டார்கள். எந்த ஆதாரத்தையும் விட்டு வைக்க வில்லை."

கூறியவர் : குல்சும் பீவி, ஷா ஆலம் முகாம் – மார்ச் 28, 2002.

வேர்கள்
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்

**போன் : 7401213394 / 7358278146 / 8148129887**

# தியாகம் செய்வோம்

ஒவ்வொரு வருடமும் துல்ஹஜ் மாதம் நமக்கு இப்ராஹிம் நபியின் தியாகத்தை நினைவூட்டுகிறது. அல்லாஹ் இந்த நினைவூட்டுதலை ஏற்படுத்தியதன் நோக்கம் மூஃமின்கள் மார்க்கத்திற்காக தியாகம் செய்ய முன்வர வேண்டும் என்பதற்காகத்தான். இந்தத் தியாக உணர்வு மறுமைநாள் வரை தொடர வேண்டும் என்பதற்காகத்தான் அல்லாஹ் குர்பானியை ஏற்படுத்தி உள்ளான்.

இஸ்லாமிய மார்க்கம் பல தியாகங்களின் பின்னணியில் நம்மை வந்தடைந்துள்ளது. அல்லாஹ் சஹாபாக்களின் தியாகத்தை பற்றி இவ்வாறு சிறப்பித்து கூறுகிறான்:

முஃமின்களில் நின்றுமுள்ள மனிதர்கள் அல்லாஹ்விடம் அவர்கள் செய்துள்ள வாக்குறுதியில் உண்மையாக நடந்து கொண்டார்கள்; அவர்களில் சிலர் (ஷஹீதாக வேண்டும் என்ற) தம் இலட்சியத்தையும் அடைந்தார்கள்; வேறு சிலர் (ஆர்வத்துடன் அதை) எதிர் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் – (எந்த நிலைமையிலும்) அவர்கள் தங்கள் வாக்குறுதியிலிருந்து சிறிதும் மாறுபடவில்லை. (அல்குர்ஆன் : 33:23)

உங்களுக்கு முன்னே சென்று போனவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் உங்களுக்கு வராமலேயே சுவர்க்கத்தை அடைந்து விடலாம் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? அவர்களை (வறுமை, பிணி போன்ற) கஷ்டங்களும் துன்பங்களும் பீடித்தன; “அல்லாஹ்வின் உதவி எப்பொழுது வரும்” என்று தூதரும் அவரோடு ஈமான் கொண்டவர்களும் கூறும் அளவுக்கு அவர்கள் அலைகழிக்கப்பட்டார்கள்; “நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி சமீபத்திலேயே இருக்கிறது” (என்று நாம் ஆறுதல் கூறினோம்.)(அல்குர்ஆன் : 2:214)

மேலும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள் மார்க்கத்திற்காக தியாகம் செய்யாமல் அல்லது அதைப்பற்றி மனதளவில் கூட எண்ணாமல் யாராவது மரணித்தால் அவர் நயவஞ்சகராக மரணிக்கிறார் (நூல்: முஸ்லிம்)

தலையங்கம்

உமர்(ரலி) அவர்கள் இவ்வாறு பிரார்த்தனை செய்வார்கள் : “யா அல்லாஹ் எனக்கு உன் பாதையில் உயிர் தியாகம் செய்திடும் பாக்கியத்தையும் இன்னும் உன் ரசூலுடைய பூமியில் மரணிக்கும் பாக்கியத்தை கொடுப்பாயாக.”

மூஅத்தா போரில் ஜைதுப்னு ஹாரிஸா, ஜஃபர் இப்னு அபூதாலிப், அப்துல்லா இப்னு ரவாஹா என ஒருவர் பின் ஒருவராக ஷஹீதாக்கப்படுவார்கள் என்று தெரிந்தும் இறைவனுக்காக உயிர் தியாகம் செய்யப் புறப்பட்ட தன்னலமற்ற தியாகங்களை நினைவு கூர்ந்து நடந்திட வேண்டும்.


ஒருமுறை சஹாபாக்களின் கூட்டத்தில் ஒற்றை வார்த்தையில் அபூபக்கர்(ரலி) அவர்களின் தியாகத்தை பற்றி கூறினார்கள். ஒருவருக்கும் நான் பிரதி உபகாரம் செய்ய வேண்டியதில்லை அபூபக்கர்(ரலி) அவர்களை தவிர. அண்ணார் தீனுக்காக செய்த தியாகங்களுக்கு அல்லாஹ் கூலி கொடுப்பான் என்றார்கள்.

முஸ்அப் பின் உமைர்(ரலி) அவர்கள் மார்க்கத்திற்காக, உறவுகளையும் செல்வங்களையும் விட்டு வந்தார்கள். இஸ்லாத்தின் முதல் அழைப்பாளராக மதீனா சென்று தாவா செய்தார். ஏழ்மை நிலையிலேயே வாழ்ந்து அவர் அதே நிலையில் ஷஹீதானார்.

இப்படிப்பட்ட தியாக வரலாறுகள் இஸ்லாத்தில் ஏராளம் உள்ளது. இவைகளை வெறுமனே பேசி கழைவதோடு சென்று விடாமல் நம் வாழ்விலும் தியாகத்தை கொண்டு வர வேண்டியது இன்றைய காலத்தில் கட்டாயமாக உள்ளது. மார்க்கத்திற்காக நாம் செய்யும் தியாகங்களை அல்லாஹ் ஏற்று அருள்புரிவானாக.

# பொது சிவில் சட்டம்

## வருமா..? சட்ட ஆணையம் சொல்வதென்ன..?



இன்றைக்கு இருக்கின்ற ஒன்றிய அரசு தங்களுடைய பழைய பதிவுகளை தூசிதட்டி எடுத்து மீண்டும் 2024 தேர்தலுக்காக சில வகுப்புவாத, சமுதாயத்தைப் பிளந்து, பிரித்து போடுகின்ற யுக்திகளைக் கையாண்டு வருகிறார்கள்.

அதிலே ஒரு பகுதியாக இந்த மாதம் முதற்கொண்டு பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவருவோம், அதற்கான முயற்சியை செய்வோம் என்று பேசி வருகின்றார்கள்.

இது எதைக் காட்டுகின்றது என்று கூறினால், "எங்களிடத்திலே உங்களிடம் சொல்வதற்கு கைச்சரக்கு எதுவுமில்லாததால் நாங்கள் மீண்டும் 200 ஆண்டு காலமாக பரப்பிவந்த அல்லது பிதற்றி வந்த கருத்துக்களையே அல்லது கலவரங்களையே செய்யத் தயாராகியிருக்கிறோம், வேறு வழியில்லை எங்களுக்கு ஆட்சியில் இடம் பெறுவதற்கு" என்பதை தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

பத்திரிகைகள் வழியாகவும், தலையங்கங்கள் வழியாகவும் இதனைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். பொது சிவில் சட்டம் என்பது நடக்காத ஒன்று, இதை 2018 இல் இதே அரசு நடத்திய ஆய்வுவொன்றில் தெளிவு படுத்தியிருக்கிறது.

அப்பொழுது மக்களிடம் கருத்து கேட்கும் விதமாக சட்ட ஆணையம் கேட்ட அந்த கருத்து கணிப்பில் அவர்கள், இது முடிவும் பெறாது, தேவையானதுமல்ல என்ற கருத்தையே வலியுறுத்தினார்கள்.

இப்பொழுது மீண்டும் அதேபோல் ஒரு கருத்து கணிப்பு காகிதத்தை மக்களுக் கெல்லாம் நாங்கள் கொடுப்போம், அதில் உங்களது கருத்துக்களை எல்லாம் சொல்ல வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் இதனால் நடக்கப்போவது எதுவுமில்லை. உங்களுடைய அரசியலில் மக்களுடைய கவனத்தை, உங்களுடைய தோல்விகளிலிருந்து மக்களுடைய கவனத்தைத் திருப்புவதற்காக அல்லாமல் இதனால் இப்பொழுது எந்த அவசியமுமில்லை என்பதை அனைவரும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

2018ல் சட்ட கமிஷன் நடத்திய அந்த ஆய்வில், நீங்கள் ஒரிரண்டு விஷயங்களில் நெகிழ்வுத் தன்மையைத்தான் காட்ட வேண்டியிருக்கும், அந்த நெகிழ்வுத் தன்மை எந்தெந்த விஷயங்களில் வரும் என்று சொன்னால் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை மற்றும் குழந்தை தத்தெடுப்பு போன்றவற்றில் ஏற்படும். இவை எதுவுமே முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டதாக இல்லை. முஸ்லிம்களை பொறுத்த வரைக்கும் அவர்களுக்கு தெளிவான திருமணச் சட்டங்கள் இருக்கின்றன. முதன் முதலாக திருமணத்தைப் பதிவுசெய்து கொள்கின்ற, ஒப்பந்தமாக எழுதிக் கொள்கின்ற முறையை எல்லோரிடமும் செய்துகாட்டியது முஸ்லிம்களுடைய நடைமுறை.

அடுத்து விவாகரத்து, என்னால் பல உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகளை எடுத்துக்காட்டிட முடியும். இந்த விவாகரத்தை பொருத்தளவில் அனைவரும் இஸ்லாத்தைப் பின்பற்றுங்கள் என்று சொல்லாத குறையாக அனைத்து நீதிமன்றங்களும் கூறி இருக்கின்றன.

அண்மையிலேயே உச்ச நீதிமன்றம் அதனிடத்தில் வந்த வழக்கை வைத்துக் கொண்டே கூறியது. இவர்கள் கீழ் நீதிமன்றங் களிலிருந்து உச்சநீதிமன்றம் வரை வரக்கூடிய அந்த காலத்தை அவர்கள் வேறு வழியிலே செலவழித்து இருக்கலாம். கீழ் நீதிமன்றங்கள் அவர்களுக்கு இதனை அறிவுறுத்தி இருக்கலாம்.

என்னவென்று சொன்னால் இரண்டு பேருமே சேர்ந்து வாழ முடியாது என்று முடிவுசெய்யும் பொழுது, கணவன் மனைவியோடு சேர்ந்து வாழ முடியாது என்று முடிவு செய்கிறான், மனைவி அந்த கணவனோடு வாழ முடியாது என்று முடிவு செய்கிறாள்.

அதாவது இருவரும் தங்களுக்குள் நிறைய முரண்பாடுகள் இருக்கின்றன அதனால் நாம் பிரிந்து விடுவோம் என்று நினைக்கக் கூடிய விஷயத்தில் கூட உச்ச நீதிமன்றம் வரை அலைக்கழிக்கிறீர்களே, இதனை அவர்களாகவே பேசி தீர்த்துக் கொள்ளலாம். அவர்களாகவே தங்களுடைய திருமணத்திலிருந்து விடுவித்துக் கொண்டு அவரவர் தங்களுடைய வாழ்க்கையை தொடங்கலாம்.

அந்தப் பெண் தன்னோடு ஒத்துப் போகிற ஆணோடு அடுத்த வாழ்க்கையைத் தொடங்கலாம். அந்த ஆண் தன்னோடு ஒத்துப்போகிற ஒரு பெண்ணோடு அடுத்த வாழ்க்கையைத் தொடங்கலாம். அவர்களுடைய இளமை வீணாகின்ற அளவிற்கு அனைத்து நீதிமன்றங்களுக்கும் அலைக்கழிக்கவே தேவையில்லை என்று உச்சநீதிமன்றம் கூறி இருக்கிறது. அதே கருத்தையே டெல்லி உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பில் கூறியுள்ளது. ,நிறைய உயர் நீதிமன்றங்களும் இவ்வாறே கூறுகின்றன.

உங்களுக்குள்ளாக ஒப்பந்தம் இருக்கிறது என்றால் நீங்களாகவே பிரிந்துகொள்ள வேண்டியதுதானே. ஆனால் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டும், விவாகரத்து வாங்க வேண்டும் என்று சமுதாய பார்வையே தெரியாதவர்கள், சமுதாயத்தை பற்றி கவலைப் படாமல் எவனைக் கொன்றால் ஆட்சி கிடைக்கும், எங்கே குண்டு வைத்தால் ஆட்சி கிடைக்கும் என்று வருபவர்கள் இதை யெல்லாம் புரிந்து கொள்ள மாட்டார்கள்.

ஆக விவாகரத்து சட்டங்களிலும் இஸ்லாம் தெளிவாக இருக்கிறது. இன்னும் கனிவோடு இருக்கின்றது. பெண்களுக்கு சாதகமாக இருக்கின்றது. ஆனால் நீங்கள் முத்தலாக் கூடாது, அது இதுவென்று அலைக் கழித்தாலும் சமுதாயம் கலங்கிப்போய் விடவில்லை. சமுதாயத்திற்கு அல்லாஹ் வேறு வழிகளை காட்டியிருக்கின்றான். குலா முறையை அவர்கள் அதிகமாகப் பயன் படுத்துகிறார்கள், சம்சுல் இஸ்லாம் அவர்கள்

மேற்கொண்ட ஆய்வு ஒன்று இதனை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

அடுத்தது சொத்துரிமை. இந்த உலகத்திலே முதன்முதலாக பெண்களை கண்ணியமாக மதித்து, சமமாக கூட அல்ல அதற்கும் மேல் மதித்து அவர்களுடைய பலவீனங்களை மனதில் வைத்துக்கொண்டு அவர்களுக்கு நீங்கள் தாராளமாகக் கொடுங்கள் என்று அவர்களுக்கு எல்லா சொத்துக்களிலும் உரிமை உண்டு என்று கூறிய மார்க்கம் இஸ்லாம். சொத்துரிமையிலும் இஸ்லாம் தெளிவான சட்டங்களைக் கொண்டுள்ளது.

அடுத்தது குழந்தை தத்தெடுப்பு. இந்த குழந்தைத் தத்தெடுப்பு இந்தியாவிற்கே உள்ள ஒரு பிரத்தியேகமான பிரச்சனை. ஏனெனில் அன்றைய நாட்களில் கணவன் இறந்து விட்டால், மனைவியையும் தீயிலிட்டு எரித்து விடுவார்கள் எனில் பிறந்த குழந்தைகளுக்கு என்ன விடிவு?

அவர்களை யார் பாதுகாப்பார்கள் என்பது இந்தியாவிற்கே உள்ள பிரச்சனை. ஆனால் முஸ்லிம்களிடம் அந்தப் பிரச்சனை இருக்க வில்லை. அங்கே எல்லாம் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இன்னாருக்கு இன்னார் பாதுகாவலராக இருப்பார். இல்லை யென்றால் பைத்துல்மால் பாதுகாப்பாக இருக்கும். இவை அனைத்திற்கும் சகல வலி நிவாரணி மாதிரியே பைத்துல்மால் செயல்படும். ஆக இந்த மாதிரியான எந்த பிரச்சனைகளும் முஸ்லிம்களுக்கு கிடையாது.

இப்பொழுது சட்ட கமிஷன் சொல்லக் கூடிய அறிக்கையிலும், நீங்கள் நெகிழ்வுத் தன்மையைத்தான் காட்ட முடியுமே தவிர, நீங்கள் ஒரு பொது சிவில் சட்டத்தை கொண்டு வர முடியாது என்று கூறுகிறது. இதனை இது எப்போது கூறுகின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

**1950-1952** வருடங்களை நமது அரசியலமைப்பு நிர்ணயச் சட்டத்தின் காலம் என்று கூறலாம். அப்பொழுதே **44**வது சரத்தை கொண்டு வந்தார்கள், பொது சிவில் சட்டம் “ஏற்றுக்கொள்ளத்தக்கது” என்று கூறினார்கள். இப்பொழுது **76** வருடங்களுக்கு பிறகு என்ன முடிவு செய்தோம்? இதையெல்லாம் முடியாது என்று முடிவு செய்தோம்.



இதனை முடிவு செய்வது முஸ்லீம்கள் அல்ல, உங்களுடைய சட்ட கமிஷன், அதிலுள்ளவர்கள் உங்களது ஆட்களே, அவர்களே இதில் நெகிழ்வுத்தன்மை வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவில் இருக்கிறது.

இந்த தனிப்பட்ட சட்டங்களான திருமணம், விவாகரத்து, சொத்துரிமை மற்றும் தத்தெடுப்பு இவைகளுக்கான ஒரு வரலாற்று பின்னணி உண்டு. என்ன பின்னணி என்றால், இந்து குறியீட்டு மசோதா (Hindu Code Bill) என்ற ஒன்றை, இதைப்போலவே இந்து சட்டங்களை எல்லாம் ஒன்றாக இணைத்து (அவர்களுக்கான பொது சிவில் சட்டம் என்று வேறு வார்த்தைகளில் கூறலாம்) இதனை கொண்டு வர வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கர் அவர்களிடமே கொடுத்து, டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இரவு பகலாக உழைத்து அதனை ஒன்றாக இணைத்து கொண்டு வந்தார். அதனை முதன் முதலில் எதிர்த்தது இந்தியாவினுடைய முதல் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்.

இந்து சமுதாயத்திற்கு ஆபத்தை ஏற்படுத்துகிறீர்கள் என்று சொன்னார்.



பொதுவாக ஒரு சட்டத்தை கொண்டு வந்தால் இந்து சமுதாயத்தை அக்குவேர் ஆணிவேராக பிரித்துப் போட்டுவிடுவீர்கள் என்று கூறினார். அதன் பிறகு விவாகரத்து சட்டங்கள் எல்லாம், எளிதாக இருக்க வேண்டும் என்று பெண்ணிய அமைப்புகள் அனைத்தும் சொன்னபோது, இந்து பெண்கள் அமைப்பு என்ற ஒன்றை கண்டுபிடித்து, அதைக் கொண்டு பல தீர்மானங்கள் போட்டு, இறுதியில் அம்பேத் கருடைய அந்த சட்ட ஒருங்கிணைப்பை நேரு ஏற்றுக் கொண்டு, மந்திரி சபையில் ஏற்றுக்கொண்டு பிறகு அரசியலமைப்பு அவைக்கு வரும்பொழுது காலை வாரினார் நேரு.

மானமுள்ள அம்பேத்கர் என்ன செய்தார் தெரியுமா? பதவியை ராஜினாமா செய்தார். கடுமையான வார்த்தைகளில் கடிந்து கொண்டார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே ஒரு மிகப்பெரிய பேச்சாளர் அன்றைக்கு கூறிய வார்த்தையை, கூறினார். அது "It is easy to give power, but hard to give knowledge", அதிகாரத்தை தந்துவிடுவது எளிதாகிறது, அறிவைத் தருவது மிகவும் கடினமாக இருக்கிறது என்று கடுமையாகக் கூறினார்.

இன்றைக்கும் அதைப் பற்றி எழுதுகின்ற அனைத்து எழுத்தாளர்களும், நேருவிற்கு எதிராக அந்த வார்த்தையை கூறுகின்ற தைரியம் அம்பேத்கர் அவர்களுக்குத்தான் இருந்தது. அம்பேத்கர் இந்த பொது சிவில் சட்டத்தைப் பற்றி என்ன கூறினார்? தானாக முன்வந்து ஏற்றுக் கொண்டால் பாருங்கள் இல்லையென்றால் விட்டுவிடுங்கள் என்று கூறினார்.

இதனை டாக்டர் தாகிர் மகமூத், இதற்கு முன் இது பிரச்சனையாகும்போது எந்த நாடாளுமன்றமும் சட்டம் இயற்ற இயலாது, அந்த சரத்து என்ன சொல்கிறது என்றால், அனைத்து மக்களும் ஒத்துக்கொண்டால் அதிலும் குறிப்பாக சிறுபான்மை சமுதாயத்தின் மீது அதனை திணிக்கக் கூடாது என்று கூறினார்.

ஆனால் இந்த பிரச்சனைகள் எல்லாம் அதாவது திருமணம், விவாகரத்து ,சொத்துரிமை மற்றும் தத்தெடுப்பு உங்களுடன் சம்பந்தப்பட்ட பிரச்சனை. இஸ்லாத்தில் 1400 வருடங்களுக்கு முன்பாகவே மிகத் தெளிவாக இதற்கு வழி காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் அதை வைத்துக் கொண்டே முஸ்லிம்களுக்கு எதிரான சட்டம் போல் காட்டிக்கொண்டிருக்கிறீர்கள். உங்களால் அது முடியாது.

இன்றைக்கு மணிப்பூர் எரிந்து கொண்டிருக்கிறது. ஏன் எரிந்து கொண்டிருக்கிறது தெரியுமா? ஒரு 400 கி.மீ. வட்டாரத்திற்குள்ளாக 400 மொழி பேசக் கூடியவர்கள் இருக்கிறார்களாம். இது அரசியல்வாதியின் கூற்றல்ல, ஒரு சமூக ஆர்வலரின், அந்த மக்களுக்காக அந்த மக்களை ஒன்றுபடுத்துகிற முயற்சியிலே ஈடுபட்ட ஒரு சகோதரியின் கூற்று.

அங்கே ஒரே மொழி என்று கூறினீர்கள், அங்கே எல்லாம் துண்டு துண்டாக போனது. அங்கே கிறிஸ்தவத்திற்கு மக்கள் அதிகமாக இணைகிறார்கள் என்று உங்களுடைய இந்துத்துவாவைக் கொண்டு பிரித்தீர்கள் அனைவரும் ஆயுதத்தை எடுத்தார்கள். இப்பொழுது சண்டை இராணுவத்திற்கும் மக்களுக்கும் கிடையாது, அந்த மக்களுக்குள்ளாகவே சண்டை.

இவர்கள் கொண்டுவந்த குடியுரிமை திருத்தச் மசோதா(CAA), தேசிய குடிமக்கள் பதிவேடு(NRC) ஆகியவைகளை கொண்டு வந்த நேரத்திலும், இந்தியாவின் வடகிழக்கு பகுதியில் இருந்த மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு அமைப்பை ஏற்படுத்தி, ஐந்து மாநிலங்களும் ஒன்றுசேர்ந்து ஒரு அமைப்பை ஏற்படுத்தி, இது எங்களுடைய எதிர்கால தலைமுறைகளை பாதிக்கும் என்று கடுமையான வார்த்தைகளை உபயோகப் படுத்தினார்கள். இந்த குடியுரிமை திருத்த மசோதா எங்கள் எதிர்கால தலைமுறைகளை பாதிக்கும் என்று இன்றளவும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் அதையெல்லாம் உடைப்பதற்காக உங்களுடைய ஒரு மொழி, ஒரு நாடு திட்டத்தை கொண்டு சென்றீர்கள். துண்டு துண்டாகப் போய்விட்டது. 400க்கு மேற்பட்ட அகதிகள் முகாமில், ஒரு சிறிய மாநிலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் மக்கள். அவர்களை சைனாவோ மற்ற நாடுகளோ அனாதைகளாக்கி, சொந்த பூமியிலேயே அகதிகளாக மாற்றிவிடவில்லை,

நீங்கள்தான் மாற்றினீர்கள். ஆகவே நீங்கள் ஒரே விஷயத்தை பேசினீர்கள் என்றால் ஒன்று மில்லாமல் ஆகிவிடும். அன்றைக்கு சிலோன் உடைய நாடாளுமன்றத்திலே ஒருவர் கூறினார் இரண்டு மொழிகளை ஏற்றுக் கொண்டால் ஒரே நாடாக இருக்கும், நீங்கள் ஒரே மொழியைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினால் ஸ்ரீலங்கா இரண்டு நாடாகப்போவதை நீங்கள் தடுக்க முடியாது என்று.

ஆகவே பன்முகத்தன்மை என்பது ஒவ்வொரு சமுதாயத்திலும் உள்ளது, ஒவ்வொரு நாட்டிலும் உள்ளது. புத்திசாலிகள் அனைவரும் இந்த பன்முகத்தன்மையை அங்கீகரித்துக் கொண்டு அனைவரையும் ஒன்றுபடுத்துகிற ஒரு அரசியலமைப்பை எழுதி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் இந்தியாவிலே இருக்கின்ற அரசியலமைப்பு. சிறுபான்மையினருக்கு கொடுக்கப்பட்ட பிரிவுகள் இல்லை என்றால் அவர்கள் அந்த அரசியல் அமைப்பிலே இருக்கவேண்டிய தேவையில்லை என்பது போல் தோன்றும்.

ஆகவே சகோதரர்களே இவர்களுடைய குடியுரிமை திருத்த மசோதா தோற்றுப் போனதற்கான காரணம், அதனை சீர்திருத்த எடுத்த நடவடிக்கை, ஒரு மொழி ஒரு நாடு என்று கொண்டுபோன திட்டம் மணிப்பூரை துண்டு துண்டாக ஆக்கியிருக்கிறது. இன்றைக்கு மக்கள் எல்லாம் ஆயுதம் எடுத்து நிற்கின்ற ஒரு அவலநிலை.

இதில் என்னவென்றால், "ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம் என்பது போல ஸிஷிஷி -ஏ வருத்தப்படுகிறதாம் மணிப்பூர் நிலையைக் கண்டு."

இந்த பொது சிவில் சட்ட விவகாரம் அன்றைக்கே அம்பேத்கரால் தூக்கி வீசப்பட்டது. அம்பேத்கர் அதனை அன்றே கொண்டு வந்தார் நீங்கள் ஒத்துக் கொள்ளவில்லை, அவர் கோபப்பட்டு ராஜினாமா செய்தார் அவர்தான் சூடு சுரணை உள்ள ஒரே மனிதர்.

நம்முடைய துசாந்த் தேவ், அம்பேத்கரை பற்றி பேசும்பொழுது, இந்தியாவினுடைய தார தம்மியங்களைப் பற்றிப் பேசும்பொழுது, ஆயிரம் முறை அம்பேத்கரை பற்றி கூறுகிறார். அம்பேத்கர் மட்டும் சட்ட மேதை அல்ல, வேறு வேறு சட்ட மேதைகள் எல்லாம் இருந்தார்கள் என்று இவர்கள் இடையிலே பசப்பினார்கள். அனைவரும் ஒத்துக் கொள்கிறார்கள், அம்பேத்கர் போன்ற ஒரு தீர்க்கதரிசனமான ஒரு அரசியலமைப்பு அலுவலரை நாம் பார்த்ததில்லை. அவர் அப்போதே கூறியிருக்கிறார் ஜனநாயகம், மக்கள் கும்பலாட்சியாக அல்லது பெரும்பான்மை ஆட்சியாக (Mobocracy) மாறும்பொழுது நாடு சர்வாதிகாரமாக மாறும் என்று.

நீங்கள் ஜனநாயகம் தோற்றுப்போன வரலாற்றைப் படித்துப் பாருங்கள் அல்லது யாராவது ஜனநாயகத்தைத் தூக்கிப் பிடித்திருக்கிறார்களா என்று பாருங்கள்,ஒரு ஜனநாயக நாடு சர்வதிகார நாடானது சர்வதிகாரர்களால் அல்ல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் தான். அதுதான் இப்பொழுது இந்தியாவிலே பாசிசம் கைகோர்த்து ஓடிக்கொண்டிருப்பதன் மிக முக்கியமான அடிப்படையாகத் தெரிகிறது.

மீண்டும் தேர்தல் வருகிறது, இன்னும் ஒரு பத்து மாதங்கள் இருக்கிறது, அடுத்த மே மாதத்தில் தேர்தல் என்றால், மார்ச் மாதத்திலே தேர்தல் விதிமுறைகள் செயலுக்கு வந்துவிடும்

ஒரு நாள் விலைவாசி ஏற்றம் தடுக்கப்பட்டு விட்டது என்கிறார்கள், அடுத்த நாள் விலைவாசி ஏற்றம் பாமர மக்களை பயங்கரமாக பாதிக்கிறது என்றார்கள். ஒரு நாள் நமக்கு சைனா நண்பன் என்கிறார்கள், மறுநாள் நமக்கு சைனா எதிரி என்கிறார்கள். ஆனால் சைனாவில் இருந்து பொருட்கள் இறக்குமதி செய்திருப்பது 15 சதவீதம் அதிகரிக்கப்படுகிறது, ஏற்றுமதி கூடவில்லை இறக்குமதி தான் அதிகமாகி இருக்கிறது. இதையெல்லாம் மக்களிடத்தில் கூறி, இதையெல்லாம் நாங்கள் சாதித்து இருக்கிறோம் என்று கூற முடியவில்லை.

மீண்டும் மத அடிப்படையிலான பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு பொது சிவில் சட்டம் வருகிறது. அன்பார்ந்த சகோதரர்களே குறிப்பாக முஸ்லிம் சகோதரர்களுக்கு ஒன்றை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன், இவர்கள் அமைத்த சட்ட கமிஷனே அதை தவிடுபொடியாகிவிட்டது இனி அது

தலையெடுக்கவே முடியாது. பொது சிவில் சட்டம் என்பது வரவே வராது!

V.T.ராஜசேகர் சொல்வது போல எல்லோரும் மறைமுகமாக ஷரியத் சட்டங்களைத் தான் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பலதாரமணத்தை தடுத்து விடுவோம் என்று சொன்னார்கள் ஆனால் இன்றைக்கு உள்ள புள்ளிவிவரம் எதைக்காட்டுகிறது என்றால் சகோதர சமுதாய அமைப்பில் திருமணமான ஆண்களை விட திருமணமான பெண்கள் அதிகம். காரணம் சில ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை திருமணம் செய்திருக்கிறார்கள் அல்லது திருமணம் என்பது உங்களிடத்தில் முடியாததால் தெரியாமல் மனைவியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் அவ்வளவுதான்.


முதலில் உச்சநீதிமன்றமே பலதாரமணத்தை ஒழுக்கக் கேடானது, சட்டத்திற்கு எதிரானது என்று கூறியது. இப்பொழுது அதே உச்சநீதிமன்றம் இது ஒழுக்கக் கேடானதல்ல சட்டத்திற்கு எதிரானது என்கிறது. அதனை சட்டபூர்வமாக்கிவிட்டால், மக்களுக்கு எளிதாகிறது அவர்கள் மறைந்து மறைந்து வாழ வேண்டிய தேவையில்லை.

உச்சநீதிமன்றத்தில் சகோதரிகள் அனைவரும் சேர்ந்து ஒரு வழக்கு தொடுத்தார்கள், முஸ்லிம்கள் இரண்டாவது திருமணம் செய்து கொண்டால், முதல் மனைவியை போல் அனைத்து உரிமைகளும் அவர்களுக்கிருக்கிறது எந்த பாரபட்சமும் கிடையாது. அந்த உரிமைகளைப் போல் எங்களுக்கும் வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தை நாடுகின்றார்கள். ஆனால் உச்சநீதிமன்றத்திற்கு தைரியமில்லை, அதே உரிமைகளை கொடுங்கள் என்று சொல்வதற்கு. ஆனால் நடைமுறையில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் VT.ராஜசேகரும் சொல்கிறார், அனைவரும் மறைமுகமாக ஷரியத் சட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று.

ஒவ்வொரு சமுதாயத்திலும், அதன் கிளைகளிலும் அதாவது ஜாதிகளிலும் அதன் உட்பிரிவுகளிலும் திருமணத்தை பொறுத்தளவில் வெவ்வேறு முறைகள் இருக்கின்றன. அந்தத் திருமணங்களை அவர்கள் அவரவர் முறைப்படி தான் நடத்துகிறார்கள். கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ முடியாதநிலை ஏற்பட்டால் அவர்கள் சில சாங்கியங்களைத் தொடர்கிறார்கள். இதையெல்லாம் அங்கீகரித்தால் ஒன்றாக இருப்போம். ஆகவே இந்து பத்திரிகையும் இதர பத்திரிகைகளும் சுட்டிக்காட்டுவது போல உங்களுடைய தேர்தலுக்கு பயன்படுவதே தவிர இந்த பொது சிவில் சட்டம் என்ற கோஷத்தால், ஒரே சட்டம் என்ற கோஷத்தால் எந்தப் பலனுமில்லை.

நன்றாக மனதில் வைத்துக் கொள்ளுங்கள் எந்த பாசிஸ்டுகள் இதை வைத்து இவ்வளவு நாள் அரசியல் நடத்தினார்களோ, அவர்களுடைய காலத்திலேயே இதற்கு சாவுமணி அடிக்கப்பட்டது. அவர்கள் போட்ட சட்ட கமிஷனே இது தேவையில்லை, சில விஷயங்களில் நெகிழ்வுத்தன்மை மட்டுந்தான் செயல்படும் என்று சொல்லியிருக்கிறது. இதை இஸ்லாம் 1400 வருடங்களுக்கு முன்பே சொல்லிவிட்டது! அதை மக்களுக்குப் புரியவைப்போம், அந்த முயற்சியில் நிரம்பவே செயல்படுவோம். இன்ஷாஅல்லாஹ்!

**-MGM**


**நூலைப்பெற**

**போன்:**
**7401213394**
**7358278146**
**8148129887**

**விலை ரூ.50/-**

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து




## அப்பாவி ஆப்கானிஸ்தான் மக்களை கொன்று குவித்த

# ராணுவ வீரன்....!

## போர் குற்றவாளி என தீர்ப்பளித்த ஆஸ்திரேலியா நீதிமன்றம்...!

அண்மையில் ஆஸ்திரேலியன் ஃபெடரல் கோர்ட் என்று சொல்லக்கூடிய ஆஸ்திரேலியாவினுடைய நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. அந்தத் தீர்ப்பில் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து, அநியாயங்களைச் செய்து கொண்டிருந்த நாட்களில் ஆஸ்திரேலியாவினுடைய மிகப்பெரிய மாவீரன் என்று கருதப்பட்ட ராணுவ அதிகாரி பென் ராபர்ட் ஸ்மித் என்பவன், பல அப்பாவி ஆப்கானிஸ்தான் மக்களை கொலை செய்தான் என்பது வெட்ட வெளிச்சமாகியிருக்கின்றது.

இந்த மொத்த உண்மையும் வெளியில் வந்ததில் ஒரு பெரிய அதிர்ச்சி, ஆச்சரியம்! என்னவென்றால் இந்த பென் ராபர்ட் ஸ்மித் என்பவன் பல கொலைகளை செய்து கொண்டிருக்கின்ற நேரத்தில் அவனுடைய கழுத்திலே கிராஸ் என்று சொல்லக்கூடிய கிறிஸ்தவத்தை அடையாளப்படுத்துகின்ற ஒரு சிலுவை தொங்கிக் கொண்டிருக்கின்றது. அதை அவன் கழுத்தில் ஒரு போர்வையை கொண்டு மறைத்திருந்தான். அதாவது கைக்குட்டை போல் ஒன்றைக் கொண்டு மறைத்திருந்தான் என்ற உண்மை கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால் ஆஸ்திரேலியாவினுடைய நீதிமன்றத்தில் அது வெளிச்சத்திற்கு வரவில்லை. அவனைப் பற்றி அவனுடைய "வார் க்ரைம்ஸ்" என்று சொல்லக்கூடிய மனித இனத்திற்கு எதிரான யுத்த குற்றங்களை செய்ததை 6 பத்திரிகைகள் பிரபல்யமாக எழுதின. இன்னும்

சொல்லப்போனால் 9 பத்திரிகைகள் என்று சொல்ல வேண்டும்.

The Age..போன்ற பத்திரிகைகள் தொடர்ந்து இவனுடைய அநியாயங்களை எழுதிக் கொண்டிருந்தன. அதில் பட்டவர்த்தனமாக காட்சிப்படுத்துவது,

"ஒரு அப்பாவி ஆப்கானிஸ்தான் பிரஜை போய்க் கொண்டிருக்கும்போது, இந்த நேட்டோ நாடுகளினுடைய அல்லது ஆஸ்திரேலியா உட் பட்ட நாடுகளினுடைய படைகளினுடைய கண்காணிப்பு வாகனம் அங்கே வருகின்றது.

இவர்கள் அந்த பிரஜையை அழைத்து விசாரிக்கிறார்கள். அவர் ஒரு அப்பாவி ஏழை விவசாயி என்பதை தெரிந்து கொண்டு விட்டுவிடுகிறார்கள்.

சற்று நேரத்தில் அங்கே வந்த பென் ராபர்ட் ஸ்மித் எப்படி நீங்கள் அவனை விடலாம்? அவன் நாம் இங்கே உலாவிக் கொண்டிருக் கிறோம் என்பதை முஜாஹித்களுக்கு சொல்லி விடலாம் அல்லவா? என்று காட்டிற்குள் சென்று தேடியிருக்கின்றான் கிடைக்கவில்லை. ஆனால் வேறு மூவர் கிடைத்திருக்கிறார்கள். அவர்களையும் சுட்டுக் கொன்றுவிட்டான். பிறகு இந்த பையனையும் சுட்டு கொலை செய்துவிட்டான்."

இப்படி பட்டவர்த்தனமாக நீதிமன்றத்தில் நிரூபிக்ககூடிய அளவில் அவர்களை கொலை செய்திருக்கிறான்.

பத்திரிகைகள் இதனை எழுதியவுடன், அவன் பத்திரிகைகள் மீது மான நஷ்ட ஈடு வழக்கு தொடுக்கிறான். ஆனால் 2020இல் ஒரு நீதிமன்றம் இது ஒன்றும் பெரிய குற்றச்சாட்டுகள் இல்லை என்று கூறி விடுகின்றது.

2023 ஜூன் ஒன்றில் தீர்ப்பளித்த ஒரு ஆஸ்திரேலிய நீதிமன்றம், "அவன் ஒரு சிலுவையை அணிந்து கொண்டு அப்பாவிகளை கொலை செய்தான்" என்று பத்திரிகைகள் தாராளமாக நிரூபித்துவிட்டன என்று கூறி அவனுடைய மான நஷ்ட ஈடு வழக்கை தள்ளுபடி செய்து, அவனை குற்றவாளி என்பதை பிரகடனப்படுத்தி இருக்கின்றது.

இங்கே பல உண்மைகளை நாம் கவனிக்க வேண்டும்! ஒன்று இவர்கள் ஆப்கானிஸ் தானில் யுத்தம் நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் இவர்கள் ஏதோ ஒரு நிலத்தை ஆக்கிரமித்து



The original photo (left) of Ben Roberts-Smith displaying a Crusader's cross on his uniform while on duty in Afghanistan. The evidence was later edited out (right) in the official photo released by Defence. ADF

இருக்கிறார்கள், இவர்களாக கற்பனையாக குற்றம் சாட்டப்பட்ட பின்லேடன் அங்கே ஒளிந்திருக்கிறார், அவருக்கு ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்து கொண்டிருந்த முல்லா உமர் அவர்கள் அடைக்கலம் கொடுத்திருக்கிறார்கள் என்றெல்லாம் கதைகளைக் கட்டிவிட்டார்கள். இதனால்தான் நாங்கள் ஆப்கானிஸ்தானுள்ளே நுழைகிறோம் என்று சொன்னார்கள்.

ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால் இவர்கள் ஆப்கானிஸ்தான் மீது நடத்தியது, இஸ்லாத்திற்கு எதிரான போரின் முழு கட்டம் என்று தான் சொல்லவேண்டும். ஏனென்றால் இவர்கள் தோற்றபோது The Losing battle with islam என்ற புத்தகங்கள் வருகின்றன.

இவர்கள் அதையெல்லாம் உள்ளடக்கி எழுதிய ஒரு நூலில், நான் அடிக்கடி சொல்வதுபோல "crusade 2.0 The West's Resurgent War on Islam - சிலுவைபோர் 2.0 மேலை நாடுகளின் மறுஉயிர் பெற்ற இஸ்லாத்திற்கு எதிரான போர்" என்றார்கள்.

இப்பொழுது அந்த புத்தகம் புது வடிவில் வந்திருக்கின்றது அதன் பெயர் The West's Unending War against Islam. நாங்கள் தோற்று விட்டோம் என்று நீங்கள் மகிழ்ச்சி அடையாதீர்கள் - சிலுவைப் போர் 2.0 இஸ்லாத்திற்கு எதிரான முடிவற்ற யுத்தம் என அந்த புத்தகத்தின் Revised Editionக்கு பெயர் வைத்திருக்கிறார்கள். அப்படியானால் அங்கு நடந்தது இஸ்லாத்திற்கு எதிரான யுத்தம் அதில் இவர்களை ஆப்கானிஸ்தான் முஜாஹிதுகளும், அல்லாஹ்வும் தான் தோற்கடித்தான் என்பதுதான் உண்மை. இவர்கள் அங்கு இருக்கும்போதே இந்த ஆஸ்திரேலிய வீரன் அல்லது தளபதி ஒரு சிலுவையை அணிந்திருந்தான் என்பது மட்டுமல்ல

அவர்கள் இந்த முடிவற்ற யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும்போது அங்கே முஜாஹிது களுடன் பிடிபட்ட பல அமெரிக்க வீரர்களும், நேட்டோ நாட்டு படைகளினுடைய வீரர்களும் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், "We are not send by the government but by the churches - இங்கே எங்களை அனுப்பியது அரசாங்கம் அல்ல ஆலயங்கள் தான்" என பட்டவர்த் தனமாக சொன்னார்கள்.

இதை நான் எழுதிய தாலிபானின் பிடியில் என்ற நூலில் தெளிவாக குறிப்பிட்டு இருக்கிறேன். அதேபோலப் புஸ்து மொழியிலே அவர்கள் பைபிள்களையும், பைபிளின் சில வசனங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை அவர்கள் ஆக்கிரமித்த இடங்களில் எல்லாம் மக்களிடம் கொடுத்தார்கள் என்ற உண்மையும் அதிலேயே நாங்கள் பதிவு செய்திருக்கிறோம் ஆதாரப் பூர்வமாக.

சில நாடுகளில் செய்த, இஸ்லாத்திற்கு எதிரான எதிரிகள் ஆப்கானிஸ்தான் மக்களை அப்பாவி களை கொலை செய்த துப்பாக்கிகள் பிடிபட்ட போது அவற்றில் சிலுவையின் அடையாளங்கள் இருந்தன என்று பதியப் பட்டு அதை யுவானி ரிட்லி கண்டுபிடித்து அதையும் நான் தாலிபானின் பிடியில் என்ற புத்தகத்தில் சுட்டிக்காட்டி இருக்கிறேன். ஆகவே அவர்கள் அங்கு நடத்திக் கொண்டிருப்பது இஸ்லாத்திற்கு எதிரான ஒரு யுத்தம், அதில் தோல்வி என்பது அவர்கள் இஸ்லாத்திடம் பெற்ற தோல்வி.

அவர்கள் எங்கேயும் இஸ்லாமிய ஆட்சி வர விடமாட்டார்கள் என்பதனால் தான் இன்றைக்கும் ஆப்கானிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டுக் கொண்டிருக் கின்றார்கள்

எர்துகான் இவர்கள் சொன்ன ஜனநாயகப் படியே ஆட்சிக்கு வந்த பொழுது Erdogan not out what to do - எர்துகானை நாம் வெளியேற்ற முடியவில்லை ஆட்சியிலிருந்து என்ன செய்வது? என ஆங்கில பத்திரிகைகள் நமது டைம்ஸ் ஆப் இந்தியா வரை எழுதுகின்றன.

ஆகவே இங்கு நடந்து கொண்டிருப்பவை பற்றி ஜான் பெப்பரின் வார்த்தைகளில் சொன்னால் சிலுவை போர் 2.0 தான். இப்பொழுது பென் ராபர்ட் ஸ்மித் என்பவர் குற்றம் சாட்டப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டு இருக்கிறது, பத்திரிகையாளர்கள் தாராளமாகவே இவர் மீதுள்ள குற்றத்தை நிரூபித்திருக்கிறார்கள். அவர் ஒரு வார் கிரிமினல் என பிரகடனப்படுத்தி விட்டது.

அடுத்த நாள் நமது ஆப்கானிஸ்தான் முஜாஹிதுகள் International Courtஇல் நாங்கள் இவர் மீது வழக்கு தொடுப்போம் என்று கூறி இருக்கிறார்கள். இவர்களை ஆப்கானிஸ்தான் முஜாஹிது களைத்தான் தாலிபான்கள் என்ற (தாலிபான்கள் என்றால் சிறந்த மாணவர்கள் என பொருள் தரக்கூடிய சிறந்த வார்த்தை) அந்த வார்த்தையை கொச்சைப்படுத்தி, தாலிபான்கள் என்ற வார்த்தையை உபயோகப் படுத்தவே கூடாது என்றளவில் செய்தார்கள்.

அதன் பிறகு தோற்ற பிறகு அவர்களை ஆப்கானிஸ்தான் அமீரட், இஸ்லாமிக் அமீரட் - னுடைய உறுப்பினர்கள் என்று தான் சொல்ல வேண்டும். அவர்களை தீவிரவாதிகள் என்று சொல்லக்கூடாது, தாலிபான்கள் என்று சொல்லக்கூடாது என்றெல்லாம் வார்த்தை களை போட்டார்கள்.

இப்பொழுது International Court Of Justice-ற்கு War Criminal - பென் ராபர்ட் ஸ்மித்தை கொண்டு போக வேண்டும் என்று சொன்னால் அமெரிக்கா அதை தடுக்க முயற்சி செய்கிறது. நீங்கள் இதைச் செய்தால் நாங்கள் பல எதிர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிவரும் என அமெரிக்கா அறிக்கை விடுகிறது.

இந்த விஷயத்தை நீங்கள் பன்னாட்டு நீதிமன்றத்துக்கு கொண்டு போவீர்கள் என்று சொன்னால் நாங்கள் ஆஸ்திரேலியாவிலும் மற்ற நாடுகளின் மீதும் பல தடைகளை விதிக்க வேண்டிவரும் என்று பாதுகாக்க விரும்புகின்றது வார் கிரிமினலை.

ஆனால் இவர்கள் ரஷ்யாவின் புட்டினுக்கு Arrest Warrant கொடுத்திருக்கிறார்கள். Briscs meetற்கு வரும்பொழுது புட்டினை கைது செய்ய வேண்டுமா? வேண்டாமா? என்ற ஒரு விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

அந்த அளவிற்கு இவர்கள் நினைப்பவர் களை தண்டிப்பார்கள், இவர்கள் நினைப்பவர் களை காப்பாற்றுவார்கள் என்றளவில் ஒரு பன்னாட்டு நீதிமன்றம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால் பாசிச நீதிமன்றங் களுக்கும், ஜியோனிஸ நீதிமன்றங்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று தான் தெரிகிறது.

ஆனால் ஆப்கானிஸ்தான் முஜாஹிதுகள் பன்னாட்டு நீதிமன்றத்தை மட்டும் நம்பி நிற்பவர்கள் அல்ல என்பதை நாம் அறிவோம். அவர்கள் இது போன்ற நடவடிக்கைகளில் வெற்றி பெறுவதற்கு நாமும் துணை நிற்போம் துவா செய்வோம்.

# வாசகர்கள் அனைவருக்கும்

## ஈதுல் அழ்ஹா பெருநாள் நல்வாழ்த்துக்கள்

áÇÚ?Ç áÇ ãÊÞÈá? áÊÊ

## தகப்பலல்லாஹு மின்னா வ மின்கும்

அல்லாஹ் எங்களிடமிருந்தும், உங்களிடமிருந்தும் நற்செயல்களை ஏற்றுக் கொள்வானக!

இவண்

## தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்

தலைவர்
**ஜனாப்.மு.குலாம் முஹம்மத் M.A.,**

பொருளாளர்
**பேரா.இல்யாஸ் ரியாஜி M.A.,**

செயலாளர்
**ஹாஜி. முஜிபுர்ரஹ்மான் உமரி**

துணைச் செயலாளர்
**ஹாஜி S.A. அப்துல் ரவூஃப்**

## வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம்

**அன்பகம்**
இஸ்லாமிய கல்விக் கூடம்


**நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்**

**வேர்கள்**
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்

## அதாயி அரபிக் கல்லூரியில் நிகழ்ச்சி







அய்யம் பேட்டை அதாயி அரபிக் கல்லூரியில் மாணவர்களுக்கான தமிழ், ஆங்கிலம், அரபி மொழிகளில் கட்டுரைப் போட்டி, கிராஅத், அதான், துஅக்கள் போட்டி நடத்தப்பட்டது. அதில் வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்களை சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மு.குலாம் முஹம்மது அவர்கள் போட்டியில் வெற்றிப்பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி கவுரவித்தார்.


இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து தங்களது நூலகத்தை பார்வையிட அழைத்தார்கள். ஆர்வத்தோடு சென்ற நாம், நூலகத்தைப் பார்வையிட்டு, நமது ஆலோசனைகளையும் வழங்கினோம். மேலும், வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்களான, பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள், முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?, எது முதலில்?, ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும் போன்ற நூல்களை அன்பளிப்பாக வழங்கினார் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள்.

# ✍CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west's Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**




இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பு பிரச்சாரம், முதல் நாள் தொட்டே நடைபெற்று வருகின்றது. இதற்கு அந்தந்த காலத்தில் கிடைக்கும் அத்தனை ஊடகங்களும் பயன்படுத்தப்பட்டன.

ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக இவை நடைபெறவில்லை. நிரந்தரமான திட்டங்கள், பெரிய அளவில் அந்த நிதி தங்குதடையின்றி கிடைத்திட நிரந்தர ஏற்பாடுகள், அதற்காக 24×7 என உழைத்திட மனித ஆற்றல். அவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு-ஓவர் டைம், சம்பளம் முதல் ஓய்வூதியம் வரை நிரந்தர ஏற்பாடு என அத்தனையும் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன.

வரலாற்றில் இவையெல்லாம் எப்படி நடந்தன என்பதை வைகறை வெளிச்சம் மாத இதழில் தொடராக தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம்.

வெறுமனே இஸ்லாத்தின் எதிரிகள், எப்படி எல்லாம் செயல்படுகின்றார்கள் என்பதை மட்டும் வெளியிடவில்லை அந்த வெறுப்பை, எப்படி முஸ்லிம்கள் வெற்றி கொண்டார்கள்.



எப்படியெல்லாம் முஸ்லிம்கள் இந்த வெறுப்பு பிரச்சாரத்தை தூள் தூளாக்கினார்கள், தவிடு பொடியாக்கினார்கள் என்பதையும் நாம் திகட்டவே கோடிட்டுக் காட்டி வருகின்றோம்.

அந்தத் தொடரை படித்தால் நிறையவே அறிவையும், ஆக்கபூர்வமான செயல் திட்டங்களையும் பெறலாம்.

✍**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**



# ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் வெற்றியும்! இஸ்லாமோஃபோபியா தோல்வியும்!

சிலுவைப் போர் 2.0 என்ற தனது நூலில் ஜான் பெப்ஃபர் பல அரிய வரலாற்றை நமக்குத் திரட்டித் தருகின்றார். இந்த வரலாற்றை நாம் இஸ்லாத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட போரின் வரலாறு என்றால் அது மிகையல்ல.

ஜான் பெப்ஃபர் அவர்களும் இதை ஒழிவு மறைவின்றி, பட்டவர்த்தனமாகவே குறிப்பிடுகின்றார். நூலின் தலைப்பே "Crusade 2.0 The West's Resurgent War On Islam - சிலுவைப்போர் 2.0 மேலை நாடுகளின் மறு உயிர் பெற்ற இஸ்லாத்திற்கு எதிரான போர்."

இந்த நூலின் இன்னொரு பெயர்- இப்போதைய பெயர் "The West's Unending War On Islam - சிலுவைப் போர்கள் 2.0 மேலை நாடுகளின் இஸ்லாத்திற்கு எதிரான முடிவற்ற போர்."

இவையெல்லாம் ஒன்றை தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன. அது இஸ்லாத்தின் மீதான போர்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அவை "Unending" முடிவற்றவை. எத்துணை தோல்விகளைச் சந்தித்தாலும் தொடரும். ஆகவே இஸ்லாமோஃபோபியாவுக்கு, எதிரான நமது போரும் தொடர்ந்திட வேண்டும். இன்ஷா அல்லாஹ் தொடரும்!

10 ஆண்டுகள் 1979 முதல் 1989 வரை நடந்த போரில் வெறுங்கையோடு நின்ற, ஆப்கானிஸ்தான் முஜாஹித்களுக்கு அல்லாஹ் ஆயுத பலத்தையும், அறுதி வெற்றியும் கொடுத்தான்!

அதில் ஆப்கானிஸ்தானில் வாழ்ந்த ஆண்களும், பெண்களும் செய்த தியாகங் களையும், எதிர்கொண்ட இழப்புகளையும் எழுத ஏடு தாங்காது. அதில் சர்வதேச இஸ்லாமிய உலகம் எப்படி உதவிசெய்தது என்பதை ஜூன் 2023 அட்டைப்படக் கட்டுரையில் விளக்கியுள்ளேன். சுருக்கமாகச் சொன்னால் இஸ்லாமிய உலகம் ஆப்கானிஸ்தான் முஜாஹித்களுக்கு நிரம்பவே உதவி செய்தது.

வரலாற்றில் மீண்டும் ஒருமுறை திருக்குர்ஆன் -ஐயும், நபி(ஸல்) அவர்களின் வாழ்வையும், வாக்கையும் பின்பற்றி வல்லரசு களை வீழ்த்த முடியும் எனக்காட்டிய வீர வரலாறு, ஆப்கானிஸ்தான் முஜாஹித்தகளின் தியாக வரலாறு!

இதனை "ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு" என்ற நூலில் விரிவாகத் தந்துள்ளோம்.

இஸ்லாத்தின் மீது வெறுப்பை ஊட்டி

Arlington Heights Memorial Library
https://www.ahml.info › record

Crusade 2.0: the West's unending war against Islam [eBook

In his official response to the attacks of September 11, George W. Bush invoked the Crusades, tapping into a centuries-long history of fear and aggression.

You visited this page on 6/6/23.

அன்று வரை எழுதிய நூல்கள் எல்லாம் காலாவதியாகிவிட்டன. கொட்டிய பணமெல்லாம் பாழ்,செலவு செய்த மனித ஆற்றல்கள் காற்றிலே கரைந்தன என்றாலும் கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற அளவில் தங்களுடைய பழைய நூல்களை நவீனப்படுத்தப்பட்டப் பதிவாக வெளியே கொண்டு வந்திருக்கின்றார்கள். அதாவது புதிய தகவல்கள் இணைக்கப்பட்ட பதிவுகளாக என அழைக்கின்றார்கள். அவை நவீனப்படுத்தப் படவில்லை மாறாக தலைகீழாக மாற்றப்பட்டுள்ளன என்பதே உண்மை!


இனி இவற்றை வாங்குவது வீண் செலவு, படிப்பது நேர விரையம் என்ற முடிவு செய்திட வேண்டியதுள்ளது எனினும், எதிரிகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்பது பெருமானார்(ஸல்)அவர்களின் வழிமுறை, அந்த வகையில் மட்டுமே அவர்களின் எழுத்துக்களைப் படிக்க வேண்டும். அவர்கள் இட்டுக்கட்டும் பொய்களுக்கும், புனைந்துரை களுக்கும் பதில் சொல்லிக்கொண்டே இருந்திட வேண்டும்.

ஆனால் அவையெல்லாம் எழுத்துக் குப்பை. முஜாஹித்களின் தியாகங்களின் முன் தூசியளவுக்குக்கூட நின்றிட முடியாதவை. ஒவ்வொரு முறையும் இஸ்லாம் தாக்கப்படும் போதும் இஸ்லாத்தை விளக்கிச் சொல்லிடும் வாய்ப்பொன்று திறக்கப்படுகின்றது என்ற அடிப்படையில் நமது முயற்சிகள் தொடரும்.

ஜான் பெப்ஃபர் அவர்கள் விட்டுவிட்ட இந்த இஸ்லாமிய எழுச்சிக் காலத்தை விவரித்துவிட்ட பின், நாம் அவர் சொல்லும் இதர தகவல்களை கவனிப்போம். இன்ஷா அல்லாஹ்!


# இஸ்லாம் ஒன்றே வழி

புத்தம் புதிய மறு பதிப்பு




- ஒவ்வொரு நாடும். ஒவ்வொரு தனி மனிதனும் கிடைப்பதையெல்லாம் தமதாக்கிக்கொள்ள வேண்டும் என்றே ஆசைப்படுகின்றான். இதுதான் இன்று வல்லரசுகளிடையே காணும் ஊமைச் சண்டைகளுக்குக் காரணம். விவசாயத் துறையில் கண்டெடுத்திருக்கின்ற புதுமையான கண்டுபிடிப்புகள், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இயற்கை வளங்கள், பெட்ரோல், கச்சாப் பொருள்கள் இவையெல்லாம் மனித இனத்திற்கு நன்மை பயப்பதாக இல்லை. மாறாக மனிதனுக்குத் தீமை பயப்பதாகவே இவை மாறியுள்ளன.

- சிறிய நாடுகளெல்லாம் வல்லரசு களின் நயவஞ்சகத்திற்கும், சதிகளுக்கும் உட்பட்டுத் தங்களது மனித உரிமை களையும் சுதந்திரத்தையும் இழந்து நிற்கின்றன. நாம் மேலே சொன்ன கண்டு பிடிப்புகள் பெரிய நாடுகளில் இடம் பெறுமேயானால் அந்தக் கண்டுபிடிப்புகள் மனித இனத்திற்கும் உலக அமைதிக்கும் ஒரு பெரும் ஆபத்தாகவே முடியும். இந்தக் கண்டுபிடிப்புகளெல்லாம் இந்தப் பெரிய நாடுகவர்களின் ஆயுத பலத்தையும் ஆதிக்க பலத்தையும் அதிகப்படுத்தவே பயன்படுத்தப்படும். இதனால்தான் நமது கல்வியறிவு, விஞ்ஞானம், இயற்கை வளங்கள், திறமைகள் இவையெல்லாம் மனிதனை அழிப்பதற்கும் இமைப்பொழுதில் இந்த உலகத்தையே அழிக்கின்ற விதத்திலும் பயன்படுத்தப்படுகின்றன எனக் கூறகின்றோம். - நூலிலிருந்து

வேர்கள் வெளியீட்டகம்

மூலம்: அனிசுத்தீன் அஹமது
தமிழில் : மு.குலாம் முஹம்மது, M.A., in JMC.,

விலை – ரூ.120/–

போன் : 7401213394 / 7358278146 / 8148129887



# சிலுவை யுத்தகாரர்களுக்கு சிகிச்சை அளித்த முஸ்லிம்கள்

நபி(ஸல்) அவர்களது காலத்திலிருந்தே யூதர்களும் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களுக்கு எதிரான சதித்திட்டங்கள், சூழ்ச்சிகள், யுத்தங்கள் போன்ற கெடுபிடிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்நடவடிக்கைகள் தீவிரமடைந்து கி.பி. 11ம்யெடுப்பின் ஊடாக முஸ்லிம் சமூகத்தை அரசிய நூற்றாண்டில் சிலுவை யுத்தங்களாகப் பரிணமித்தன. சிலுவைப் படைல், பொருளாதார, சமய, சமூக ரீதியாகப் பின்னடையச் செய்வதே கிறிஸ்தவர்களதும் யூதர்களதும் முழு நோக்கமாக இருந்தது.

சிலுவை யுத்தங்கள் என்பவை, கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களின் கட்டுப் பாட்டிலிருக்கும் பைத்துல் முகத்தஸைக் கைப்பற்றி, முஸ்லிம்களை அரசியல் ரீதியாகத் தோற்கடித்து, இஸ்லாமிய ஆட்சியை ஒழித்துக் கட்டும் நோக்கில் மேற்கொண்ட யுத்தம் எனலாம்.இதுபோன்ற மாபெரும் யுத்தத்தில் ஆச்சரியமான பல நிகழ்வுகளும் அரங்கேறியுள்ளது.

அவற்றில் ஒன்று போர் நடக்கும் சமயத்தில் சிலுவை யுத்தகாரர்களுக்கு ஏதேனும் காயங்கள் ஏற்பட்டால் உடனே முஸ்லிம்களது போர் முகாம்களுக்கு விரைவார்கள்.

எதற்கு????

ஏனென்றால் முஸ்லிம்கள் கருணை உள்ளம் கொண்டவர்கள்.ஒருபோதும் காயம் ஏற்பட்டவர்களை கொலை செய்ய மாட்டார்கள்.மாறாக அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளித்து, இஸ்லாத்தையும் அழகாக எடுத்து கூறுவார்கள் என்பதை சிலுவை யுத்தகாரர்கள் மிகத் தெளிவாக அறிந்து வைத்திருந்தார்கள்.

மற்றுமொரு முக்கியமான காரணம் போரில் ஏற்படும் காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதில் முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களை (ஐரோப்பியர்களை) விட கைதேர்ந்தவர்கள். அந்த நேரத்தில் கிறிஸ்துவர்களுக்கு தெரிந்தது இரண்டே வைத்திய முறைகள் தான் ஒன்று காயம் அல்லது பாதிப்பு ஏற்பட்ட இடத்தை அப்படியே வெட்டுவது. மற்றொன்று காயம் பட்ட இடத்தில் சூடு காட்டுவது.ஆனால் முஸ்லிம்களோ சிகிச்சை முறைகளை பலவற்றை அறிந்து சிகிச்சை அளிப்பதில் கிறிஸ்துவர்களை விட பன்மடங்கு திறன் வாய்ந்தவர்களாக இருந்தனர்.

:ÑÏÕã
ÈÑÚ¦ÃÑ¦ßÉÈÕ¦ÈÆÑ¦ÈÊß
ÝæÚäíãÃ

**தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**



# ஜூன் மாதத்தில் முஸ்லிம்கள் சந்தித்த பிரச்சனைகள்....!

தாலிபான் அரசு 2022ல் ஆப்கானில் ஆட்சிக்கு வந்த பிறகு தங்களது நாட்டில் வளரும் போதைப்பொருளான ஒபியமை மொத்தமாக குறைத்திருக்கிறார்கள். உலகம் முழுவதற்கும் தேவைப்படும் போதைப்பொருளான கஞ்சா 80%க்கும் மேல் ஆப்கானில் தயார் செய்யப்பட்டு வந்ததாக விக்கிபீடியா தலம் கூறுகிறது. இந்த நிலையில் ஆப்கானில் புதிய அரசு ஆட்சியமைத்து ஒரு ஆண்டில் 90%க்கும் அதிகமான போதைப் பொருள் தயாரிப்பை அழித்திருப்பதாக கூறுகிறார்கள்.




இதை செயற்கைகோள் படங்களின் உதவியுடன் பிபிசி போன்ற செய்தி நிறுவனங்கள் உறுதி செய்திருக்கிறது. உதாரணத்திற்கு 2021ல் 1,20,000 ஹெக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா செடிகள் வெறும் 1000 ஹெக்டராக குறைக்கப்பட்டிருக்கிறது. ஒருபுறம் ஆப்கான் முன்னேற்றப் பாதையில் நகர மறுபுறம் தொடர்ச்சியாக மசூதிகளில், அமெரிக்க பின்புலம் கொண்ட ISIS தீவிரவாதிகள் குண்டுவெடிப்பு தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

ஜூன் மாத தொடக்கத்தில் இருந்து உத்தரக்காண்டில் முஸ்லிம்களுக்கெதிரான கலவரம் நடந்து வருகிறது. 40க்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் ஊரை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இது அனைத்தும் இரண்டு இளைஞர்களால் தொடங்கியதாக சொல்லப்படுகிறது. ஒரு இந்து மதத்தை சார்ந்த ஆணும், ஒரு முஸ்லிம் மதத்தை சேர்ந்த ஆணும் ஒரு பெண்ணை கடத்தியதாக சொல்லப்படுகிறது. முஸ்லிம் ஆணின் பெயர் இருந்தவுடனேயே, இது லவ் ஜிஹாத் என்று கிளப்பி விட இந்துத்துவ அமைப்புகள் இறங்கிவிட்டன.




முஸ்லிம் கடைகளின் முன்னால் எச்சரிக்கை குறியும், இந்த ஊரை விட்டு செல்லுங்கள் என்ற மிரட்டலும் ஒட்டப்பட்டிருக்கிறது. இதில் பதறி போன முஸ்லிம்கள் ஊர் பஞ்சாயத்தை நாடியிருக்கிறார்கள். ஆனால், விஷ்வ இந்து பரிசத் அமைப்பு மாவட்ட நீதிபதிக்கு இந்த பகுதியில் முஸ்லிம்கள் கடை நடத்த கூடாது என்று கடிதம் எழுதியிருக்கிறார். இந்த பிரச்சனை கலவரமாக இன்னும் தொடர்கிறது.

இவர்கள் குறிப்பிடும் பெண் வழக்கில் ஜித்தேந்ர சைனி என்ற இந்து இளைஞனுக்கும் தொடர்பு இருக்கிறது. அவன் மீதும் அதே பிரிவின் கீழ் காவல்துறையில் வழக்கு இருக்கிறது. ஆனாலும், அவன் மேலோ அவன் சார்ந்த மதத்தின் மேலோ பாயாமல் முஸ்லிம் இளைஞன் என்ற ஒற்றை காரணத்தால் ஒட்டுமொத்த முஸ்லிம்களை வெளியேற சொல்கிறார்கள். அதிலும், உத்தரக்காண்டின் மூத்த பத்திரிக்கையாளர் திரிலோச்சன் பட், இந்து இளைஞன் சைனி குறிப்பிட்ட பெண்ணுடன் உறவு வைத்திருந்தார். இந்து இளைஞனின் நண்பன் மட்டும் தான் உவைத் கான் என்று குறிப்பிடிருக்கிறார். ஆக, எந்த காரணமும் இல்லாமல் முஸ்லிம் சமூகம் அடிக்கப்படுகிறது.

பொதுவாக நடக்க வேண்டிய வியாபார சங்கமும் அவர்களது வாட்சாப் குழுமங்களில் இருந்த முஸ்லிம்களை நீக்கியிருக்கிறார்கள். 35 வருடமாக இந்த பகுதியில் வியாபாரம் செய்து வந்த முஸ்லிம் பெரியவர் இனி இங்கே வியாபாரம் செய்ய முடியாது என்று தனது குடும்பத்துடன் இந்த பகுதியை காலி செய்து விட்டார். மிக தெளிவாக இந்த வழக்கை விசாரிக்கும் காவல் அதிகாரி இதில் எந்த லவ் ஜிஹாத் நோக்கமும் இல்லை என்று சொன்ன பிறகும் முஸ்லிம்களை எதிர்த்து கலவரம் செய்கிறார்கள்.

பிஜேபியின் சிறுபான்மை பிரிவு தலைவராக இருக்கும் ஜாஹித் அவர்களையும் வெளியேற வேண்டும் என்று சொல்கிறார்கள். தன்னை பாஜகவில் சேர்த்துக்கொண்டால் தனக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்று நம்பிய பாஜக முஸ்லிமையும் சேர்த்து வெளியேற சொல்லியிருக்கிறார்கள்.

லவ்ஜிஹாத் : இந்து பெண்ணின் கை வெட்டப்பட்டது - இப்படி தலைப்புடன் ஒரு வீடியோ பரப்பட்டது. இதை பரப்பியது சதர்சன் நியூஸ் என்ற சங்கி சேனல். இதன் யூடியூப் சப்ஸ்க்ரைபர்கள் மட்டும் 1.5மில்லியனுக்கு மேல். முஸ்லிம் ஜிஹாதியின் செயலை பாருங்கள் என்று தலைப்பிட்டு இந்த செய்தியை பரப்பினார்கள்.

இதை விசாரித்த டெல்லி காவல்துறை கத்தியை கொண்டு அந்த பெண் தனது மணிக்கட்டை அறுத்து கொண்டதாகவும், இது அவர் தந்தையின் கண்முன்னே தந்தைக்கு பயந்து செய்து கொண்டது என்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

உத்திரபிரதேசத்தில் சமீபத்தில் ஒரு 8 வயது பெண் பாலியல் வன்புணர்வு செய்து கொல்லப்பட்டார். இதை செய்தது ரோஹிங்யாவில் இருந்து வந்த முஸ்லிம் அகதி தான் என்று சமூக வலைத்தளத்தில் பரப்பட்டது. ஆல்ட் நியூஸ் நிறுவனம் ஆராய்ந்து பரப்பபபட்டும் செய்தி செய்தி தவறானது. அந்த சிறுமியின் கொலைக்கும், வன்புணர்வுக்கும் காரணம் இந்து சமூகத்தை சார்ந்தவர் தான் என்று காவல்துறை பதிவு

செய்திருப்பதை வெளிப்படுத்தினார்.

ரயிலில் முஸ்லிம் குடும்பம் என்ற காரணத்தால் மோசமான உணவு பரிமாறப் பட்டதாக புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. ராஜ்தானி எக்ஸ்பிரஸில் பன்வேல் பகுதியில் இருந்து கோழிக்கூடு வரை ஜூன் 9ம் தேதி பயணம் செய்த பயணிகளுக்கு முஸ்லிம் என்ற

INDIA LATEST SOUTH INDIA

**Muslim woman alleges railway staff asked her religion, served stale, unsanitary food**

MAKTOOB STAFF



காரணத்தால் மோசமாக நடத்தப்பட்டதாக சொல்லப்படுகிறது.


பெண்களிடம் நீங்கள் என்ன மதம் என்று கேட்டு முஸ்லிம் என்று உறுதி செய்த பிறகு தங்களிடம் மோசமாக நடந்து கொண்டதாக சொல்கிறார்கள். மொத்தம் 16 மணி நேரத்திற்கும் மேலான பயணம் மொத்தமாக 908கி.மீ பயணத்தில் இதை சந்தித்திருக் கிறார்கள். ஏ.சி கோச் என்பதால் போர்வை கேட்டிருக்கிறார்கள். அதுவும் மாற்றப்பட வில்லை. அதே போல் தங்களுக்கு கொடுக்கப் பட்ட உணவில் கடும் துர்நாற்றம் வீசியதாகவும், ஊழியர் ஒருவர் அது குப்பையில் இருந்து எடுக்கப்பட்டது என்று சொன்னதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பத்தார்கள் Media one TVக்கு பேட்டி அளித்திருக்கிறார்கள்.

2020ல் சிஏஏ போராட்டத்தின் போது ஒரு பள்ளியில் சிஏஏ பற்றிய விழிப்புணர்வு நாடகம் நடத்தப்பட்டது. அது இணையத்தில் பரவிய பிறகு நாட்டின் சட்டத்தை இழிவுபடுத்துவதாகவும், நாட்டின் இறையாண்மைக்கு எதிராக செயல்படுவதாகவும் கூறி அந்த கல்லூரி முதல்வர் ஃபரிதா பேகம் மற்றும் நாடகத்தில் நடித்த சிறுமியின் தாயார் இருவரும் கைது



செய்யபப்ட்டனர். ஜூன்14ம் தேதி வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம் பதிவு செய்யப்பட்ட புகாரை நிராகரித்து தள்ளுபடி செய்திருக்கிறது.

மகாராஷ்டிராவின் மும்பை நகரில் 23 வயதான லுக்மான் அன்சாரி என்ற இளைஞன், பஜ்ரங் தள் என்ற அமைப்பை சேர்ந்த இந்துத்துவ தீவிரவாதிகளால் அடித்தே கொல்லப்பட்டுள்ளார். இரண்டு மாடுகளை விலைக்கு வாங்கி விட்டு வீடு திரும்பிய நிலையில் தடுத்து நிறுத்தப்பட்டு இந்த சம்பவம் நடந்துள்ளது. சம்பவம் நடந்த போது பணம் கேட்டு மிரட்டியிருக்கிறார்கள். அதன் பிறகு தாக்குதல் நடந்திருப்பதாக காவல்துறை கூறியிருக்கிறது.


**நூலைப்பெற**

**போன்:**
**7401213394**
**7358278146**
**8148129887**

**விலை**
**ரூ.25/-**

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல – ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

- நூலிலிருந்து

# மக்களுக்கு தேவையான சுல்தான்!



ஹிஜ்ரி 796 -லிருந்து 798 வரை எகிப்தின் தலைநகரமான கெய்ரோ கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டது.மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவு பொருட்களை வியாபாரிகள் பதுக்கி அதிக விலைக்கு விற்றனர்.

இதனால் நாட்டில் உள்ள மக்கள் அனைவருக்கும் உணவு வழங்குமாறும், நாட்டில் விற்கப்படும் அனைத்து பொருட்களுக்கும் அரசாங்கமே விலையை நிர்ணயிக்கும் என்றும் சுல்தான் லாஹிர் ஸைஃபுத்தீன் பர்கூக்(ரஹ்) அவர்கள் ஆணையிட்டார்.

தெருக்கள் மற்றும் கடைவீதிகள் தோறும் உணவகங்களை அமைத்து அவற்றில் மக்களுக்கு தேவையான உணவு வழங்க ஏற்பாடு செய்தார்.உணவு வேண்டாம் என்றால் ஒன்றரை திர்ஹம் பொற்காசுகள் வழங்குமாறும் ஆணையிட்டார்.

இந்த கடுமையான வறட்சியால் ஒரு உயிர் கூட இறந்து போகவில்லை.மாறாக ஏழைகள் தங்களுக்கு கிடைத்த அதிகமான ரொட்டிகளை விற்று அதன் மூலம் தங்களுக்கு தேவையானவற்றை பெற்று கொண்டார்கள்.

சுல்தான் லாஹிர் ஸைஃபுத்தீன் பர்கூக்(ரஹ்) தனது இல்லத்தில் தினம்தோறும் 500 ஏழைகளை வரவழைத்து ஒவ்வொரு ஏழைக்கும் 50 திர்ஹம்கள் வழங்கினார். மக்களது கஷ்டங்களில் நாமும் பங்கெடுக்க வேண்டும் என்பதால் வறட்சியான காலம் நிறைவடையும் வரை சுல்தான் சாலையில் மக்களோடே உறங்கினார்.

தானே உணவகங்களுக்கு சென்று மக்களுக்கு உணவு வழங்குவார்.பின்பு சிறிது காலம் கழித்து இயல்பு நிலை திரும்பியது. ஆனாலும் மக்களெல்லாம் வயிறார உண்கிறார்கள் என்ற செய்தி கிடைக்கும் வரை சுல்தான் ஒரு நாளும் வயிறார உண்ணவில்லை.

: ÑÕ ãåÇ
.í ÒÑãåßãåÇáãë ÉÝÚãåßãåÒÇ

தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி



# வழிகாட்டும்...! மந்தைவெளி

கடந்த ஜூன் 4ம் தேதி ஞாயிற்றுக் கிழமை சென்னை மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித்–ல் பொதுமக்கள் மற்றும் சகோதர சமுதாயத்தவர்களின் பார்வைகளுக்காக ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சகோதர சமுதாயத்தை சார்ந்த பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் இம்தியாஸ் அவர்களிடம் கேட்ட போது, ‘‘இன்றைக்கு நிறைய மக்கள் பள்ளிவாசல்களை காண வேண்டும் என்று நினைக்கின்றனர். முஸ்லிம்களின் தொழுகை, அவர்களின் பழக்க வழக்கங்களை தெரிந்து கொள்ள ஆர்வமாக இருக்கின்றனர். ஆனால் அவர்களுக்கான விடைகள் சரியாக கிடைப்பதில்லை.’’

‘‘ஒரு சில மாதங்களுக்கு முன் எங்கள் பள்ளிவாசலுக்கு முன் ஒரு பெண் நின்று கொண்டிருந்தார். அவருக்கு பள்ளிவாசலினுள் சென்று அது எப்படி இருக்கும் என்று பார்க்க விருப்பம். ஆனால் உள்ளே வர தயங்கி நின்று கொண்டிருந்தார். இதை கவனித்த நாங்கள் அவரை உள்ளே அழைத்து வந்து பள்ளிவாசலை சுற்றி காண்பித்து, அவருடைய அனைத்து சந்தேகங்களுக்கும் விடையளித்தோம். இந்த சம்பவத்திற்கு பின்னரே இப்படி ஒரு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு வந்தது என்றார்.

இந்த நிகழ்ச்சியில் சுமார் 300 நபர்கள் கலந்து கொண்டனர். முஸ்லிம்கள் ஏன் தினமும் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்? முஸ்லிம் பெண்கள் ஏன் புர்கா அணிகின்றனர்? முஸ்லிம் பெண்கள் பள்ளிவாசல் சென்று தொழலாமா? போன்ற தலைப்புகளிலும் மற்றும் லவ் ஜிஹாத் குறித்தும் கலந்துரையாடல்கள் நிகழந்தன. பள்ளிவாசலின் தலைமை இமாம் கே.எம்.இல்யாஸ் ரியாஜி அவர்கள் அழகுற விளக்கி பதிலளித்தார்கள். நிகழ்ச்சியின் ஊடாக லுஹர் தொழுகைக்கான நேரம் வந்தது. அப்போது முஸ்லிம் ஆண்கள், மற்றும் பெண்கள் லுஹர் தொழுகையை தொழுதார்கள். அதை வந்திருந்த சகோதர சமுதாயத்தவர்கள் பார்வையிட்டனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சைவம் மற்றும் அசைவ உணவுகள் வழங்கப்பட்டன. சுமார் 2 மணியளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது.



# ஈத்கா மஸ்ஜித்...!





ஒவ்வொரு மஸ்ஜிதிலும் இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தால் சமுதாயங்களுக்கு இடையிலே நல்லிணக்கம் வலுப்பெறும். இஸ்லாமும் அந்த முஹல்லாக்களில் வாழும்,சகோதர சமுதாயத்தினருக்கு சென்று சேரும். பாசிஸ்டுகளின் பிரித்தாளும் தத்துவம் மரணத்தைத் தழுவும் இன்ஷா அல்லாஹ்!

**நோன்பின் காலங்களில் மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித்:**

நோன்பின் காலங்களில் மந்தைவெளி மஸ்ஜிதில் நோன்பு கஞ்சியை ஓர் அழகிய கோப்பையில் பார்சல் செய்து,மஸ்ஜிதுக்கு வெளியே வைத்து சகோதர சமுதாயத்திற்கு விநியோகித்தார்கள் பலரும் கஞ்சியின் "ருசியை" கருத்தில் கொண்டு கஞ்சியை வாங்கிச் சென்றார்கள்.

பலருக்கு பசியை தனித்தது மட்டுமல்ல அது நோன்புக் கஞ்சியின் ருசியையும் முஸ்லிம்களின் நோன்பையும் பறைசாற்றியது. வாங்கியோர் முகங்கள் அவர்களின் அக மகிழ்ச்சியைக் காட்டியது. பலர் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள்.காண கண் குளிரும் காட்சியாக இருந்தது.இதுவும் பின்பற்றத்தக்க "முன்மாதிரி".

**- ந.நீ.,**



# இந்திய கண்டத்தில் சூஃபிஸமும் அதன் சமூக தாக்கமும்

மூலம்:
**அபுல் ஹஸன் அலீ நத்வீ(ரஹ்)**



தமிழில்:
**மௌலவி. நியாசுதீன் புகாரி நத்வீ**

சூஃபிஸத்தின் பிரபல்யமான தரீகாக்கள் ஆரம்பத்தில் இந்தியாவிற்கு வெளியே தோன்றினாலும், இந்திய திருநாட்டின் தனித்துவம் மிகுந்த சூழலின் காரணமாக இந்தியாவில் தான் அது மிகப்பெரிய அங்கீகாரத்தை பெற்று, வளர்ந்து பாரெங்கும் பரவியது. பிறகு இதன் விளைவாக இந்தியா விலேயே பல தரீகாக்கள் தோன்றியது.அது தனித்துவமான வடிவத்தை கொண்டிருந்தது. இந்த பாரம்பரியத்தில் பல மகான்கள் தோன்றி இன்னும் பல தரீகத்துகளை உருவாக்கினார்கள்.

ஒரு புறம் காதிரிய்யா,சிஷ்திய்யா, நக்ஷபந்திய்யா, ஸஹர்வர்தியா போன்ற பிரபல்யமான தரீகத்துகள் இந்தியாவில் வளர்ந்து மிகப்பெரிய அங்கீகாரத்தை பெற்றது. மற்றொரு புறம் இந்தியாவிலேயே உருவான தரீகத்துகளும் நிறைய பெருகியது. இந்த நாட்டின் பல மகான்களின் மூலம் அவை உருவாக்கப்பட்டு இந்த நாட்டிலேயே அவை கறைந்தும் போயின. உதாரணமாக ஃபிர்தவ்ஸியா, மதாரிய்யா, கலந்தரிய்யா, ஷத்தாரிய்யா, முஜத்திதிய்யா. இவையனைத்தும் இந்தியாவிலேயே தோன்றிய தரீகத்துகள். பிறகு பல நாடுகளில் இந்த தரீகத்துகள் பரவியது.

குறிப்பாக பத்தாம் நூற்றாண்டை சேர்ந்த கன்ஜுல் உம்மால் என்ற அற்புதமான நூலின் ஆசிரியர் ஷைகு அலி முஃபதி(ரஹ்), அதேபோல ஷைகு தாஜுதீன் சன்பலி (ரஹ்) அவர்கள், பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த ஷைகு ஆதம் பன்னூரி(ரஹ்) அவர்கள், இவர்கள் அனைவரும் ஹிஜாஸ் பகுதிக்கு ஹிஜ்ரத் செய்து அதனை தங்களது நாடாக ஆக்கி கொண்டதால் இவர்களது தரீகத்தின் மூலம் இஸ்லாமிய உலகமும், அதிலும் குறிப்பாக ஹிஜாஸ் வாசிகளும் மிகப்பெரிய அளவில் பயனடைந்தார்கள்.இதன் மூலம் “பதினோராம் நூற்றாண்டிலிருந்தே இந்தியா உள்ளத்தை பரிசுத்தபடுத்தும் தஸவ்வுஃப் என்னும் உன்னதமான ஆன்மீக கொடியை

தாங்கி பிடித்த நாடாக விளங்கியது."

அந்த நேரத்தில் ஷைகு அஹ்மத் ஸிர்ஹிந்தி (ரஹ்) அவர்களும் அவரது மகனும், கலீஃபாவும் ஆன ஷைகு முஹம்மத் மஅசூம் (ரஹ்) அவர்களுமே இதன் தலைவராக விளங்கினார்கள். இந்த இருபெரும் இறைநேசர் களிடமிருந்து உலகம் நெடுங்காலமாக பல ஆன்மீக பயன்களை பெற்று வந்தது.

ஷைகு முஹம்மத் மஅசூம்(ரஹ்) அவர்களது கலீஃபாக்கள் ஆப்கானிஸ்தான், ஈரான், துருக்கிஸ்தான் போன்ற பல நாடுகளில் பரவி உள்ளார்கள்.

பதிமூன்றாம் நூற்றாண்டில் முஜத்திதிய்யா தரீகாவை சார்ந்த ஷைகுமார்களில் ஒருவரான ஷைகு குலாம் அலி தெஹ்லவி(ரஹ்) அவர்களது ஹான்காவிற்கு

ஈராக், ஷாம், சீனா, எத்தியோஃபியா, புகாரா, சமர்கண்ட் போன்ற தொலைவான நாடுகளிலிருந்து வந்து செல்வார்கள்.

இந்த தரீகா இவரது கலீஃபாவான ஷைகு ஹாலித்(ரஹ்) மூலம் ஈராக், துருக்கிஸ்தான், ஷாம், துருக்கி போன்ற நாடுகளில் பரவியது. இன்றும் இது இந்த நாடுகளில் நிலைத்து நிற்கிறது.

14 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஹாஜி இம்தாதுல்லாஹ் அல்முஹாஜிர் மக்கி(ரஹ்) அவர்கள் மிகவும் பிரபல்யமடைந்தார்கள். ஷைகுல் அரபி வல் அஜம் (அரபு மற்றும் அரபு அல்லாத மக்கள் ஆகிய அனைவரது ஷைகு) என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பட்டார்கள். ஹிஜாஸ் வாசிகளும். ஹஜ்ஜிற்கு வருகை தந்தவர்களும் இந்த மகானின் மூலம் மிகப்பெரிய அளவில் பயனடைந்தனர்.

இன்றும் அகத்தை பரிசுத்தபடுத்தும் ஆன்மீகம் என்னும் இந்த பெருஞ்ஜோதியின் சுடர்கள் உலகமெங்கும் பரவியிருப்பதற்கு இந்திய நாடே காரணம் என்றால் மிகையல்ல. இந்த நாட்டில் இறை நேசத்தை பெற்று தரும் தரீகத்து இன்றும் இருந்து வருகிறது. இந்த நாட்டின் உருவான சில மகான்கள், இறைநேசர்கள் ஆகியவர்களின் மூலம் உலகம் முழுக்க பரவியுள்ள தஸவ்வுஃப் என்னும் ஆன்மீக கலைக்கான ஆணிவேராக இந்தியாவே திகழ்கிறது.

**சூஃபியாக்கள் மற்றும் தஸவ்வுஃபோடு மக்கள் கொண்டிருந்த தொடர்பு:**

இந்தியாவில் இஸ்லாமிய காலகட்டம் என்பது சூஃபி மகான்களை கொண்டே துவங்குகிறது. குறிப்பாக ஷைகு காஜா முஈனுத்தீன் அஜ்மீரி(ரஹ்) அவர்களின் மூலமே இந்தியாவிற்கான இஸ்லாமிய காலகட்டம் துவங்குகிறது.

இவரது கலப்பற்ற எண்ணத்தால், தொடர் போராட்டத்தால் சிஷ்திய்யா என்னும் தரீகத்தை பலம் நிறைந்த தூண்களை கொண்டு நிறுவினார்கள். எல்லா தரப்பு மக்களும் இது போன்ற ஆன்மீக மகான்களை நோக்கி தாரை தாரையாக வந்து கொண்டிருந்தார்கள். ஷைகுமார்களை நேசிப்பதிலும் அவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்வதிலும் தங்களுக்கிடையே போட்டி போட்டு கொண்டார்கள்.

நாட்டின் எல்லா இடங்களிலும் ஆன்மீக மையங்கள் என்னும் ஹான்காக்கள் காணப்பட்டது. எந்தளவிற்கு என்றால் எந்தவொரு நகரமோ அல்லது கிராமமோ ஹான்காக்கள் இல்லாமல் இருப்பது அரிது.

இதயப்பூர்வமான தொடர்பு, ஆத்மார்த்தமான உறவு, நெஞ்சம் நிறைந்த அன்பு ஆகியவை மக்களை இறைநேசர் களாகிய இந்த மகான்களை நோக்கியும் இந்த ஆன்மீக கொள்கை நோக்கியும் வரவழைத்தது. நாம் விவரிக்கும் பின்வரும் நிகழ்வுகளில் இவை பிரதிபலிப்பதை காண இயலும்.

ஷைகு ஆதம் பன்னூரி(ரஹ்) அவர்கள் (ஹி 1053) மக்கமா நகரின் ஜன்னத்துல் பகீஃயில் அடங்கியிருப்பவர். ஷைகு அவர்களது ஹான்காவில் தினசரி சுமார் ஆயிரம் நபர்கள் தங்கி உணவு அருந்துவார்கள். ஷைகு அவர்களது எல்லா பயணங்களிலும் சுமார் ஆயிரம் நபர்களும் நூற்றுக்கணக்கான உலமாக் களும் எப்போதும் உடன் இருப்பார்கள்.

ஒரு முறை ஷைகு அவர்கள் ஹிஜ்ரி 1053 ஆம் ஆண்டு லாஹூரிற்கு வருகை புரிந்தார்கள். ஷைகு அவர்களோடு உலமாக்கள், பெரியோர்கள், பொது மக்கள் என பத்தாயிரம் நபர்கள் ஷைகுடன் வந்தார்கள். எந்தளவிற்கு என்றால் ஒரு தனி

மனிதரோடு இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்கள் கூட்டம் வந்திருந்ததை கண்டு தமது ஆட்சிக்கு ஏதேனும் பிரச்சினை வந்து விடுமோ என்று மன்னர் ஷாஜஹான் அவர்களே அச்சப்பட்டார்.

இதனை திசை திருப்பும் விதமாக மன்னர் ஒரு பணமுடிப்பை அனுப்பி "தங்களின் மீது அல்லாஹ் ஹஜ்ஜை கடமையாக்கி உள்ளான். எனவே தாங்கள் இப்போது ஹிஜாஸிற்கு செல்ல வேண்டும்". மன்னரது சமிக்ஞையை விளங்கி கொண்ட ஷைகு அவர்கள் மக்கமா நகரிற்கு சென்று ஹஜ்ஜை நிறைவேற்றி பிறகு அங்கேயே இறைவனது அழைப்பையும் ஏற்றார்கள்.

ஷைகு முஹம்மத் மஅசூம்(ரஹ்) அவர்கள் (ஹி1079) இவர் மிகப்பெரிய இறைநேசர் ஆன்மீக ஆசான் ஷைகு அஹ்மத் ஸிர்ஹிந்தி (ரஹ்) அவர்களது மகன். அன்னாரது முபாரக்கான கரங்களை பிடித்து பைஅத் செய்து தவ்பா செய்து மீண்டவர்களது எண்ணிக்கை 9 இலட்சம். மேலும் அல்லாஹ்வை நோக்கி மக்களை அழைத்து, நேர்வழிபடுத்தி பண்படுத்தும் பணியை ஏழாயிரம் பெரியோர்கள் ஷைகு அவர்களது கலீஃபாக்களாக இருந்து செய்து வந்தார்கள்.

அலிகர் பல்கலைக்கழகத்தின் நிறுவனர் ஸைய்யித் அஹ்மத் கான்(ரஹ்) அவர்கள் தனது நூல் ஆஸாருஸ் ஸனாதீத் என்ற நூலில் ஷைகு குலாம் அலி தெஹ்லவி என்று அறியப்படும் ஷைகு அப்துல்லாஹ்(ரஹ்) அவர்களை குறித்து சில விஷயங்களை பதிவு செய்கிறார்.

"ஷைகு அவர்களது ஸாவியாவில் ஐந்நூறு நபர்கள் தங்கியிருந்தார்கள். இவர்களுக்கான முழு செலவை ஸாவியிவே பொறுப்பேற்றது. இதேபோல மிகப்பெரிய இறைநேசரும் சீர்திருத்தவாதியுமான ஸைய்யத் அஹ்மத் ஷஹீத்(ரஹ்) அவர்களை நோக்கி மக்கள் அலைகள் போல திரண்டு வந்தனர். ஷைகு ஒரு ஊரை கடந்து செல்வதற்குள் மிகப்பெரிய மக்கள் கூட்டம் தவ்பா செய்து பைஅத் செய்து விடுவார்கள்.

எந்தளவிற்கென்றால் பனாரஸில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகள் ஷைகு அவர்களுக்கு இவ்வாறு தகவல் அனுப்பினார்கள்:

"நாங்கள் நோயாளிகள் எங்களால் படுக்கைக்கு விடைகொடுக்க இயலாது. எங்களால் உங்களை நேரில் சந்தித்து பைஅத் செய்யவும் இயலாது. ஷைகு அவர்கள் ஒரே ஒரு முறை மருத்துவமனைக்கு வந்தால் நிச்சயம் நாங்கள் பைஅத் செய்வோம்".

இதனை அறிந்ததும் ஷைகு அவர்களே நேரில் சென்று அவர்களிடமிருந்து பைஅத்தை பெற்றுக்கொண்டார்கள்.

இரண்டு மாதங்கள் கல்கத்தாவில் தங்கினார்கள். ஒரு நாளைக்கு ஷைகு அவர்களிடம் 1000 நபர்கள் பைஅத் செய்தார்கள். நடு இரவு வரை இந்த பைஅத் தொடர்ந்தது. கடுமையான கூட்டத்தின் காரணமாக ஒவ்வொரு நபராக ஷைகு அவர்களது கரம் பிடித்து பைஅத் செய்ய இயலவில்லை.

இதனால் ஏழு அல்லது எட்டு தலைப்பாகையை நீட்டி அதனை பிடித்து தவ்பா செய்து பைஅத் செய்து கொண்டார்கள். இது தினந்தோறும் 17 அல்லது 18 முறை நடந்து வந்தது.

ஓரிறை கொள்கையை பின்பற்ற வேண்டும், இஹ்லாஸோடு அமல்கள் செய்ய வேண்டும், சுன்னாவை பின்பற்ற வேண்டும், பாவத்திலிருந்து தவ்பா செய்து மீளவேண்டும், அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கீழ்படிய வேண்டும் என்பதையெல்லாம் உறுதிபிரமாணமாக பைஅத்தாக தங்களது முரீதுகளிடம் ஷைகுமார்கள் பெற்று கொண்டார்கள்.

அதேபோல தீய விஷயங்களை, மானக்கேடான செயல்களை, தீய குணங்களை, அநீதம் இழைப்பதை போன்ற அனைத்தையும் தவிர்க்க வேண்டும் என்றும் தங்களது முரீதுகளை எச்சரிக்கை செய்தனர்.

அதேபோல நல்லொழுக்கங்களை கடைபிடிக்க வேண்டும் என்றும் பெருமை, பொறாமை, பகைமை, அநீதம், பதவி மோகம் ஆகிய கீழ்தரமான குணங்களை விட்டு தூரமாக வேண்டும் என்றும், உள்ளத்தை பரிசுத்தபடுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

அதேபோல தங்களது முரீதுகளுக்கு இறை நினைவு, பிறருக்கு நலவை நாடுதல், போதுமென்ற மனம், தன்னை விட பிறருக்கு முக்கியத்துவம் அளிப்பது ஆகிய நல்ல விஷயங்களை தங்களது முரீதுகளுக்கு கற்பித்தார்கள்.

இவையனைத்தும் தாண்டி இந்த பைஅத் ஷைகிற்கும் முரீதிற்கும் மத்தியில் ஒரு ஆழமான உறவை ஏற்படுத்தியது. இந்த ஷைகு மார்கள், இறைநேசம் என்னும் பெருஞ்ஜோதி உள்ளத்தில் ஒளிர்ந்து கொண்டே இருக்க வேண்டும், இறைவனது பொருத்தத்தை நேசிக்க வேண்டும், உள்ளத்தை பரிசுத்த படுத்தவதில் அதீத ஆர்வம் இருக்க வேண்டும் என்பதை தங்களது முரீதுகளுக்கு எப்போதும் உபதேசம் செய்து கொண்டே இருந்தார்கள்.

மக்களது வாழ்க்கையில் ஷைகுமார்கள் ஏற்படுத்திய இந்த தாக்கம், அவர்களுக்கு போதித்து வந்த ஆன்மீகம், முரீதுகளை பண்படுத்தியது ஆகியவை எதுவரை தொடர்ந்தது? இந்த வரலாற்று எதார்த்தத்தை சில உதாரணங்களோடு இங்கே குறிப்பிடு கிறோம்.

இந்தியாவின் பிரபல வரலாற்று ஆசிரியர் காஜி லியாஉத்தீன் பிர்னி(ரஹ்) அவர்கள் சுல்தான் அலாஉத்தீன் கில்ஜி(ரஹ்) அவர்களது காலகட்டத்தை பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

“ஷைகுல் இஸ்லாம் நிஜாமுதீன்(ரஹ்), ஷைகுல் இஸ்லாம் அலாவுதீன், ஷைகுல் இஸ்லாம் ருக்னுத்தீன் இம்மூவரும் சுல்தான் அலாஉத்தீன் கில்ஜி(ரஹ்) காலகட்டத்தில் ஆன்மீக உலகத்தின் கலங்கரை விளக்காக விளங்கினார்கள். எண்ணிலடங்கா மக்கள் இம்மூவர்களிடம் பைஅத் செய்தார்கள். பாவங்களை விட்டு மீண்டு இவர்களது கரங்களை பிடித்து பைஅத் செய்தார்கள். இம்மகான்களிடம் பைஅத் செய்தவர்கள் ஐவேளை தொழுகைகளை பேணி தொழுது வந்தார்கள். தங்களது வாழ்க்கை முழுக்க இதனை வலுவாக பின்பற்றினார்கள். மார்கத்தின் மீது முழுமையான பற்றை இம்மக்களிடம் ஷைகுமார்கள் ஏற்படுத்தி னார்கள். உலக மோகத்தை அவர்களது உள்ளங்களிலிருந்து முழுமையாக நீக்கினார்கள்.”

“ஷைகுமார்களது நல்லொழுக்கம், மனோ இச்சையை முழுமையாக தவிர்த்து வாழ்ந்த இவர்களது தூய வாழ்வே இது போன்ற ஆழமான தாக்கங்களை முரீதுகளிடம் ஏற்படுத்தியது. இவர்களது இபாதத், நன்னடத்தையின் பொருட்டால் மக்கள் அனைவரிடமும் உண்மை பேசும் பழக்கம் பரவியது. இவர்களது நற்குணங்களால் மக்கள் தங்களது குணங்களை சீர் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தினார்கள்.”

மேலும் கூறுகிறார்:

“சுல்தான் அலாஉத்தீன் கில்ஜி(ரஹ்) அவர்களது ஆட்சியின் இறுதிக் காலத்தில் மது கடைகள் கேலிக்கூத்து, விபச்சார, சூதாட்டம் ஆகிய விடுதிகள் அனைத்தும் மூடப்பட்டது. மிகவும் அரிதாகவே இது போன்ற வார்த்தைகள் மக்கள் வாய்களால் உச்சரிக்கப்பட்டது. இது போன்ற பெரும் பாவங்கள் குஃப்ருக்கு ஈடாக மக்களால் கருதப்பட்டது. மக்கள் வெளிப் படையாக வட்டி, பதுக்கல் போன்ற விஷயங்களை செய்வதற்கு வெட்கப் பட்டார்கள். சந்தைகளில் பொய், எடை மோசடி, ஏமாற்றுதல் ஆகிய நிகழ்வை காண்பது மிகவும் அரிதாகிப்போனது.”



முரீதுகளிடத்தில் நன்னடத்தை, பிறரது உரிமைகளை பேணுதல், கடனை நிறை வேற்றுதல் போன்ற விஷயங்களுக்கு இந்த ஆன்மீக ஆசான்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்தனர். தங்களிடம் பைஅத் செய்யக் கூடியவர்களிடத்தில் இதுபோன்ற விஷயங்களில் மிகுந்த பேணுதலோடு நடந்து கொள்ள வேண்டும் என்று வஸிய்யத் செய்வார்கள்.

ஷைகு நிஜாமுதீன் அவ்லியா(ரஹ்) அவர்களது ஆன்மீக குரு ஷைகு ஃபரிதுத்தீன் கன்ஜ் ஷகர்(ரஹ்) நிஜாமுதீன் அவ்லியா(ரஹ்) அவர்களிடம் "எதிராளிகள் மற்றும் உரிமையுடைவர்களை திருப்திப்படுத்த எந்த முயற்சியும் எடுக்க வேண்டாம்" என்று வஸிய்யத் செய்தார்கள்.

ஷைகு நிஜாமுதீன் அவ்லியா(ரஹ்) அவர்கள் ஒரு நபரிடம் கடன் வாங்கியிருந்தார். மற்றொரு நபரிடம் புத்தகத்தை இரவலாக வாங்கியிருந்தார் ஆனால் புத்தகத்தை தொலைத்துவிட்டார்.டில்லி சென்று முதலாம் நபரை சந்தித்தார்.

அந்த நபர், "நீங்கள் முஸ்லிம்களின் சமுதாயத்திலிருந்து வருகிறீர்கள் என்று தெரிகிறது" என்று கூறினார்.

இரண்டாவது நபரை சந்திக்க சென்ற போது அந்த நபர் கூறினார், "நிச்சயம் நீங்கள் வசிக்கும் பகுதியே உங்களது இந்நல்லொழுக்ககத்திற்கு காரணம்."

அதேபோல ஷைகுமார்கள் தங்களது முரீதுகளுக்கு வழங்கிய மற்றுமொரு தர்பிய்யத், மக்களுக்கு பயனுள்ளவனாக திகழ வேண்டும். பிறருக்கு உதவ வேண்டும்.

ஸைய்யத் அஹ்மத் ஷஹீத்(ரஹ்) அவர்களது ஹஜ் பயணத்தின் போது நிறைய நபர்கள் ஷைகு அவர்களோடு பயணம் மேற்கொண்டனர். பயணமும் மிகவும் சிரமம் நிறைந்ததாக இருந்தது.

ஆனாலும் பிறருக்கு உதவி செய்யும் வாய்ப்பை இழக்க விரும்பவில்லை. இவர்களது பயணம் கப்பலின் மூலம் கங்கை நதியின் வழியாக மேற்கொள்ளப்பட்டது. மிர்சாபூரின் தரையிறங்கும் பாதையில், பருத்தி ஏற்றப்பட்ட ஒரு கப்பல் நின்று கொண்டிருந்தது, பருத்தியின் உரிமையாளரோ கப்பலிலிருந்து பருத்தியை கிடங்கிற்கு சுமந்து செல்லும் வேலையாட்களுக்கு காத்துக் கொண்டிருந்தார்.

இந்த தருணத்தில் ஷைகு அவர்கள் பருத்தி மூட்டைகளை சுமந்து உதவி செய்யுமாறு தனது தோழர்களுக்கு கட்டளையிட்டார்கள். உடனே நூற்றுக்கணக்கான மக்கள் கப்பலின் மீது பாய்ந்தனர். சில மணித்துளிகளில் கப்பலை காலி செய்தனர். அனைத்தையும் கிடங்கிற்கு சுமந்து கொண்டு சேர்த்தனர். இதனை அங்கிருந்த மக்கள் வியந்து பார்த்தனர். தங்களுக்குள் இவ்வாறு மெதுவாக கூறிக்கொண்டனர்.

"இப்படி ஒரு நாளை நாங்கள் கண்டதில்லை. இவர்கள் யாரென்று தெரியாது. பருத்தி முதலாளிக்கும் இவர்களுக்கும் எந்த உறவும் இல்லை. தாங்கள் செய்த பணிக்கு கூலி கேட்கவும் இல்லை. இந்த உபகாரத்தை இறைவனது பொருத்தத்தை நாடி மட்டுமே செய்தனர். எந்தவொரு சந்தேகமும் இல்லை இவர்கள் அனைவரும் இறைநேசர்களாகத் தான் இருக்க வேண்டும்."

தொடரும்.......




ஷேஷாத்திரி குமார் இப்படிக் கூறகின்றார்: "இந்தியாவில் இன்றளவும் இந்து கலாச்சாரம் என்ற பெயரில் ஒன்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றால், அதற்கான அத்தனைப் பெருமையும் அலாவுத்தீன் கில்ஜிக்குத்தான் செல்ல வேண்டும். அவர் வரலாற்றின் மிகப்பெரிய போர் வீரர், அவர் மாட்சிமை மிக்க ஆட்சி நடத்தியவர். இந்தியாவை மங்கோலியர் களிடமிருந்து காப்பாற்றினார். அதனால் அவர் ஒரு வினோதமான வகையில் இந்து மதத்தைக் காப்பாற்றினார்." (ஆதாரம் : Why India Sould be greatful to Alavuddin Khiljil by Shashadri Kumar, Radiance : Vews Weekly = 39, December 2017)

வரலாற்று ஆய்வாளர் MONISH BORAH மோனிஷ்போரா அவர்கள் இப்படி கூறகின்றார்; ஆனால் 13-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்துக்கள் பெரும்பாலும் இந்தியாவுக்குள்ளேயே வாழ்ந்து வந்தார்கள். ஆகவே மங்கோலியர்கள் இந்துக்களை ஓர் இனப்படுகொலைக்கு உள்ளாக்கி இருந்தால் இந்துக்கள் பெருவாரியாகக் கொலை செய்யப்பட்டிருப்பார்கள். ஒரு வேளை அவர்கள் முற்றாகத் தடந்தெரியாமல் துடைக்கப்பட்டும் போயிருக்கலாம். இது இந்து மதத்திற்கு மிகப்பெரிய அழிவாக இருந்திருக்கும். (ஆதாரம்: Alauddin Khilji the Saviour of Hindurism : By Monish Borah)

**அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்**

**விலை: ரூ.40/-**

**தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887**



# லக்னோவில் உள்ள நத்வதுல் உலமா மத்ரஸா வரை சென்ற ஜமால் முஹம்மத் அவர்களது கொடைகள்!

சமீபத்தில் இந்தியாவின் முதுபெரும் ஆலிம் பெருந்தகை, தாருல் உலூம் நத்வதுல் உலமா பல்கலைக்கழகத்தின் (லக்னோ) தலைவர், அகில இந்திய இஸ்லாமியத் தனிநபர்ச் சட்ட வாரியத்தின் தலைவர், பெருமதிப்புக்குரிய "அல்லாமா முஹம்மத் ராபிஃ ஹஸனி நத்வி (ரஹ்)" அவர்களுக்கு இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் தமிழகத்தின் மூத்த ஆலிம் பெருந்தகை, ஜமாலிய்யா மத்ரஸாவின் பேராசிரியர் மரியாதைக்குரிய "ஜலாலுதீன் நத்வி" அவர்கள் ஒரு சுவாரஸ்யமான விஷயத்தை பதிவு செய்தார்கள்.

"இரண்டாம் உலக போர் நிறைவடைந்த தருணத்தில் உலகம் முழுவதும் கடுமையான பஞ்சம் நிலவியது. பசியால் மக்கள் கொத்து கொத்தாக செத்து மடிந்து கொண்டிருந்தார்கள்". அந்த நேரத்தில் தாருல் உலூம் நத்வதுல் உலமா பல்கலைக்கழகத்தின் தலைவராக "அலிமியான்" என்று இந்திய முஸ்லிம்களால் செல்லமாக அழைக்கப்படும் கண்ணியத்திற்குரிய "அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி(ரஹ்)" பணியாற்றி வந்தார்.

இந்த பஞ்ச காலத்தில் மத்ரஸாவை நம்மால் நடத்த இயலாது. மத்ரஸாவை ஒரு மூன்று வருட காலம் மூடிவிடலாம் என்று யோசித்து கொண்டிருந்த நேரத்தில், திடீரென்று அவர்களது உள்ளத்தில் ஒரு நல்ல யோசனை உதயமானது. அதாவது "நாம் தமிழகம் சென்று கொடை வள்ளல் ஜமால் முஹம்மது அவர்களிடம் மூன்று வருட காலம் மத்ரஸாவை நடத்துவதற்கு உதவி கேட்போம். உதவி செய்தால் நடத்துவோம் இல்லையென்றால் மூடிவிடுவோம்" என்று ஆலோசித்து அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி(ரஹ்) அவர்களும் அவர்களோடு அல்லாமா முஹம்மத் ராபிஃ ஹஸனி நத்வி(ரஹ்) சென்னைக்கு வந்தார்கள்.

ஜமால் முஹம்மது அவர்களை சந்தித்து தங்களது பிரச்சினையை கூறினார்கள். கொடுப்பதில் சுகம் கண்ட அந்த கரங்கள் பிரச்சினையை கேட்டதும், "நான் மூன்று வருடத்திற்கு தேவையான உதவி செய்யமாட்டேன் மாறாக ஐந்து வருடத்திற்கும் உங்களுக்கு தேவையான அனைத்தையும் செய்கிறேன்" என்று கூறினார் மதிப்பிற்குரிய ஜமால் முஹம்மது அவர்கள்.

-மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி



# வயதான பெண்களுக்கான பரிசோதனைகள்

மருத்துவம் - தொடர்

பல்வேறு மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்களில் செய்யப்படும் மாஸ்டர் ஹெல்த் செக்அப் (Master Health Checkup) பற்றி நாம் அனைவரும் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்தக் கட்டுரையில் பெண்களுக்கான குறிப்பிட்ட சோதனைகள், அவை ஏன் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன என்பதையும் மற்றும் எந்த அளவுக்கு அடிக்கடி செய்ய முடியும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். எங்களின் முக்கியக் கவனம் பெண்களுக்கு ஏற்படும் பிரச்னைகளை ஆரம்பத்திலேயே தடுப்பது. அவர்களின் பிரச்னைகளை அடையாளம் கண்டு சரியான நேரத்தில் சிகிச்சை அளிப்பதன் மூலம் நீண்டகாலச் சிக்கல்களைத் தவிர்க்கலாம் மற்றும் சிறந்த வாழ்க்கைத் தரத்திற்கு உதவலாம்.

**வயதான பெண்களுக்கான பரிசோதனைகள்**

- மகளிர் நல மருத்துவரால் மருத்துவப் பரிசோதனை (Clinical Examination)
- பேப்ஸ்மியர்
- மேமோகிராம்
- அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் - முழு வயிறு மற்றும் இடுப்புப் பகுதி
- டெக்ஸா ஸ்கேன்

**மருத்துவப் பரிசோதனை**

அனைத்துப்பெண்களும் ஒரு மகளிர் மருத்துவ நிபுணரால் அவர்களின் அந்தரங்க பாகங்களில், ஏதேனும் தடிப்புகள், தொற்று, வறட்சி போன்ற (Atropic changes) பிரச்னைகள் இருக்கிறதா என்பதை சரிபார்க்க தங்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும். பின்னர் பேப் ஸ்மியர் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

**பேப் ஸ்மியர்**

இது அடிப்படையில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்கான ஸ்கிரீனிங் சோதனை. இது திருமண வயதிலிருந்து 65 வயது வரை ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை செய்யப் படுகிறது. இது கருப்பை வாயில் உள்ள அசாதாரண செல்களை முன்கூட்டியே கண்டறிய உதவுகிறது. இந்தப்

பரிசோதனை மூலம் புற்றுநோய் ஆரம்பிக்கும் காலத்திற்கு முன்பே கண்டறிய முடியும். இந்தப் புற்றுநோய் முக்கியமாக யுமன் பாப்பிலோமா வைரஸ் எனப்படும் வைரஸ் தொற்றால் ஏற்படுகிறது.

### மேமோகிராம்

இது மார்பகப் புற்றுநோய்க்கான ஸ்க்ரீனிங் சோதனையாகும். இது 40 வயதுக்குப் பிறகு 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்படும். குடும்பத்தில் யாருக்காவது இந்தப் புற்றுநோய் ஏற்பட்டிருந்தால் அவர்களுக்கு நெருக்கமான கண்காணிப்புக்காக ஆண்டுதோறும் செய்யப் படலாம். இது இரண்டு சோதனைகளை உள்ளடக்கியது.

டிஜிட்டல் எக்ஸ்-ரே மேமோகிராபி மற்றும் சோனோ மேமோகிராம் (ஸ்கேன்), சில குறிப்புகள் எக்ஸ்ரேயில் அடையாளம் காணப் படுகின்றன மற்றம் சில குறிப்புகள் ஸ்கேன் மூலம் அடையாளம் காணப்படுகின்றன. ஸ்கேன் கருவி மூலம் சில கட்டிகளை பயாப்ஸி செய்ய உதவுகிறது.

### அல்ட்ராசவுண்ட் ஸ்கேன்

இது ஒவ்வோர் ஆண்டும் வயிறு மற்றும் பிறப்புறுப்பில் செய்யப்படும் ஸ்கேன் ஆகும். பொதுவாக மாதவிடாய் நின்ற பிறகு, கர்ப்பப்பை மற்றும் கருப்பைகள் சுருங்கி எண்டோமெட்ரியம் கருப்பையின் புறணி மெல்லியதாகிறது. (<4mm) இந்தப் பரிசோதனை அதைக்கண்டறிய உதவும்.

### டெக்ஸா ஸ்கேன்

இது எலும்புகள் வலியை இழத்தலைக் கண்டறியச் செய்யப்படும் சிறப்பு ஸ்கேன் ஆகும். வயதானவர்களுக்கு எலும்பு முறிவுகள் ஏற்படக்கூடிய மூன்று சிறப்புப் பகுதிகள் உடலில் உள்ளன. அதாவது இடுப்பு / மூட்டு, மணிக்கட்டு மூட்டு (Colles Fracture) மற்றும் இடுப்பு முதுகெலும்புப் பகுதி. எலும்பு முறிவு அபாயத்தைக் கணிக்கும் "டி" ஸ்கோர் மதிப் பெண்ணாக வழங்கப்படுகிறது.

முன்கூட்டியே மாதவிடாய் நின்ற பெண்கள், மெல்லிய பலவீனமான பெண்கள், ஹைப்பர் தைராய்டிசம் உள்ளவர்கள், நீண்ட கால ஸ்டீராய்டு மாத்திரைகள் உபயோகிப்பவர்கள், ஆஸ்டியோபோரோசிஸீக்கு ஆளாகின்றனர். ஒரு சிறிய காயம் அல்லது கீழே விழுதல் கூட வயதான பெண்கள் எலும்பு முறிவுகளுக்கு வழிவகுக்கும்.

இவை தவிர சி.பி.சி.தைராய்டு பரிசோதனை, ரத்தச் சர்க்கரை நோய் பரிசோதனைகள், கல்லீரல் பரிசோதனைகள், சிறுநீரகப் பரிசோதனைகள், ஈ.சி.ஜி.எக்கோ போன்ற சிறப்புப்பரிசோதனைகள் தேவைப்படும்.

நாம் புரிந்துகொள்ள வேண்டியது இதுதான்.. "வருமுன் காக்க" என்கிற பழமொழிக்கேற்ப ஆரம்பக் காலத்திலேயே நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளித்தால், அந்நோயைத் தடுத்து அதிலிருந்து மீள்வது எளிது.

**- டாக்டர்.கற்பகாம்பாள் சாய்ராம்,**

மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் & கருவுறுதல் நிபுணர்.

## ஆண்களை விட பெண்களுக்கு ஆயுள் அதிகம்...!

அமெரிக்க நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பின் தகவல்படி, உலகளவில் பெண்களுக்கு 5-7 ஆண்டுகள் ஆயுள் அதிகம் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு முக்கியக் காரணம், மரபணுக்கள்தாம்.

பாலின குரோமோசோம்களில் ஏற்படும் வித்தியாசமும் மற்றொரு காரணமாக அமைந்திருக்கிறது. ஆண்களின் செல்லில் ஒரே ஒரு எக்ஸ் குரோமோசோம் இருப்பதுதான் நோய்கள் அதிகரிக்கக் காரணம். பெண்களின் உடலில் இரண்டு எக்ஸ் குரோமோசோம்கள் உண்டு.

பெண்களுக்கு மெனோபாஸ் காலக் கட்டத்திற்குப்பிறகு இதய நோய்கள் வரும்.

ஆனால், ஆண்களுக்கு இதயநோய்கள் இளம் வயதிலேயே வருவதற்கு டெஸ்டோஸ்ட்ரோன் ஹார்மோனே காரணம். ஆண்களின் நோய் எதிர்ப்பு சக்தியும் (லிம்போசைட்ஸ்) பெண்களின் உடலைவிட வேகமாக முதிர்ச்சியடைந்து இறப்பதால் ஆண்களின் வாழ்நாள் பாதிக்கப்படுகிறது.

(நன்றி: தினத்தந்தி).

# அரஃபாவில் இறுதி நபியின்

# இறுதிப் பேருரை!

ஈஸா(அலை) மலைப்பிரசங்கத்தை கிறிஸ்தவர்கள் பெருமைப்படச் சொல்வார்கள். இறுதி நபி தன் இறுதி உரை என்பதை கூடியிருந்த 1,24,000 தோழர்களுக்கு மத்தியில் அல்கஸ்வா என்னும் ஒட்டகை மீது வீற்றிருந்த அரபாவில் மலை அடிவாரத்தில் உரையாற்றியதில் குறிப்பிட்டார்கள்.

நீர் கசிந்த கண்களோடு தன் அருமை தோழர்களை நோக்கி எனதருமைத் தோழர்களே! நான் இனி உங்களை சந்திக்கின்ற வாய்ப்பு கிடைக்காமல் போகலாம். ஆகவே நான் சொல்லும் வார்த்தைகளை மிக கவனமாக கேட்க வேண்டும். இந்த நாளை, இந்த மாதத்தை, இந்த காஃபாவை நீங்கள் மதிப்பதைப் போன்று ஒவ்வொரு முஸ்லிமின் மானத்தையும், மரியாதையையும், பொருளையும், இரத்தத்தையும் பாதுகாக்க வேண்டும். எவருடைய பொருள்களையும் அநியாயமாக அபகரிக்கக் கூடாது. யாருடைய தன்மானத்திற்கும் பங்கம் விளைவிக்கக் கூடாது. எவருடைய இரத்தத்தையும் நியாயமற்ற முறையில் அக்கிரமமாக பூமியில் சிந்தக் கூடாது. ஏனெனில் ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு சகோதரனாக இருக்கிறான்.



**ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்**
**குளச்சல்**

ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படுகின்ற வெற்றிகரமான நல்ல விசயங்களுக்காக நாம் யாவரும் ஆதரிப்பதும், சந்தோசப்படுவதும் நம் கடமை. பிறிதொரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படுகின்ற இன்னலான பிரச்சினைகளுக்காக பரிதாபப்படுவதோடு அதற்கு பரிகாரம் காண்பதும், அவனுக்காக இறைவனிடம் இறைஞ்சுவதும் நம்மீது கடமை. அஜமியும், அரபியும் இஸ்லாத்தை பொறுத்தமட்டில் ஒன்று.உயர்வு தாழ்வு மனிதனின் தக்வாவை வைத்தே என இறுதி நபி இறுதிப் பேருரையில் குறிப்பிட்டதோடு பெண்கள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதம் - அந்த அமானிதத்தை நீங்கள் பேணி வாழ வேண்டுமென ஆணினத்திற்கு இறுதிப் பேருரையில் கட்டளையிட்டார்கள்.

அடிமைகளை நன்றாக நடத்துங்கள். நீங்கள் உண்ணும் உணவையே அவர்களுக்கு உண்ணக் கொடுங்கள். ஆடையும் அதுபோன்றே

அணியக் கொடுங்கள். அவர்கள் குற்றம் செய்தால் மன்னியுங்கள். மன்னிக்க முடியாத குற்றங்களை அவர்கள் செய்தால் அவர்களை நீங்கள் மன்னியுங்கள். அவர்களை விலக்கி வையுங்கள். அவர்கள் இறையடியார்களாக இருப்பதால் கடுமையாக நடக்க வேண்டாம்.

அரபியர் அஜமியரை விட சிறந்தவரல்ல. ஒவ்வொரு முஸ்லிம் ஏனைய முஸ்லிமின் சகோதரர். நீங்கள் அனைவர்களும் சமமானவர்களே - நீங்கள் அனைவர்களும் ஒரே சகோதரத்துவத்தின் அங்கத்தினர்களே. அவர்களுடைய உரிமைகளை பறிக்காதீர். நான் ஆண்டவனுடைய கட்டளைகளை உங்களுக்கு தெரிவித்துவிட்டேன். அல்லாஹ்வே! நீ இதற்கு சாட்சி.

நான் உங்களிடம் இரு பொருட்களை விட்டு செல்கிறேன். அவ்விரண்டையும் நீங்கள் பின்பற்றுகிறது வரை தவறமாட்டீர்கள். ஒன்று குர்ஆன் இன்னொன்று என் நடைமுறை.

சிலை வணக்கம் செய்யாதீர்கள். ஒருவரை ஒருவர் கொலை செய்யாதீர்கள். நல்லெண்ணமும் ஜமாஅத் ஒற்றுமையும் பேணி வாழுங்கள் என உபதேசித்து விட்டு மக்களைப் பார்த்து இங்கு வந்திருப்போர் இங்கு வராதோருக்கு நான் இங்கே உபதேசித் தவற்றை எத்தி வையுங்கள். சில நேரம் கேட்பவரை விட கேட்பவர் மூலம் அறிவோர் உள்ளத்தில் அது பதியும் என்றார்கள்.

ஜனங்களே! உங்களுக்கு அல்லாஹ்வின் கட்டளையை நான் அறிவித்தேனா? என்று நியாயத்தீர்ப்பு நாளில் அல்லாஹ் உங்களிடம் கேட்டால் அதற்கு நீங்கள் என்ன மறுமொழி கூறுவீர்களென வினவ அங்கிருந்தோர் நீங்கள் அல்லாஹ்வின் செய்தியை எங்களுக்கு அறிவித்து விட்டீர்கள் என்று சான்று பகருவோம். இறைவனிடமென தோழர்கள் மறுமொழி சொன்னார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்), தோழர்கள் மறுமொழி கேட்டு வானத்தை நோக்கி தங்கள் கைகளை உயர்த்தி அல்லாஹ்வே! நீ இதற்கு சாட்சியாக இருப்பாயாக! என மூன்று தடவை சொன்னார்கள்.

நான் ஹஜ்ஜூக்கு சென்ற போது அரபாவை பேருந்தில் சுற்றி வந்தபோது கண்டகாட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. பெருமானார் இறுதி பேருரையாற்றிய பகுதியில் போடப்பட்டிருந்த சீரியல் விளக்குகள் இன்றும் மனக்கண் முன் தோற்றமளிக்கிறது.

பெருமானாரின் இறுதி ஹஜ்ஜில் 1,24000 தோழர்கள் பங்கு பெற்றதாக வரலாறு பறை சாற்றுகிறது. நாங்கள் அரபாவில் காலைத் தொழுகைக்குப் பின் காலை உணவு முடிந்து 10 மணியிலிருந்து ளுஹர் தொழுகை வரை சொற்பொழிவு ஏற்பாடு செய்து, எங்கள் டெண்ட் பக்கத்திலுள்ள டெண்டிலுள்ள தமிழ் ஹாஜிகளை கூட்டி, ஈரோடு தாவூதிய்ய மத்ரஸா பேராசிரியர். அல்தாப் ஹூஸைன் தாவூதி தலைமையில் சென்னை பள்ளி வாசல்களில் இமாமாக இருக்கும் ஹூஸைன் ஹஸ்ரத், அமானி ஹஸ்ரத் ஆகியோர் ஹஜ்ஜின் சிறப்பு, அம்மார், யாஸிர், சுமைய்யா போன்றோர் செய்த தியாக வாழ்க்கை, உஹ்தைய்யா நிகழ்வு போன்றவற்றை பேசினார்கள்.

நான் ஹஜ்ருல் அஸ்வத் கல்லை நாம் ஏன் முத்தமிடுகிறோம்? இது சம்பந்தமாக கலீபா உமர் (ரலி)க்கும் ஹஸ்ரத் அலி(ரலி)க்கும் ஏற்பட்ட உரையாடலைப் பற்றி விளக்கமாக பேசினேன்.

இதனை கேட்டபின் நண்பர்கள் என்னை மௌலானா என செல்லமாக அழைத்தனர். என் வாழ்க்கையில் அரபாவில் தமிழில் பேசும் வாய்ப்பு கிடைத்ததை பெரும் பேறாக கருதுகிறேன். அல்ஹம்துலில்லாஹ்!

அரபா மலைகளால் சூளப்பட்ட பூமி. ஆதி தந்தை ஆதமும் ஹவ்வாவும் உலகிற்கு வந்து அறிமுகமான இடமாகும். ஆகவே தான் சந்தித்த இடமென்ற பொருளில் அரபா என்ற பெயர் இப்பகுதிக்கு ஏற்பட்டது. அரபாவில் தங்குவது ஹஜ்ஜில் பர்லாகும்.

நாகர்கோவில் கலாச்சாரப்பள்ளி சார்பாக நபி தினவிழாவிலே கலந்து, நாகர்கோவில் ஸ்டேடியத்தில் முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன் பேசும்போது சொன்னார் உலகிலேயே ஒரு கொள்கையையை சொல்லி அதற்காக சொல்லடியும்,கல்லடியும் பட்டு அவர் சொன்ன கொள்கையை ஏற்ற 1,24,000 தோழர்களோடு அரபாவில் வந்து உரையாற்றிய வரலாற்று நாயகன் உலக சரித்திரத்திலே அது நபிகள் நாயகத்திற்கு தான் உண்டு என்று பேசினார். அது முற்றிலும் உண்மையாகும். வரும் காலங்களிலும் குடும்பத்தார், நாட்டார்களுக்கும் புனித ஹஜ் செய்யும் பாக்கியத்தை இறைவன் தந்தருளட்டும்!




# ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும் நூல் வெளியீடு - தாஃவா நிகழ்ச்சி

*வழக்கறிஞர்.பெ.சின்ன சாமி அவர்கள் 12/02/2023 அன்று கும்பகோனத்தில் நடபெற்ற "சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை" என்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றினார். அந்த நிகழ்ச்சியில் அவர் ஆற்றிய உரை எல்லோராலும் பாராட்டடப்பட்டது. கவனிக்கப்பட்டது.*

*அந்த உரையினை நூலாக கொண்டு வர வேண்டும் என்று பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க "வேர்கள் வெளியீட்டகம்" ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும் என்ற தலைப்பில் அந்த உரையை நூலாக கொண்டு வந்தது. இதன் நூல் வெளியீட்டு தாஃவா நிகழ்ச்சி 25/06/2023 அன்று தஞ்சாவூரில் நடந்தது.*

*கிராத் ஓதி ஆரம்பித்த முஹம்மது அஸதுல்லாஹ் ஜமாலி அவர்கள் திருக்குர்ஆனின் அத்தியாயம் "ஹூஜ்ராத்"-னுடைய திரு வசனங்களை ஓதி, இஸ்லாம் நடைமுறையில் கடைபிடிக்கும் சமத்துவம் குறித்த அறிமுகத்தோடு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.*

## விடுதலை வீரன்

*சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை நூல் அறிமுகம் செய்து, சிறப்புரையாற்றிய, ஆதித்தமிழர் விடுதலைக் கட்சி அமைப்பாளர். விடுதலை*




வீரன் அவர்கள், “தான் தஞ்சாவூரில் வசித்த போது அனுபவித்த சாதிக் கொடுமைகள் பற்றியும், அதன் காரணமாக மதுரைக்கு இடம் பெயர்ந்தது குறித்தும் உறுக்கமாக உரையாற்றினார்.

மேலும் பேசிய அவர், “இன்றைக்கு இருக்கும் தலைவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நடக்கும் அநீதிகளுக்கு எதிராக வீர வசனம் பேசுகிறார்களே தவிர, அதற்கான உண்மையான தீர்வுகளை பேச முன்வருவதில்லை. பெரியாரும், அம்பேத்கரும் “தீண்டாமைக்கு தீர்வு மதமாற்றம் தான். உன்னை சகோதரனாக ஏற்றுக் கொள்ளும் இஸ்லாம் மதத்திற்கு மதம் மாறுங்கள்” என்று சொன்னதைப் போல எந்த தலைவர்களும் சொல்வதில்லை.” என்று பேசினார்.



மேலும் அம்பேத்கர் புத்த மதம் தழுவியதைப் பற்றி பேசிய அவர், “இன்றைக்கு புத்த மதம், பார்ப்பனியர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டு, மகா யாஹம், கீழ் யாஹம் என்ற பெயரில் அது ஒரு பார்ப்பனிய மதமாக மாற்றப்பட்டு விட்டது. இந்து மதம் எல்லா மதங்களையும் செறிக்கக் கூடியதாக உள்ளது. ஆனால் இந்து மதத்தால் இஸ்லாத்தை, அதன் சமத்துவத்தை ஆட்கொள்ள முடியவில்லை.அதனால் தான் பார்ப்பனர்கள் இஸ்லாத்தை கண்டு பயப்படுகின்றார்கள். நாள்தோறும் இஸ்லாத்திற்கு எதிராக வெறுப்பு பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விடுகின்றனர்.” என்று பேசினார்.

தனது உரையின் இறுதியில், “மரக்கலத்தில் உணவருந்திய ஜக்கரிய்யா பாய் மக்கா சென்று உரையாற்றுகிறார். அவர் கலீமா சொல்லி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின் ஒரே நொடியில் தீண்டாமை மட்டும் ஒழியவில்லை. சாதியும் ஒழிந்து விட்டது. என்று கூறி இஸ்லாமிய மதத்திற்கு மாறினால் மட்டுமே சாதீய தீண்டாமையிலிருந்து விடுதலை கிடைக்கும். எனவே அனைவரும் இஸ்லாமிய மதத்திற்கு மாறுங்கள்.” என்று கூறி தனது உரையை முடித்தார்.

## மு.குலாம் முஹம்மது

அடுத்த தலைமையுரை ஆற்றிய, தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் தலைவர் மற்றும் வைகறை வெளிச்சம் மாத இதழின் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள், “சகோதரர் விடுதலை வீரன் அவர்கள் தீண்டாமை கொடுமைகளினால் பாதிக்கப்பட்டு தஞ்சையிலிருந்து, மதுரைக்கு சென்றதற்கு பதிலாக இஸ்லாத்திற்கு சென்றிருந்தால் அவர் முழுமையாக விடுதலை அடைந்திருப்பார்.” என்று கூறி தனது உரையை ஆரம்பித்தார்.

மேலும், “40 வருடங்களாக தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான தமது தாஃவா பணிகளின் அனுபவங்களில், 2000



வருடங்களாக போராடிய வரலாறு கொண்டவர்கள், 30 அல்லது 40 ஆண்டுகளுக்கு முன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு இனி அந்த போராட்டமெல்லாம் தேவையில்லை என்ற அடிப்படையில் கண்ணியமாக வாழ்ந்து கொண்டிருப்பதை நம் கண் முன்னே காண்கின்றோம்.”

“பெரியார் 1947ல் மார்ச் 18ல் “இன இழிவு நீங்க இஸ்லாம் ஒன்றே நன் மருந்து” என்ற தலைப்பில் உரையாற்றினார். அந்த உரையை கேட்ட திராவிட கழகத்தினர், “இப்படி நீங்கள் இஸ்லாத்திற்கு செல்லுங்கள் என்று பேசினால் உங்கள் தொண்டர்களே உங்களுக்கு எதிராக திரும்ப கூடும். உங்களை கஷ்டப்படுத்துவார்கள்” என்று சொல்கிறார்கள். ஆனால் அடுத்த நாள் உரையிலும் பெரியார், “இஸ்லாத்திற்கு செல்லுங்கள்” என்று பேசி விட்டு இறுதியில், “இவ்வளவு நேரம் கல்லெடுத்து எரியாமல், செறுப்ப தூக்கி வீசாமல் என் உரையை கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு நன்றி. அஸ்ஸலாமு அலைக்கும்! என்று கூறி தனது உரையை முடிக்கின்றார்.”

“பெரியாரின் இந்த நூல் உண்மையில் பெரியாரிஸ்டுகளால் பின்பற்றப்பட்டிருந்தால், இன்றைக்கு தாழ்த்தப்பட்டவர்கள் என்ற ஒரு இனமே இருந்திருக்காது.”

“இன்றைக்கு வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா நடந்து கொண்டிருக்கின்றது. அந்த வைக்கம் போராட்டத்தில் 52 பேர் இஸ்லாத்தை ஏற்றார்கள். அதே உரையில், அதாவது இன இழிவு நீங்கள் இஸ்லாம் ஒன்றே நன்மருந்து என்ற பெரியார் புத்தகத்தில் இன்னொன்றையும் சொல்கிறார், நான் அன்றைக்கு இஸ்லாத்திற்கு செல்லுங்கள் என்று சொன்னேன். 50 பேர் இஸ்லாத்தை ஏற்றார்கள். அதன் பின் ஒரு மாநாடு நடத்தி 3000 பேர் இஸ்லாத்தை தழுவினார்கள். அதன் பிற்கு ஒரு 700 பேர் இஸ்லாத்தை தழுவினார்கள் என்று. அதன் பிறகு பெரியார் தான் செல்லும் இடங்களிலெல்லாம் தீண்டாமைக்கு தீர்வாக வாழ்நாள் முழுவதும் இஸ்லாத்தை தான் சொன்னார். பேராசிரியர்.அ.மார்க்ஸ் அவர்கள் ஒரு புத்தகத்தின் மதிப்புரையில் இப்படி குறிப்பிட்டார், “பெரியார் தன்னுடைய வாழ்க்கையில் 300 முறை இஸ்லாத்திற்கு செல்லுங்கள் தீண்டாமையை ஒழியுங்கள் என்று சொன்னார்.” என்று பேசினார்.

மேலும், “தீண்டாமையை யாரோ வந்தெல்லாம் ஒழித்துவிட மாட்டார்கள். அதை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற நாம் தான் அதை ஒழிக்க வேண்டும். அதனால் என்ன வந்தாலும் பார்த்து கொள்ளலாம்.”

“டெல்லியில் ஆர்.எஸ்.ஆதில் என்றொரு வழக்கறிஞர் இருக்கின்றார். அவர் மீனாட்சிபுரம் மதமாற்றம் நடந்த காலக்கட்டத்தில், டெல்லியில் தனது 19 குடும்பத்தினருடன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன் அவர் ஒரு புத்த பிச்சுவாக இருந்தவர். அதுவும் புத்த பிச்சுக்களுக்கு



பயிற்சி அளிக்கக்கூடிய நிலையில் இருந்தவர். புத்த மதத்திலும் தீண்டாமை தொடர்கின்றது என்று அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்."

"காலமெல்லாம் இஸ்லாத்திற்கு செல்லுங்கள் என்று பேசிய அம்பேத்கர் கடைசியில் ஏன் புத்த மதத்தை தேர்ந்தெடுத்தார் என்பதை ஆய்வு செய்து நாம் ஒரு சிறு நூலை வெளியிட்டிருக்கின்றோம். வாசகர்கள் அதை வாங்கிப்படித்து தெரிந்து கொள்ளுங்கள்."(அம்பேத்கர் மதமாற்றம் பின்னணி என்ன?) என்று பேசினார்.

தொடர்ந்து பேசிய அவர், "நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு தீண்டாமையை ஒழிக்க காலம் தாழ்த்தும் போது, அந்த மக்களுக்கு நீங்கள் செய்யக்கூடிய சேவைகளுக்கான காலத்தை கடத்துகிறீர்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எனவே உங்களது அடுத்த தலைமுறையை, உங்கள் பிள்ளைகளை இதே தீண்டாமையில் விட்டுவிட்டு சென்று விடாதீர்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு முழுமையாக விடுதலையடையுங்கள்" என்று கூறி தனது உரையை முடித்தார்.

## வாழ்நாள் சாதனையாளர் ஹாஜி. முஹம்மது ஜக்கரிய்யா

அடுத்து பேசிய, சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து, புனித மக்கா மாநகரம் வரை நூலின் ஆசிரியர், ஹாஜி முஹம்மது ஜக்கரிய்யா பாய் அவர்கள், "இஸ்லாம்




தீண்டாமைக் கொடுமைகளிலிருந்து எப்படியெல்லாம் மக்களை விடுவிக்கின்றது என்பதையும், மரக்கலத்தில் உணவருந்திய தான் மக்கா சென்று உரையாற்றியது குறித்தும், இஸ்லாம் கூறும் பொதுவான நல்லொழுக் கங்கள் பற்றியும்" உரையாற்றினார்.

## நாத்தீகன்

வாழ்த்துரை வழங்கிய, ஆதித்தமிழர் பேரவையின் கௌரவத் தலைவர் நாத்தீகன் அவர்கள் பேசும் போது அம்பேத்கருக்கும், பெரியாருக்கும் நடந்த ஒரு உரையாடலை எடுத்து கூறினார். "ஒரு நாள் அம்பேத்கர் பெரியாரிடம், நான் தீண்டாமை





கொடுமைகளுக்கு எதிராக மதமாற்றத்தை தேர்வு செய்துள்ளேன். நான் மதமாறுவதாக இருந்தால் எந்த மதத்தை தேர்ந்தெடுக்கலாம் என்று கேட்டுள்ளார். அதற்கு பெரியார், உனக்கு பாதுகாப்பு வேண்டுமானால், உனக்கு சமத்துவம் வேண்டுமானால் இஸ்லாம் மதத்திற்கு செல் என்று, இஸ்லாம் மதத்தை தான் பரிந்துரைத்ததாக தனது உரையில் சுட்டிக்காட்டி பேசினார்.

## எல்.வி.ரங்கராஜ்

அடுத்து வாழ்த்துரை வழங்கிய, ஆதித்தமிழர் கட்சியின் மாவட்ட செயலாளர் எல்.வி.ரங்கராஜ் அவர்கள், “நாம் தலித்தாக இருக்கும் வரையில் நம்மை விட்டு தீண்டாமை ஒழியாது. மதமாற்றம் தான் நம்மை முழுமையாக விடுதலையாக்கும். நேற்று என் தந்தை போராடினார். நாளை என் பிள்ளை போராடுவான். ஆனால் தீர்வு என்ன? அதனால் தான் அம்பேத்கர் சொன்னார், நான் பிறக்கும் போது இந்துவாக பிறந்துவிட்டேன். ஆனால் சாகும் போது இந்துவாக சாகமாட்டேன் என்று. அதனால் நான் முடிவு செய்து விட்டேன். நான் இறக்கும் போது ஒரு இஸ்லாமியனாகத்தான் இறப்பேன். நீங்களும் இப்படி முடிவெடுங்கள். ஆகவே சிந்தித்து பாருங்கள் மதமாற்றம் தான் இதற்கான ஒரே தீர்வு என்று கூறி தனது உரையை முடித்தார்.




சகோதரர் ரங்கராஜ் அவர்கள் இந்த நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பே ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்களின் கரங்களை பற்றி கலீமா கூறி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். அல்ஹம்துலில்லாஹ். இப்போது அவரது பெயர் முஹம்மது சுல்தான்.

## வழக்கறிஞர் பெ. சின்ன சாமி

அடுத்து ஏற்புரை வழங்கிய ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும் நூலின் ஆசிரியர், வழக்கறிஞர் பெ.சின்னசாமி அவர்கள், “நமக்காக போராடிய இரு பெரும் தலைவர்கள் அம்பேத்கர் மற்றும் பெரியார் ஆகிய இருவருமே முன்வைத்த ஒரு தீர்வு மதமாற்றம். மதமாற்றம் என்றால் எந்த மதத்திற்கு செல்வது? “என்னுடைய நூலின் தலைப்பை போல ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும் - தீண்டாமை அல்ல இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் சாதி ஒழிந்து விடும். சாதி ஒழிந்து விட்டால் இந்து மதம் ஒழிந்து விடும். ஆகவே ஒரே நொடியில் சாதியையும், இந்து மதத்தையும் ஒழித்து விடும் இஸ்லாமிய மதத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.” என்று பேசினார்.

தொடர்ந்து பேசிய அவர்,

“வேங்கைவயலில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் குடிக்கும் தண்ணீர் தொட்டியில் மலம் கலந்த வன்கொடுமை சம்பவம் குறித்து நினைவூட்டி, அவர்களுக்கு எதிராக இப்படி ஒரு அசிங்கத்தை, அநீதியை செய்ய தூண்டியது எது என்ற கேள்வியை எழுப்பிவிட்டு, இந்து மதம் தான் அதற்கான அனுமதியை கொடுத்தது” என்று கூறிய போது, திரண்டிருந்த மக்கள் மிக உண்ணிப்பாக பெ.சின்னசாமி அவர்களின் உரையின் மீது கவனம் செலுத்தினர்.






தனது பேச்சைத் தொடர்ந்த அவர், “ஒரு தாழ்த்தப்பட்டவன் மீது என்ன வகையான உச்சபச்சமான அநீதியையும் இழைக்கலாம் என்ற ஒரு அனுமதியை அவனுக்கு இந்து மதம் அளித்துள்ளதை” பற்றி விளக்கி கூறினார்.




“இந்த நிகழ்வுக்கு எதிராக பேசிய அத்தனை தலைவர்களும் அதற்கான தீர்வை






சொல்லவில்லை. ஒருவேளை அந்த மலம் கலந்த தண்ணீரை நாம் குடித்திருந்தால் என்ன செய்திருப்போம்? என்று பார்வையாளர்களை பார்த்து கேட்ட சின்ன சாமி அவர்கள், “எனக்கு இப்படி ஒரு வன்முறையை ஆதரிக்கின்ற இந்த மதத்தை விட்டு வெளியேறியிருப்போம்.” என்று சொன்னவுடன் பார்வையாளர்கள் கைதட்டி அந்த கருத்தை ஆதரித்தனர்.



“பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து நம்மை மதம் மாற்றும் காரியம் ஒன்றும் இங்கு நடக்கவில்லை. நாம் சுயமாக, சிந்தித்து, சுதந்திரமாக இன்னொரு மதத்திற்கு மாறுவது, விடுதலையடைவது தான் மதமாற்றம். அதுதான் இங்கு நடக்கின்றது” என்று பேசினார்.






மேலும், தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், துணை செயலாளர், அப்துல் ரவூஃப் அவர்கள், ஆதித்தமிழர் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் இ.ரா.மாயன் அவர்கள், ஆதித்தமிழர் கட்சியின் சிவா(சிவா பிரிண்டர்ஸ்), திராவிட முன்னேற்ற கழகத்தின் ப.மு.மாவீரன் ஆகியவர்களும் வாழ்த்துரைகளை வழங்கினர்.

ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும் நூலை ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள் வெளியிட, இமாம். முஹம்மது அஸத்துல்லாஹ் ஜமாலி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை நூலை ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் வெளியிட, விடுதலை வீரன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

மேலும் நிகழ்ச்சியில் கீழ் தளம், மேல் தளம் நிரம்பும் அளவிற்கு சகோதர சமுதயாத்தை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும் எனும் வேர்கள் வெளியீட்டகத்தின் நூல் இலவசமாக வழங்கப்பட்டது. வேர்கள் வெளியீட்டகத்தின் மற்ற வெளியீடுகளையும் மக்கள் ஆர்வமுடன் வாங்கி சென்றனர். மேலும் நிகழ்ச்சியில் பங்குபெற்ற அனை வருக்கும் இரவு உணவும் வழங்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

- தஞ்சையிலிருந்து நமது நிருபர்











# 5 வக்திற்கும் மோதினாரா?

துருக்கி நாட்டில் எங்கே சென்றாலும் அங்குள்ள எல்லா பள்ளிவாசல்களிலும் சொல்லப்படக் கூடிய பாங்கின் இனிமையான ஓசை நிச்சயம் செவிக்கு விருந்தளிக்கும். இது சாதாரண விஷயம் என்று எண்ணி விடக் கூடாது.இவ்வளவு இனிமையாக துருக்கி மக்கள் பாங்கு சொல்வதற்கு 100 வருட கால பாரம்பரியம் உள்ளது.இதற்கென்றே தனி மத்ரஸாக்கள் உள்ளது .தனி ஆசிரியர்கள் உள்ளார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு அல்ஜஸீரா செய்தி நிறுவனம். "அல் அதான் (பாங்கு )- மக்களை சத்தியத்தை நோக்கி அழைக்கும் அழகிய குரல்கள்" என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சியை ஒளிபரப்பியது. அந்த நிகழ்ச்சியில் துருக்கியிர்கள் பாங்கு சொல்வதில் மிகுந்த கவனம் செலுத்துகின்றனர். அதெற்கென்றே பிரத்யேக இராகத்தை உருவாக்கியுள்ளனர், என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த நிகழ்ச்சியில் அல் உஸ்தாத் முஹம்மத் ஹாதி தவ்ரான் இஸ்தான்புலில் உள்ள "அஸ்ஸுல்தான் அஹ்மத்" என்ற மிகப்பெரிய மஸ்ஜிதின் முஅத்தின் (மோதினார்) கூறுகிறார்: உஸ்மானிய்யா பேரரசின் ஆட்சி காலத்தில் ஒவ்வொரு மஸ்ஜிதுகளிலும் ஐந்து முஅத்தின்கள் நியமிக்கப்படுவார்கள். இவ்வாறான முஅத்தின்கள் தங்களது குரல் வளத்திற்கு ஏற்ப தேர்வு செய்யப்படுவார்கள்.

ஏன்?

சராசரியாக ஒரு மனிதன் தனது வாழ்வில் ஐந்து வகையான படித்தரங்களை கடக்கிறான்.அதேபோல ஒரு நாளில் ஐந்து வகையான பொழுதுகளை அவன் கடக்கிறான். மனிதன் தினசரி கடக்கும் இந்த ஐந்து பொழுதுகளை நம் முன்னோர்கள் நன்கு புரிந்து வைத்தார்கள். ஐந்து நேரங்களில் மனிதனது உணர்வுகள் ஒவ்வொரு நேரங்களிலும் மாறுபடும்.

காலை ஃபஜ்ரு நேரத்தில் இருக்கிற உணர்வு லுஹர் நேரத்தில் வேறு மாதிரி இருக்கும். அதேபோல அஸர், மஃரிப், இஷா ஆகிய ஒவ்வொரு நேரத்திலும் மனித உணர்வுகள் வேறுபட்டு கொண்டே இருக்கும்.இசைக்கும் மனித உணர்வுகளுக்கும் மிக நெருக்கமான தொடர்புள்ளது. கருவிகள் மூலம் இசைக்கப்பட கூடிய இசையை விட மனிதனின் தொண்டையிலிருந்து வெளிபடும் ஓசை மிகவும் நுட்பமானது.

இதனால் நம் முன்னோர்கள் ஐந்து நேரங்களில் பாங்கு கூறுவதற்கு ஐந்து வகையான இராகங்களை உருவாக்கினர். இதற்கு ஸபா, அஷாக், ரஸ்த், ஸீகா, ஹிஜாஸ் என்று பெயரிட்டனர். ஐந்து வகை பாங்கின் இராகத்திற்கு ஏற்ப குரல் வளம் கொண்டவர் களை மட்டுமே அந்த அந்த நேரத்திற்கான தனித்தனி முஅத்தின்களாக நியமித்தனர்.

**ஸபா:** இது ஃபஜ்ரில் சொல்லப்படும் பாங்கின் இராகத்தின் பெயர். அதிகாலை பொழுதில் உள்ளம் இன்னும் சிறிது நேரம் உறங்கலாம் என்று கூறும் தருணத்தில் சொல்லப்படும் பாங்கு அவனை பள்ளிக்கு வரவழைக்கும் விதமாக அப்படியே செவிகளுக்கு இதமாக மிருதுவான இராகத்தோடு சொல்லப்படும்.

**அஷாக்:** இது லுஹர் நேரத்தில் சொல்லப்படும் பாங்கின் இராகத்தின் பெயர்.உச்சி பகல் நேரத்தில் மனிதன் தனது பணியில் தீவிரமாக ஈடுபடும் நேரம். இந்த நேரத்தில் அவனை பள்ளிக்கு வரவழைக்க சொல்லப்படும் பாங்கு உத்வேகம் கலந்த இராகத்தோடு சொல்லப் படும் .

**ரஸ்த்:** இது அஸர் நேரத்தில் சொல்லப்படும் பாங்கின் இராகத்தின் பெயர்.பரபரப்பான பகல் பொழுது புறப்பட ஆயத்தமாகும் போது சிறிய ஓய்வு மனிதனை வருடும்.இந்த பாங்கோசை அவனை பள்ளிக்கு வரவழைக்கும் விதமாக சிறிய பரபரப்போடும் அதேநேரத்தில் சிறிது ஏக்கமும் கலந்த இராகத்தோடு சொல்லப்படும்.

**ஸீகா:** இது மஃரிப் நேரத்தில் சொல்லப்படும் பாங்கின் இராகத்தின் பெயர்.இது பகல் பொழுது விடைபெற்று இரவு மெல்ல படரத் துவங்கும் நேரம். சோர்வும் உடல் முழுக்க



படரத் துவங்கும் நேரமும் இதுவே . இதனால் இந்த நேரத்தில் சொல்லப்படக் கூடிய இராகம் மனதினுள் ஊடுருவி சோர்வை மெதுவாக கலைத்து அவனை பள்ளிக்கு வரவழைக்கும் விதமாக இந்த இராகம் அமைந்திருக்கும்.

**ஹிஜாஸ்:** இது இஷா நேரத்தில் சொல்லப்படும் பாங்கின் இராகத்தின் பெயர்.ஒரு நாளுடைய முடிவு அடுத்த நாளுடைய உழைப்பிற்காக நீண்ட ஓய்வுக்கு தயாராகும் தருணம்.இந்த நேரம் என்பது அமைதியில் ஆழ்ந்து ஒரு மோன நிலைக்கு உள்ளம் செல்லும் நேரம்.எனவே

மயிலிறகை உடலில் மெல்ல வருடுவது போல உள்ளத்தை மெல்லிசையால் வருடி அவனை பள்ளிக்கு வரவழைக்கும் விதத்தில் இந்த இராகம் அமைந்திருக்கும்.

இது புத்தகங்களின் பதிவு செய்யப்பட்ட கலையோ கல்வியோ அல்ல. செவி வழியாக தலைமுறை தலைமுறையாக பயணிக்கும் கல்வி.இந்த பாரம்பரியத்தை பாதுகாக்க துருக்கி அரசே இதனை எடுத்து நடத்தி வருகிறது.

**தமிழில்:**

**மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**




# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

## ஆயுத குவியல்கள் வெடிபொருட்களை பற்றிய விசாரணை (2006 அவுரங்கபாத்)

ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய பல நிகழ்வுகளையும், அறிவுக்கு எட்டாத கற்பனை நிகழ்வுகளையும் உள்ளடக்கிய ஒரு கதையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது விசாரணை தரப்பு.

என்ன நடந்தது? யார் இவற்றை செய்தது? என்பதை யாருமே புரிந்து கொள்ளக் கூடாது என்ற நோக்கில் வேண்டுமென்றே குழப்பி இருக்கின்றனர். வழக்கை மேலும் குழப்புவதற்கு பொதுவாக முஸ்லிம்கள் பயன்படுத்தும் பெயர்களை பயன்படுத்தியுள்ளனர். விசாரணை அறிக்கையின் உள்ளே சென்று படிப்பவர்கள் ஒன்று குழம்ப வேண்டும் அல்லது தவறான முடிவுடன் வெளியே வர வேண்டும் என்ற அடிப்படையில் வேண்டுமென்றே வலையை பின்னி உள்ளதாக தெரிகிறது. இந்த வலைக்குள் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்கு நாம் விசாரணை தரப்பின் அறிக்கைகளை சிறு சிறு பகுதிகளாக பிரித்து ஆராய வேண்டும்.

**விசாரணை அறிக்கையின் முக்கியமான பகுதிகள்**

➢ வெருல் அவுரங்காபாத் சாலையில் குருநேஷ்வர் கோவில் அருகே டாட்டா சுமோ வண்டியை பின் தொடர்ந்து சென்று வழி மறித்தது மும்பை தீவிரவாத எதிர்ப்புப் படை. இந்த வண்டியினுள் ஆயுதங்கள் தோட்டாக்கள் வெடிபொருட்கள் உள்ளடக்கிய 10 அட்டைப் பெட்டிகள் இருந்தன.

➢ டாட்டா சுமோ (MH-14-X-4380) வண்டியை ஜபியுத்தின் என்கிற ஜபியும், அப்துல் அசிமும் வாடகைக்கு எடுத்திருந்தனர்.

➢ குற்றவாளி முஜாபர் டாட்டா இன்டிகா வண்டியை வாடகைக்கு எடுத்து அதை மாலேகானில் விட்டுசென்று விட்டான்.

➢ நம்பர் பிளேட் இல்லாத சில்வர் கலர் இண்டிகா வண்டி மாலேகான் சயான் சாலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

➢ குற்றவாளிகள் அப்சல்கான், நபி கான் ஆகியோர் அளித்த தகவலின் பேரில் மாலேகானில் உள்ள அப்துல்லாகனி என்பவரின் கடையிலிருந்து 5 அட்டைப்பெட்டிகள் கைப்பற்றப்பட்டன. இதில் ஆயுதங்கள், தோட்டாக்கள், வெடி பொருட்கள் இருந்தன.

➢ மாலேகான் மன்மத் சாலையில் அமைந்திருக்கும் அன்கை கிராமத்தின் பாலத்தின் கீழே இருந்து இரண்டு பெட்டிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் ஆயுதங்கள்,

தோட்டாக்கள், வெடிபொருட்கள், வெடி மருந்துகள் இருந்தன.

➢ விசாரணையின்போது காஷ்மீரைச் சேர்ந்த அஸ்லம் காஷ்மீரி தீட்டிய சதித் திட்டம் தெரியவந்தது. இவனுக்கு பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவனும் லஷ்கர் இ தொய்பா அமைப்பின் உறுப்பினரான ஜூனைத் உடன் தொடர்பு இருந்துள்ளது.

➢ இந்தியாவில் அவனைப் போன்ற சிந்தனை உடையவர்களை தொடர்பு கொண்டுள்ளான் அஸ்லம் காஷ்மீரி. பாலஸ் தீன், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் அநியாயங்கள், குஜராத்தில் நடந்த படுகொலைகள், இன்னும் இந்தியாவின் மற்ற பிற பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் அநியாயங்களை கூறி அவர்களை தூண்டியுள்ளான். அவர்களிடம் குண்டுகளை தயாரிக்க சொல்லி, பழி தீர்ப்பதற்காக ஜிகாத் நடத்த வேண்டும் என்று கூறியுள்ளான்.

➢ அஸ்லம் காஷ்மீரியின் பேச்சைக் கேட்டு அவன் கட்டுப்பாட்டிற்குள் அவுரங்காபாத்தை சேர்ந்த முகமது அமீர் வந்துள்ளான்.

➢ ஐபியுத்தின் என்கிற ஐபி, பீட் (மகாராஷ்டிரா) பகுதியை சேர்ந்த பயாஸ், அவுரங்காபாத்தை சேர்ந்த ஆக்கிப் இவர்களுடன் முகமது அமீர் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளான். அவர்களை போன்ற சிந்தனை உடையவர்களை ஒருங்கிணைத்து அவுரங்காபாத்,பீட், மஜல்கான் ஆகிய பகுதிகளில் ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். இந்தியாவிலும் இதர பகுதி களிலும் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் அநியாயங்களை விவாதித்துள்ளனர். அஸ்லம் காஷ்மீரின் விருப்பப்படி இந்துக் களுக்கு எதிராகவும் இந்தியாவிற்கு எதிராகவும் ஜிஹாதை நடத்த வேண்டும் என்று முடிவு செய்துள்ளனர்.

➢ அப்போதைய குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி. VHP தலைவர் பிரவீன் தொகாடியா போன்ற இந்து தலைவர்களை கொல்ல இக்குழு திட்டமிட்டது.

➢ 2005 ஏப்ரல், மே மாதத்தில் அவுரங்கா பாத்திற்கு அஸ்லம் காஷ்மீரி வந்துள்ளான். அவனுடைய பேச்சினால் தூண்டப்பட்டு ஆசாத் (பீட்), நிசாத் (மஜல்கான்), பஹத் (அவுரங்காபாத்) ஆகியோர் ஜிஹாத் செய்ய அவனுடன் காஷ்மீர் சென்றுள்ளனர்.

➢ இரண்டு மாதத்திற்கு பின் மீண்டும் அஸ்லம் காஷ்மீரி அவுரங்காபாத்திற்கு வந்து முகமது அமீரையும் அவனுடைய நண்பர் பிலாலையும் சூரத் வழியாக ஜம்முவிற்கு அழைத்துச் சென்றுள்ளான்.

➢ ஜம்முவில் உள்ள ஹோட்டல் ஹிந்துஸ்தான் பேலஸில் அவர்கள் தங்கியிருந்து பின்னர் சுரன் கோட் வழியாக ஹில்லாக் வந்தடைந்து இரண்டு போராளிகளை சந்தித்துள்ளனர். அமீரும்,பிலாலும் ஜிஹாதிற்கு தயாராக இருக்க வேண்டும் எனவும் ஏற்கனவே வந்திருந்த மூவரில் பகத் இராணுவ நடவடிக்கையில் இறந்து விட்டான் எனவும் அப்போராளிகள் தெரிவித்துள்ளனர்.

➢ ரூபாய் 35 ஆயிரத்தை முகமது அமீருக்கு வழங்கியுள்ளான் அஸ்லம் காஷ்மீரி. அமீரும் பிலாலும் அவுரங்கபாத்திற்கு திரும்பியுள்ளனர்.

➢ ஐபி, பயாஸ் இருவரிடமும் பகத் கொல்லப்பட்டதை தெரிவிக்கின்றான் முகமது அமீர்.

➢ சில மாதங்களுக்கு பின் மீண்டும் அவுரங்காபாத்திற்கு வருகிறான் அஸ்லம் காஷ்மீரி. பீட் பகுதிக்கு வருமாறு அவனை அழைக்கிறான் பயாஸ். ஐபி, பயாஸ், ஆக்கிப் ஆகிய மூவரும் பஹதிற்கு என்ன நேர்ந்தது என்று அவனிடம் கேட்கின்றனர். இதுபற்றி ஜுனைத்திற்கு தெரியும் என்று அவன் கூறுகிறான். ஜுனைத் யார் என்று கேட்கும் போது ஜூனைத் பாகிஸ்தானை சேர்ந்தவன் என்றும் லஷ்கரே தொய்பாவிற்கு வேலை செய்பவன் என்றும் காஷ்மீரி கூறுகிறான்.

➢ அவன் லஷ்கரே தொய்பாவிற்கு வேலை செய்தவனா என்று காஷ்மீரியிடம் அவர்கள் மூவரும் கேட்கின்றனர். காஷ்மீர் அல்லது பங்களாதேஷிற்கு வந்து நீங்களே தெரிந்து கொள்ளுங்கள் என்று கஷ்மீரி அவர்களிடம் கூறுகிறான். அவர்கள் மறுத்துவிடவே, காத்மண்டுவிற்கு அவர்களை அழைக்கின்றான்.

➢ மூவரும் காத்மண்டுவிற்கு வந்து ஜூனைதை சந்திக்கின்றனர்.

➢ மூவரும் திரும்பி வந்தபின், ஜூனைத் ஒரு லஷ்கர் - இ - தொய்பா நபர் என்றும் அவனை தொடர்பு கொள்ள இன்டர் நெட் முகவரியைக் தனக்கு தந்ததாகவும் முகமது அமீரிடம் கூறுகிறான் பயாஸ். இன்டர்நெட் வழியை மட்டும் பயன்படுத்தி ஜூனைதை தொடர்பு

கொள் என அமீரிடம் கூறுகிறான் பயாஸ்.

➢ பிப்ரவரி 2006 இல் அமீர், ஆக்கிப், பயாஸ் ஆகியோர்களின் முன்னிலையில் பீட் பகுதியில் வைத்து வெடிகுண்டை தயாரித்தான் ஜபி.

➢ இந்த வெடிகுண்டை அகமதாபாத் ரயில் நிலையத்தில் வைத்தான் பயாஸ்.

➢ இந்த வெடிகுண்டு வெடித்ததனால் 67 பேர் உயிரிழந்தனர்.

➢ மார்ச்-ஏப்ரல் 2006இல் ஜூனைதை சந்திப்பதற்காக பங்களாதேஷ் செல்லுமாறு அமீரிடம் கூறுகின்றான் ஜபி. தனக்கு வேலை இருப்பதால் அமீர் செல்ல மறுக்கிறான். ஆனால் அப்ரோஸ் (மஜல் கான்), முஸ்தபா (அகமது நகர்) ஆகியோரை பங்களாதேஷிற்கு செல்ல சம்மதிக்க வைக்கின்றான்.

➢ அஷ்ரப், முஸ்தபா இருவரிடமும் பணத்தையும், ஒரு போன் நம்பரையும் கொடுத்து கல்கத்தாவிற்கு அனுப்பி வைக்கின்றான் ஜபி.

➢ நரேந்திர மோடியையும், பிரவீன் தொகாடியா வையும் கொல்வதற்கு பாகிஸ்தானிலிருந்து ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் ஜூனைத் அனுப்பிக் கொண்டிருந்தான் என்று அமீரிடம் தெரிவிக்கின்றான் ஜபி.

➢ பயிற்சி எடுப்பதற்காக ஈரான் வழியாக பாகிஸ்தான் சென்று கொண்டு இருக்கின்றேன் என்று அமீரிடம் தெரிவிக்கின்றான் பயாஸ். ஜூனைத் கூறிய படி, ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் பெறுவதற்கு 9 மே 2006 அன்று மும்பை வழியாக ஈரான் செல்ல வேண்டும் என்றும் கூறுகிறான்.

➢ மே 8 அன்று, முஜாபர் உடைய மொபைல் போனிலிருந்து (9890986742) அமீரிடம் பேசுகின்றான் ஜபி. பயாசின் ஈரான் பயணம் குறித்து விசாரிக்கின்றான். ஒரு சிம் கார்டை வாங்கிக்கொண்டு ஆக்கிஃப் உடன் பீட் பகுதிக்கு வருமாறு அமீரிடம் கூறுகின்றான்.

➢ தன்னுடைய உறவினரான முஜாபரிடம் ஒரு சிம் கார்டை வாங்கி கேட்கின்றான் அமீர். 9823775295 என்ற நம்பருடைய சிம்கார்டை அமீரிடம் கொடுக்கின்றான் முஜாபர்.

➢ மே 8 அன்று அமீர், ஆக்கிப் இருவரும் மாலை நேரத்தில் பீட் பகுதிக்கு வந்தடைகின்றனர். ஆயுதங்கள் வெடி பொருட்கள் விரைவில் நம்மை வந்தடையும் என்று ஜூனைத் மெசேஜ் அனுப்பி இருக்கின்றான் என்று மொபைல் போன் வழியாக அமீரிடம் தெரிவிக்கின்றான் ஜபி.

➢ 9 மே 2006 அன்று மும்பை வழியாக ஈரான் புறப்படுகிறான் பயாஸ்.

➢ மும்பை நாசிக் ரோட்டில் உள்ள பிம்பல்கான் பகுதிக்கு அருகே உள்ள இடத்தில் ஐசர் (EICHER CANTER) டெம்போவின் மூலமாக ஆயுதங்களும் வெடிப் பொருட்களும் வந்து சேருகின்றன.

➢ மேலே கூறப்பட்ட விவரங்கள் நம்மை குழப்பமடைய செய்யும். எனவே இதனை கவனமாக ஆராய்வோம். விசாரணை தரப்பு கூறிய மொத்த கதையையும் இரண்டு பகுதி களாக பிரிக்கலாம்.

## காவல்துறையின் நடவடிக்கை

டாட்டாசுமோ வண்டியை வழிமறித்த தீவிரவாத எதிர்ப்பு படையின் நடவடிக்கையை சில காவல்துறை அதிகாரிகளின் வாய்மொழி வாக்குமூலங்கள், சில சாட்சியங்கள் அதாவது டாட்டா சுமோ வண்டியின் உரிமையாளர் மற்றுமொரு நபர், மேலும் இந்நிகழ்வோடு தொடர்புடைய சம்பவங்கள், கைப்பற்றப்பட்ட பொருட்கள் இவற்றைக் கொண்டு நிரூபணம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

## குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலங்கள்

மேற்கூறிய இரண்டு பகுதிகளிலும் காவல்துறையின் நடவடிக்கையான வண்டியை வழி மறித்து மடக்கியது தான் முக்கியமான பகுதியாகும். மொத்த வழக்கும் இதனை அடிப்படையாக வைத்தே அமைந்துள்ளது. வரிசை எண் 1லிருந்து 6 வரை கூறப்பட்ட விவரங்கள் இப்பகுதியோடு தொடர் புடையவை. இதில் எவ்வளவு உண்மை இருக்கின்றது என்பதை நாம் பார்க்கலாம்.

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002